நெடும்பஸ்தரைக் குத்திக் கொலை செய்தவருக்கு சாவுத் தண்டனை
பக். 03

விலை ரூபா 20

பக்கங்கள் 28

# உதயன்

34°c - 26°c

தெளிவான வானிலை

சுடர் 31 கதிர் 127 வள்ளுவர் ஆண்டு 2047 பங்குனி 19, வெள்ளிக்கிழமை 01.04.2016


# தள்ளாடியில் மீண்டும் சோதனை

மன்னார், ஏப். 1

மன்னார், தள்ளாடி இராணுவ முகாமுக்கு முன்னால் நேற்று மீண்டும் சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டுப் பொதுமக்கள் பொலிஸாரால் தீவிர சோதனைக்கு உட்படுத்தப்பட்டனர். வாகனங்களும் சோதனையிடப்பட்டன.

யாழ். சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஏ-32 பாதையில் உள்ள மறவன்புலோ பிரதேச வீடொன்றிலிருந்து தற்கொலை அங்கி மீட்கப்பட்டமை மற்றும் மன்னார், இலுப்பைக் கடவை கமநல சேவைகள் நிலையத்துக்குச் சொந்தமான காணியின் பின் பகுதியில் இருந்து நேற்றுமுன்தினம் மாலை ஒரு தொகுதி வெடி பொருள்கள் பக். 23



## மறவன்புலோவில் கைதானவர் கொழும்புக்கு

யாழ்ப்பாணம், ஏப். 1

சாவகச்சேரி மறவன்புலோவில் வீட்டிலிருந்து மீட்கப்பட்ட வெடி பொருள்களை வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட சந்தேக நபர், பயங்கரவாதப் பிரிவினரால் நேற்றுக் கொழும்புக்குக் கொண்டு செல்லப்பட்டார்.

அத்துடன், மீட்கப்பட்ட வெடி பொருள்களை விசேட அதிரடிப் படையின் குண்டு ...ள் செய பக். 23

முச்சந்தி முரளி



நொண்டிக் குதிரைக்கு சறுக்கினது சாட்டு பாருங்கோ...

# விகாரை அமைப்பதை யாரும் தடுக்கமுடியாது

## தனிப்பட்ட இடத்தில் ஒருவர் அதனை அமைக்கலாம் என்கிறார் வடக்கு ஆளுநர்



- வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்ட சிங்கள - முஸ்லிம் மக்கள் குடியமர்த்தப்படவேண்டும்.
- தனிப்பட்ட இடத்தில் விகாரை, கோயில் அமைக்கலாம்.
- புத்தர் சிலை விவகாரத்தில் ஊடகங்கள் பொய்ப் பரப்புரை.
- வடக்கில் ஜனாதிபதி பிரபலமடைவதால் அங்குள்ள அடிப்படைவாதிகள் எதிர்க்கின்றனர்.
- வடக்கில் தேசிய பாதுகாப்புக்குக் குந்தகமில்லை.
- தவறைத் திருத்திக் கொள்வதற்குச் சந்தர்ப்பம்.

கொழும்பு, ஏப்ரல் 1

வடக்கில் ஜனாதிபதி பிரபலமடைந்து வருகின்றார். இதனை அங்குள்ள அடிப்படைவாதிகள் பொறுத்துக் கொள்ளமாட்டார்கள். சாவகச்சேரியில் வெடிகுண்டுகள் மீட்கப்பட்ட சம்பவத்துக்கும் இவர்களுக்கும் தொடர்பிருக்கலாம் என்று தெரிவித்துள்ள வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரே, தனிப்பட்ட இடத்தில் ஒருவர் தாம் விரும்பியவாறு விகாரை, கோயில் அமைப்பதை எவராலும் தடுக்கமுடியாது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

பத்தரமுல்லையிலுள்ள வடக்கு மாகாண ஆளுநரது உத்தியோக பூர்வ இல்லத்தில் நேற்று இடம்பெற்ற விசேட செய்தியாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இதன்போது ஆளுநர் ரெஜினோல்ட்கூரேமேலும் தெரிவித்ததாவது:- பக். 23

## காணாமற்போனோர் குறித்து பதில் கூறவேண்டும் ஈ.பி.டி.பி.

ஆணைக்குழுவின் தலைவர் பரணகம தெரிவிப்பு

வவுனியா, ஏப். 1

வடக்கில் கடந்த காலத்தில் இடம்பெற்ற போரின்போதும், அதற்கு முன்னரும் காணாமற்போனவர்கள் தொடர்பில் ஈ.பி.டி.பியின் ...க்ளஸ் தேவானந்தா உட்பட ...ளொட், ஈ.பி.ஆர்.எல்.எப் அமைப்...ளைச் சேர்ந்தவர்களும் பதில் சொல்ல வேண்டியவர்களாக வுள்ளனர்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் காணாமற்போனோர். தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக் குழுவின் தலைவர் மக்ஸ்வெல் பக். 25

## நாடு முழுவதும் பொலிஸ் பதிவு

பாதுகாப்புக் காரணங்களுக்காக முன்னெடுக்கப்படுவதாக அறிவிப்பு

வவுனியா, ஏப். 1

நாட்டின் பாதுகாப்புக் காரணங்களுக்காகச் சகல வீடுகளிலும் வர்த்தக நிலையங்களிலும் பொலிஸாரால் பதிவுகள் மேற்கொள்ளப்படவுள்ளன. பக். 25

## சாவகச்சேரி வெடிபொருள்; நாடாளுமன்றில் விளக்கம்

கொழும்பு, ஏப். 1

சாவகச்சேரியிலிருந்து வெடி பொருள்கள் மீட்கப்பட்டமை தொடர்பில் நாடாளுமன்றத்தில் சிறப்புரை ஆற்றவுள்ளதாகப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பக். 25

## ஊவா வெல்லச பல்கலையில் தமிழ் மாணவர் மீது தாக்குதல்

அரசியல் பின்புலத்துடன் பெரும்பான்மையின மாணவர் துணிச்சல்

யாழ்ப்பாணம், ஏப். 1

ஊவா வெல்லச பல்கலைக்கழகத்தில் பெரும்பான்மையின மாணவர்கள், தமிழ் மாணவர்கள் மீது நேற்றுமுன்தினமிரவு திட்டமிட்டு மோசமான தாக்குதலை மேற்கொண்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்தில் 7 மாணவர்கள் வரை படுகாயமடைந்து வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று பக். 25

## விசாரிக்கப்படுவார் பீரிஸ்

சாவகச்சேரியில் வெடிபொருள் மீட்கப்பட்டமை தொடர்பில்

கொழும்பு, ஏப்.1

வெள்ளவத்தைக்குக் கொண்டு வரப்படவிருந்த வெடிபொருள்களே சாவகச்சேரியில் கைப்பற்றப்பட்டதாக ஜி.எல்.பீரிஸ் வெளியிட்டுள்ள கருத்துத் தொடர்பில், இந்தச் சம்பவம் குறித்து அவரிடம் விசாரணை நடத்தப்படும் என்று பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

அத்துடன் இந்தச் சம்பவம் தொடர்பில் பக். 25

## இலங்கை இன்னும் முன்னேற இடமுண்டு

அமெரிக்கா கருத்து

வொசிங்டன், ஏப். 1

இலங்கை இன்னமும் பல்வேறு விடயங்களில் தனது முன்னேற்றத்தைக் காண்பிக்கவேண்டிய தேவை இருப்பதாக, அமெரிக்கா பக். 23



## சாதாரண தரப் பெறுபேறுகளில் யாழ்.மாவட்டம் 21 ஆம் இடம்

வடக்கு-கிழக்கு கல்வியில் பின்தள்ளப்படுவதாக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் கவலை

கொழும்பு, ஏப். 1

தற்போது வெளியாகியுள்ள 2015 ஆம் ஆண்டுக்கான ஜீ.சி.ஈ. சாதாரண தரப் பரீட்சை முடிவுகளின் படி வடக்கு - கிழக்கில் உள்ள மாவட்டங்கள் கடைசி இடங்களைப் பிடித்துள்ளன. இதில் யாழ். மாவட்டம் 21 ஆவது இடத்துக்குப் பின்தங்கியுள்ளது.

இது, இதுவரை நிகழாத துர்ப்பாக்கியம் என்று இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் கவலை வெளியிட்டுள்ளது.

இதுதொடர்பில் இலங்கைத் தமிழர் பக். 25



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# உமிகளால் மறைத்துக் கடத்தப்பட்ட முதிரைகளை மீட்டனர் பொலிஸார்



யாழ்ப்பாணம், ஏப்.1

நெல்லுமூடைகளை ஏற்றிச் செல்வதாகப் பாசாங்கு செய்து உமி மூடைகளை அடுக்கி அதற்குள் முதிரை மரக்குற்றிகளை ஏற்றிச் சென்ற வாகனம் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது. இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

கிளிநொச்சிப் பகுதியில் இருந்து இந்த மரக்குற்றிகள் சட்ட விரோதமான முறையில் எடுத்துச் செல்லப்பட்டுள்ளன என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

கைதடி - மானிப்பாய் வீதியூடாக அவற்றைக் கடத்திச் சென்ற குறித்த பாரவூர்தியை உடுவில் பகுதியில் மறித்துச் சோதனையிட்ட போது, தாம் நெல் மூடைகளை ஏற்றிச் செல்கின்றோம் என்று வாகனத்தில் இருந்தவர்கள் கூறினர்.

பொலிஸார் மூடைகளைத் துளையிட்டுப் பார்த்த போது ஏற்றி வந்தமை உமி என்றும், அதன் கீழ் முதிரை மரக்குற்றிகள் அடுக்கி மறைக்கப்பட்டிருந்ததும் கண்டுபிடிக்கப்பட்டது. அதனையடுத்துச் சந்தேக நபர்கள் இருவரும் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். கைதானவர்கள் கட்டப்பிராய் பகுதியைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு கடத்தப்பட்ட குறித்த 78 குற்றிகளினதும் பெறுமதி 5 இலட்சத்துக்கும் அதிகம் என கணக்கிடப்பட்டுள்ளது. கைப்பற்றப்பட்ட முதிரைக் குற்றிகள் மற்றும் சந்தேக நபர்களை மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

(ற-ஜ-4,107)

# ஹையேஸ் வாகனம் மோதியதில் வயம்ப பல்கலை. மாணவன் சாவு

முல்லைத்தீவு,ஏப்.1

உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியின் அரை இறுதிப் போட்டியை நண்பர்களுடன் இணைந்திருந்து தொலைக்காட்சியில் பார்த்துவிட்டு, உணவு வாங்க கடைக்குச் சென்ற வயம்ப பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் மன்னாரைச் சேர்ந்த தமிழ் மாணவன் கயஸ் வாகனத்தில் சிக் குண்டு சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று முன் தினம் இரவு குருநாகல் மாவடத்தில் மகாந்துறைப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

வயம்ப பல்கலைக்கழகத்தில் இறுதியாண்டில் கல்வி பயிலும் மன்னாரைச் சேர்ந்த மகிந்தன் (வயது-25) என்ற மாணவனே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

நேற்றுமுன்தினம் மாலை நடைபெற்ற உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியின் அரை இறுதிப் போட்டியை, நண்பர்களுடன் இணைந்திருந்து தொலைக்காட்சியில் பார்த்துவிட்டு, நண்பர்களுக்கும்சேர்த்துஇரவுஉணவைக் கட்டி வருவதற்காக குறித்த மாணவன் சைக்கிளில் கடைக்குச் சென்றுள்ளார்.

கடையில் உணவைப் பெற்று கொண்டுதிரும்புவதற்காகவீதிக்கு குறுக்கே சென்றவேளை, அதிவேகமாக எதிரே வந்த கயஸ் வாகனத்துடன் மோதுண்டுள்ளார். இந்த நிலையில் தலை சிதறி அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

உடனடியாக சம்பவ இடத்துக்கு வருகை தந்த பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டதுடன், உடற்கூற்றுப் பரிசோதனைக்காக குளியாப்பிட்டி மருத்துவமனைக்கு சடலத்தைக் கொண்டு சென்றனர்.

இதே மாணவன் பல்கலைக் கழகத்தில் முதலாம் வருடத்தில் கற்கும்போது வேறு நண்பர்களுடன் வாகனத்தில் தனிப்பட்ட வகையில் கொழும்பு சென்றி ருந்த வேளை, வாகனம் விபத்துக்குள்ளானதில் இவருடன் சென்ற 8 பேர் உயிரிழந்திருந்தனர் என்றும் இவர் மட்டும் படுகாயமடைந்து உயிர் பிழைத்திருந்தார் என்றும் அவரது சக நண்பர்கள் தெரிவித்தனர்.

(ற-ஜ-102,21)

# பனை மர சிலாகைகள் எடுத்து சென்றோர் கைது

புத்தூர்ப் பகுதியிலிருந்து வளலாய்ப் பகுதிக்கு அனுமதி பத்திரமின்றி பனை மரச் சிலாகைகளை எடுத்துச் சென்ற குற்றச்சாட்டில் இருவர் உழவு இயந்திரத்துடன் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று அச்சுவேலிப் பொலிஸார் தெரிவித்தனர்.

அச்சுவேலி நகரப்பகுதியில் நேற்று முன்தினம் வீதி ரோந்துக் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸார், இரவு நேரம் சந்தேகத்துக்கிடமான முறையில் வந்த உழவு இயந்திரத்தை மறித்துச் சோதனையிட்டனர். இதன்போது பனை மரச் சிலாகைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. வளலாய்ப் பகுதியில் மீள் குடியேறி உள்ள ஒருவருக்கு வீடுகட்டுவதற்குத் தேவையான பனைமரச் சிலாகைகளே அனுமதிபத்திரம் இன்றி எடுத்துச் செல்லப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ற-ஜ-4,107)

# தெற்கு மீனவர்களுக்கு வழங்கப்பட்ட அனுமதிகளை ரத்து செய்ய முடியாது

## கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களப் பணிப்பாளர் மீண்டும் திட்டவட்டம்

முல்லைத்தீவு,ஏப்.1

முல்லைத்தீவுமாவட்டத்தில்கடற்றொழிலாளர் சங்கங்களுக்குத் தெரியாது வழங்கப்பட்ட அனுமதிகளை ரத்துச் செய்ய முடியாது என கடற்றொழில் நீரியல் வளத்திணைக் களப் பணிப்பாளர் மீண்டும் மறுப்புத் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் மாவட்ட அரச அதிபர் தலைமையிலான குழுவினர், நேற்று ஜனாதிபதியின் செயலாளர் தலைமையிலான குழுவினரைச் சந்தித்து எடுத்துரைத்தனர்.

இதன்போதே கடற்றொழில் அமைச்சின் செயலாளர் மேற்படி பதிலைத் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்ட எல்லைப்பரப்பில் எல்லை தாண்டும் தென்னிலங்கை மீனவர்களால் மாவட்ட மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் , அத்து மீறிய வகையில் தென்னிலங்கையில் அனுமதிகளைப் பெற்று வந்து தங்கி நின்று தொழில் புரியும் தென்னிலங்கை மீனவர்கள், சட்ட விரோத மீன்பிடி முறையைப் பின்பற்றுவதனால் ஏற்படும் பெரும் பிரச்சினைகள் என்பன தொடர்பில் இதன்போது எடுத்துக் கூறப்பட்டன.

இதன்போது பதிலளித்த கடற்றொழில் அமைச்சின் செயலாளர் ஏற்கனவே அனுமதி வழங்கப்பட்டவர்களின் அனுமதிகளை ரத்துச்செய்ய முடியாது .ஆனால் அவர்கள் சட்ட விரோத முறையில் மீன்பிடியில் ஈடுபடுவதைத் தடை செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துள்ளார்.

இதன்போது மாவட்டத்தில் போர்க்காலத்துக்கு முன்பு 34 சிங்கள மீனவர்கள் மட்டுமே தொழில் புரிந்தனர். இவர்கள் மாவட்டத்தின் கடற்றொழில் அமைப்புக்களை நாடியபோது அவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டன. பின்னர் அத்தொகை 70 ஆக அதிகரிக்குமாறு கோரப்பட்டது. அதனையும் ஏற்றுக் கொண்டு அனுமதி வழங்கப்பட்டது. ஆனால் தற்போது மாவட்டக் கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களப் பணிப்பாளருக்கோ அல்லது மாவட்டத்தின் எந்தவொரு சங்கங்களுக்கோ தெரியாமல் நீரியல்வளத் திணைக்களப் பணிப்பாளர் 200 பேருக்கு அனுமதி வழங்கியுள்ளார் என்று இதன்போது சுட்டிக் காட்டப்பட்டது.

அங்கு பிரசன்னமாகியிருந்த முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாராநாயக்க குமாரதுங்க, போரால் முழுமையாக அழிவடைந்த முல்லைத்தீவு மாவட்ட மீனவர்களின் வாழ்வாதாரத்தைத் பாதிக்கும் நடவடிக்கை எவற்றையும் மேற்கொள்ள வேண்டாம். தென்னிலங்கை மீனவர்களே அங்கு போவதாக தொடர்ந்தும் குற்றச்சாட்டுகள் முன் வைக்கப்படுகின்றன. வட பகுதி மீனவர்கள் இவ்வாறு எல்லை தாண்டுகின்றனரா? எனவே அதனைத் தடுக்க உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தெரிவித்தார்.

அதற்குப் பதிலளித்த அமைச்சின் செயலாளர், முல்லைத்தீவு மாவட்டத்தில் கடற்றொழிலாளர் சங்கங்களுக்குத் தெரியாமல் வழங்கப்பட்ட அனுமதிகளை ரத்துச் செய்ய முடியாது என மீண்டும் மறுப்புத் தெரிவித்தார். இதற்குப் பதிலளித்த சந்திரிகா இது தொடர்பில் அமைச்சருடன் கலந்துரையாடுகின்றேன் என்று தெரிவித்தார்.

இதேவேளை நாளை சனிக்கிழமை முல்லைத்தீவு மாவட்டத்துக்கு கடற்றொழில் அமைச்சர் நேரில் வருவதால், இந்தச் சந்திப்பில் உரையாடி இவற்றுக்கு இறுதி முடிவு எட்டப்படும் எனவும் முடிவு செய்யப்பட்டது.

(ற-ஜ-101)

# இன்று மின்தடை

யாழ்ப்பாணம், ஏப்.1

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று வெள்ளிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரை மின்தடை ஏற்படும்.

யாழ்.பிரதேசம், கிளிநொச்சிப் பிரதேசத்தில் பாரதிபுரம், மலையாளபுரம், அம்பாள்குளம் ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில் குகன்நகர் கிராமம், மாமடுச் சந்தியிலிருந்து பதவியாவரை சி.இ.சி. கல்லுடைக்கும் ஆலை ஆகிய பிரதேசங்களிலும் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என வடமாகாண மின்வழங்கல் கட்டுப்பாட்டு நிலைய மின்பொறியியலாளர் தெரிவித்துள்ளார்.

(ற-ஜ-ரி)

# கிளைமோர்க் குண்டுகள் மீட்பு; அரசிலுள்ளோரின் சதித் திட்டம்

## சிவாஜிலிங்கம் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம்,ஏப்.1

சாவகச்சேரி – மறவன்புலோ பகுதியில் தற்கொலை அங்கி மற்றும் கிளைமோர்க் குண்டுகள் மீட்கப்பட்டமை அரசும், அரசின் கீழ் உள்ளவர்களின் சதி திட்டம் என வடமாகாண சபை உறுப்பினர் கே.சிவாஜிலிங்கம் நேற்று வியாழக் கிழமை குற்றஞ்சாட்டியுள்ளார்.

தந்தை செல்வாவின் 118ஆவது பிறந்த தினமான நேற்று வியாழக்கிழமை தந்தை செல்வா சதுக்கத்தில் வைத்து ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது–

அங்கு மீட்கப்பட்ட பொருள்கள் சிங்களப் பத்திரிகையால் பொதி செய்யப்பட்டுள்ளது. இதைத்தமிழ் மக்கள் மீது சுமத்தி, விடுதலைப் புலிகள் மீண்டெழுகின்றார்கள் எனக் குற்றம் சாட்டி தமிழ் மக்களைத் துன்புறுத்துவதற்கான நாடகம்.

எமது மக்கள் மீது இனவெறியைத் தூண்டும் நோக்கத்துடன், இனவெறிச் செயலாக செய்கின்றார்கள் என்றே பார்க்க முடிகின்றது– என்று தெரிவித்துள்ளார்.

(ற-ஜ-106)

# பல்கலை. போதனை சாரா ஊழியர் சங்கங்கள் நேற்று ஒருநாள் அடையாள வேலைநிறுத்தம்

நாடளாவிய ரீதியில் சகல பல்கலைக்கழகங்களினதும் போதனைசாரா ஊழியர் சங்கங்களின் ஒருநாள் அடையாள வேலைநிறுத்தம் நேற்று நடைபெற்றுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக இராமநாதன் மண்டபத்துக்கு முன்னால், மு.ப. 10 மணிக்கு அடையாள வேலைநிறுத்தத்தை போதனைசாரா உழியர்கள் இணைந்து முன்னெடுத்தனர்.

கடந்த மாதம் 24 ஆம் திகதி கொழும்பில் நடைபெற்ற கூட்டுக்குழுக் கூட்டத்தின் அடிப்படையில் ஏற்பாடு செய்யப்பட்ட இந்தப் போராட்டம் நேற்று நாடு பூராகவும் நடத்தப்பட்டது.

ஊழியர்களின் மாதாந்த இழப்பீட்டுப்படி மற்றும் நாளாந்தம் எதிர்நோக்கும் பிரச்சினைகள், சம்பள அதிகரிப்பின் போது அரசு கடைப்பிடிக்கும் பொறிமுறைகள், கொள்கைகள் என்பவற்றுக்கு மாறாக கல்விசார் ஊழியர்களின் கொடுப்பனவுகளை மட்டும் அதிகரித்தல், இதுதொடர்பாக இருதரப்பினரும் அரசின் கவனத்துக்குக் கொண்டு சென்றும் எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படாமை என்பவற்றை முன்னிறுத்தியே மேற்படி இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது என்று யாழ்.பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தினர் குறிப்பிட்டுள்ளனர்.

(ற-ஜ-ரி5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடும்பஸ்தரைக் குத்திக் கொலை செய்தவருக்கு சாவுத் தண்டனை

## யாழ்.மேல் நீதிமன்று நேற்றுத் தீர்ப்பு

யாழ்ப்பாணம், ஏப்.1

திருநெல்வேலியில் 2011 ஆம் ஆண்டு குடும்பஸ்தரைக் கத்தியால் குத்திக் கொலை செய்தவருக்கு யாழ்.மேல் நீதிமன்று நேற்றுச் சாவுத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்துள்ளது. யாழ்.மேல்நீதிமன்றில் நீதிபதி மா.இளஞ்செழியன் முன்னிலையில் இந்த வழக்குத் தீர்ப்புக்காக நேற்று எடுத்துக் கொள்ளப்பட்டது.

திருநெல்வேலியில் 2011 ஆம் ஆண்டு ஜனவரி 5 ஆம் திகதி கந்தசாமி இதயன் என்பவர் கத்தியால் குத்திக் கொலை செய்யப்பட்டார். அதற்கு முன்னர் அவரது மனைவி உயிர் துறந்துள்ளார். அதன் பின்னர் மனைவியின் சகோதரனான சதீஸ், இதயனைத் திட்டமிட்டுக் கத்தியால் குத்தியும் வெட்டியும் கொலை செய்துள்ளார்.

அதற்குப் போதுமான சாட்சியங்களும் வழக்குத் தொடுநரால் நீதிமன்றில் நிரூபிக்கப்பட்டன. எதிரி வீட்டிலிருந்து கத்தியைக் கொண்டு சென்று இதயனைக் கொலை செய்துள்ளார். அதற்குப் பயன்படுத்தப்பட்ட கத்தி, இரத்தக் கறைகள் கொண்ட அவரது ஆடைகள் என்பனவும் பொலிஸாரால் மீட்கப்பட்டுச் சாட்சிப் பொருள்களாகச் சமர்ப்பிக்கப்பட்டன.

குறித்த சான்றுப் பொருள்களை ஆதாரமாகக் கொண்டு குறித்த நபரை மேல் நீதிமன்று குற்றவாளியாகக் கண்டது. அந்தக் குற்றத்துக்காக அவருக்குச் சாவுத் தண்டனை விதிக்கப்பட வேண்டியுள்ளதால், ஏதாவது கூற விரும்புகிறீரா என்று நீதிபதி குற்றவாளியைப் பார்த்துக் கேட்டார்.

இதற்கு தனது தாய், சகோதரி உள்ளிட்டவர்களைப் பார்க்கவேண்டும் என்றும், தான் இதுவரை திருமணம் செய்யவில்லை என்றும், எனவே உயிர் வாழ ஆசைப்படுகிறேன் என்றும் கூறி, அதனால் தனக்குச் சாவுத் தண்டனை வழங்க வேண்டாம் என்றும் கேட்டுக்கொண்டார்.

சந்தேகநபர் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி மு.றெமீடியஸ்ஸும் அவருக்குத் தண்டனையைக் குறைக்குமாறு நீதிமன்றிடம் கோரினார். எனினும் சட்டப்படி தீர்ப்பு வழங்கப்படவேண்டும் என்று தெரிவித்த நீதிபதி, குறித்த நபருக்கு சாவுத் தண்டனை வழங்கப்பட வேண்டும் என்பது சட்ட ரீதியான கடமை.

எனினும் குறித்த குற்வாளிக்குச் சாவுத் தண்டனை நிறைவேற்றக் கூடாதென்றே ஜனாதிபதிக்கு அனுப்பும் அறிக்கையில் தான் மனிதாபிமான அடிப்படையில் வலியுறுத்துவேன் என நீதிபதி தெரிவித்தார்.

ஆனால் சட்டப்படி குறித்த குற்றத்துக்கு நீதிபதி என்ற அடிப்படையில் தனது தீர்ப்பை வழங்குவதாக நீதிபதி அறிவித்தார்.

அதன்படி திறந்த நீதிமன்றில் அனைவரும் எழுந்து மின்குமிழ்கள் அனைத்தும் அணைக்கப்பட்ட பின்னர், நீதிபதி தீர்ப்பை அறிவித்தார்.

குற்றவாளியான உமது கழுத்தில் சுருக்கிட்டு உடலிலிருந்து உயிர் பிரியும் வரை தூக்கில் தொங்கவிடப்படுவீர் என்று தீர்ப்பளித்தார்.

பின்னர் வழக்கேட்டில் கையெழுத்திட்டு பேனையை முறித்தார். அத்துடன் நீதிமன்று கலைந்தது.

(த-வ-4)




SUPER BALL
சுப்பர் போல்
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 481
சீட்டிழுப்பு திகதி 2016.03.31
வெற்றி இலக்கங்கள்
12 22 29 35 W
அடுத்த சனிக்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 49,782,860/=
தொ.பே. 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

# நீர்வேலியில் வீடு புகுந்த கும்பல் கண்மூடித்தனமாக வாள் வெட்டு

## ஆறு பேர் படுகாயம்

யாழ்ப்பாணம், ஏப். 1

நீர்வேலி தெற்கில் உள்ள வீடொன்றுக்குள் புகுந்த இளைஞர் குழுவொன்று மேற்கொண்ட கண்மூடித்தனமான வாள்வெட்டுத் தாக்குதலில் 6 பேர் படுகாயமடைந்தனர்.

இந்தத் தாக்குதலினால் பிரதேச மக்கள் பீதியில் உறைந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இரவு 9.30 மணியளவில் இடம்பெற்றது.

சுமார் 10 பேர் கொண்ட இளைஞர் குழு குறித்த பகுதியில் உள்ள வீடொன்றுக்குள் புகுந்து வீட்டு உரிமையாளரைப் பொல்லு மற்றும் வாள்களால் ஓட ஓடத் தாக்கியுள்ளது.

இதனைப் பார்த்த பக்கத்து வீட்டுக்காரர் உதவிக்குச் சென்றவேளை, அதில் தந்தையும் 2 மகன்மாரும் வாள் வெட்டுக்கு இலக்கானார்கள்.

வாள் வெட்டுக்கு இலக்காகிக் காயப்பட்டவர்கள் யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். இதில் இருவர் படுகாயமடைந்து ஆபத்தான நிலையில் உள்ளனர்.

பா.தயாளன், எஸ்.செல்வராசா, செ.ஜெயக்குமார், செ.சிவகுமார், எஸ். பெரியதம்பி, கே. குகா ஆகியோரே வாள்வெட்டுக்கு இலக்காகிச் சிகிச்சை பெற்று வருகின்றனர். வாள்வெட்டுக்கு இலக்கான பா.தயாளன் என்பவருடைய வீட்டிலேயே இந்தத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

அடாவடியில் ஈடுபட்ட குறித்த இளைஞர் குழுவினர் சம்பந்தப்பட்ட வீட்டு ஜன்னல் கண்ணாடிகளை உடைத்துச் சேதப்படுத்தியதுடன், வீட்டிலிருந்த மோட்டார் சைக்கிளையும் விட்டு வைக்காது தாக்கியுள்ளனர்.

சுமார் அரை மணிநேரத்துக்கு மேலாக இந்த இளைஞர் குழுவின் அட்டகாசம் இடம்பெற்றுள்ளது.

சம்பந்தப்பட்ட வீட்டு உரிமையாளரும் மற்றும் வாள் வெட்டில் காயப்பட்டவர்களும் இரவில் விழிப்புக் குழுவில் செயற்பட்டு வருகின்றார்கள்.

திருட்டுச் சம்பவங்களைத் தடுக்கும் விழிப்புக் குழுவில் இவர்கள் செயற்பட்ட காரணத்துக்காகவே இவர்கள் இவ்வாறு கண்மூடித்தனமாகத் தாக்கப்பட்டதாகப் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்தினர் தெரிவித்தனர்.

இரவுவேளை இடம்பெற்ற இந்த வாள்வெட்டுச் சம்பவத்தால், நீர்வேலி தெற்கில் மக்கள் பீதியுற்றுக் காணப்பட்டனர். இந்தச் சம்பவத்தை அடுத்து சம்பந்தப்பட்ட இடத்துக்கு விரைந்த கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். அத்துடன் தாக்குதலில் ஈடுபட்ட சிலரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீர்வேலி, கோப்பாய் பிரதேசங்களில் கடந்த சில நாள்களாகக் குற்றச் செயல்கள் அதிகரித்துக் காணப்படுகின்றன. திருட்டு மற்றும் வாள்வெட்டுச் சம்பவங்களால் மக்கள் பதற்றத்துடன் காணப்படுகின்றனர்.

(வ-17)

ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1250
சீட்டிழுப்பு திகதி 2016.03.31
வெற்றி இலக்கங்கள்
09 10 51 61 R
அடுத்த திங்கட்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 12,225,300/=
தொ.பே. 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

பாராட்டி வாழ்த்துகின்றோம்
திரு. அ. சிறிறஞ்சன் [சிறி மாஸ்ரர்]
எமது நிறுவனத்தில் இவரிடம் கற்ற
37 மாணவர்களும் சிங்கள பாடத்தில்
குறுகிய காலக் கற்பித்தலின் மூலம்
சித்தியடைந்தமைக்காக பாராட்டி
அவர் சேவை தரணியில்
தொடர வாழ்த்துகின்றோம்.



யாழ் ரெக்
கண்டி வீதி, சாவகச்சேரி



உ
சிவமயம்
திருக்கேதீச்சர ஆலயத்தின் மகிமையைப் பேணுவோம்

திருக்கேதீச்சர ஆலயத்துக்குரிய பசுக்களும் எருதுகளும் வதை செய்யப்பட்டதாகப் பத்திரிகைகளிலும் துண்டுப் பிரசுரங்களிலும் விஷமத்தனமான பொய்ப் பிரச்சாரங்கள் நடத்தப்படுவதுடன் "நிதி நெருக்கடி காரணமாக ஆலயத்தின் பசுக்கள் விற்பனை" என ஆலய நிர்வாகத்தின் பெயரில் ஒரு பொய்யான, அநாமதேய துண்டுப்பிரசும் வெளியிடப்பட்டு இருக்கின்றது

இவையெல்லாம் ஒரு புனிதத் தலத்தின் மகிமைக்கு மாசுபடுத்தும் செயல்கள். அவை மிகவும் வன்மையாகக் கண்டிக்க வேண்டியவையாகும். ஆலயத்தில் ஏதேனும் தவறு நடந்திருந்தது எனக் குற்றச்சாட்டுக் கிடைத்தால் ஆலய நிர்வாகத்தினர் உடனடியாக உரிய நடவடிக்கைகளை எடுத்து வருகின்றனர் என்பதை அறியத் தருகின்றோம்.

திருப்பணிச்சபை அங்கத்தவர்களால் தெரிந்தெடுக்கப்பட்ட நிர்வாகம் பொறுப்புடன் செயற்படுகின்றது. அவ்வாறு தொடர்ந்து செயற்படும் என்பதனைச் சகலருக்கும் உறுதிபடக் கூறிவைக்க விரும்புகின்றோம்.

மா.தவயோகராஜா
தலைவர் - அறங்காவலர் [illegible]

கந்தையா நீலகண்டன்
[illegible] திருப்பணிச் சபை.

திருக்கேதீச்சர ஆலயத்திருப்பணிச்சபை [illegible]-2016

அறிவித்தல்

பூநகரி வாடியடியில் பூநகரி ப.நோ. கூ. சங்கத்தினால் அமைக்கப்படவிருக்கும் எரிபொருள் நிலைய கட்டட வளாகம் நிரப்புவதற்கு கூடுதலான களித்தன்மையும் மாசுத்தன்மையும் இல்லாத இருவாட்டி மண் 300 உழவியந்திர சுமை தேவைப்படுவதால் உரிய மண்ணை வழங்க முடியுமானவர்கள் ஒரு உழவியந்திர சுமைக்கு எவ்வளவு எனக் குறிப்பிட்டு **மண் ஏற்றி இறக்குவதற்கு வதற்கான விண்ணப்பம்** என தபால் உறையில் குறிப்பிட்டு 08.04.2016 ஆம் திகதிக்கு முன் கிடைக்கக் கூடியவாறு **தலைவர், பூநகரி ப.நோ.கூ. சங்கம், வாடியடி, பூநகரி** எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**குறிப்பு: மண் ஏற்றுக்கூலி, வரிப்பணம் உட்பட சகல செலவுகளும் அடங்கலாக.**

**து. இரத்தினசிங்கம்**
**தலைவர்**
**பூநகரி ப.நோ. கூ. சங்கம்**
**வாடியடி, பூநகரி. 077 246 3027**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீட்டின் கதவை உடைத்து வெளிநாட்டுப் பணம் திருட்டு

வீட்டுஉரிமையாளர்கள் திருமண நிகழ்வு ஒன்றுக்குச் சென்றிருந்தபோது வீட்டு முன்கதவை உடைத்து உள்நுழைந்த திருடர்கள் வீட்டிலிருந்த 250 டொலர், ஆயிரத்து 500 ரூபா பணம் மற்றும் அரைப் பவுண் மோதிரம் என்பவற்றைத் திருடிச் சென்றுள்ளனர் என முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

வீட்டு உரிமையாளரால் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் இந்த முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

யாழ்.மானிப்பாய் வீதியில் உள்ள வீடு ஒன்றில் நேற்றுமுன்தினம் இந்தச் சம்பவம் இடம்பெற்றது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த வீட்டு உரிமையாளர் வவுனியாவிலுள்ள நண்பர் ஒருவரின் திருமண நிகழ்வுக்குத் தமது குடும்பத்தவர்களுடன் சென்றபோது திருட்டு இடம்பெற்றுள்ளது என்று கூறப்பட்டுள்ளது. தனது அயலில் உள்ள வீட்டுக்காரரிடம்,தமது நாய்க்கு உணவு வைக்குமாறு கூறி விட்டு ,மேற்படி வீட்டு உரிமையாளர் வவுனியா சென்றுள்ளார். அந்த அயல் வீட்டுக்காரர் நாய்க்குச் சாப்பாடு வைக்கச்சென்ற போது, முன்கதவு உடைக்கப்பட்டமை தெரிய வந்தது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருமண வீட்டிலிருந்து திரும்பி வந்து வீட்டைப் பார்த்த போது நகை,மற்றும் வெளிநாட்டுபணம் என்பவை திருடப்பட்டுள்ளமை தெரியவந்தது. வழக்கை பதிவு செய்துள்ள குற்றத்தடுப்பு பொலிஸார் விரிவான விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ற-ஜ-4,107)

**வாடகைத்தாய் தேவை**

கொழும்பிலுள்ள தம்பதியினர்க்கு IU.F ஊசிமூலம் செய்வதற்கு 30 வயதிற்குக் குறைவான பெண் வாடகைத்தாயாகத் தேவை

077 906 1406

**சமையலாளர் தேவை**

புத்தூர், நிலாவரையில் உள்ள சைவ உணவகத்துக்கு சமையலாளர் தேவை.

077 350 6499

**காணி விற்பனைக்கு உண்டு**

சாவகச்சேரி.கச்சாய் வீதியில் முக்கால் மைல் தூரத்தில் விநாயகர் சிலைக்கு முன் வீதியில் 30 யார் தொலைவில் 9 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. (60735)(2.16)

077 149 8506, 077 641 3739, 077 384 9328

**வேலை ஆள்கள் தேவை**

தனியார் நிறுவனம் ஒன்றுக்கு கணினிப் பதிவுகளை மேற்கொள்வதற்கு ஆள்கள் தேவை. (மானிப்பாய் பிரதேசத்திற்குட்பட்ட ஆண், பெண் இருபாலாரும் விரும்பத்தக்கது)

077 027 4890

**பெயர்மாற்றம்**

இல.39 மணிக்கூட்டு ஒழுங்கை, யாழ்ப்பாணம் எனும் முகவரியைச் சேர்ந்த **கோபிதாஸ்** ஆகிய நான் எனது பெயரினை இன்றிலிருந்து **கோபிகாந்** எனப் பெயர் மாற்றி சகல ஆவணங்களிலும் இவ்வாறே கையொப்பம் இடுவேன் என இத்தால் சகலருக்கும் அறியத்தருகின்றேன்.

(60785)(2.18.) **கோபிகாந்**

**தேவை**

யாழ் நகரில் உள்ள பார்மசிக்கு கணக்கு துறையில் முன் அனுபவமுள்ள

01. Accountant/ Accounts.. Clerk (ஆண்/ பெண்)
02. Manager/ Cashier (ஆண். 40 இற்கு மேல்) (முன் அனுபவம் விரும்பத்தக்கது)
03. வரவேற்பாளர் (Receptionist)

நேர்முகத் தேர்வு 03.04.2016 ஞாயிறு காலை 9 மணிக்கு

இடம்: **யாழ் பேபி நீட்ஸ் அன் பார்மசி 388,ஆஸ்பத்திரி வீதி,யாழ்ப்பாணம்.**

021 222 6069 (69186)(12.13.20)

# கஞ்சா பைக்கெற்றுடன் பெண் உட்பட இருவர் கைது

யாழ்ப்பாணம், ஏப்.1

பொதி செய்யப்பட்ட கஞ்சா வைத்திருந்த குற்றச்சாட்டில் கஞ்சாவுடன் பெண்ணொருவரும், குடும்பஸ்தரொருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பருத்தித்துறை பொலிஸார் தெரிவித்தனர். புலோலி தெற்கில் இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

இளவயதுப் பெண்ணும் 52 வயதுடைய குடும்பஸ்தருமே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலி ஸார் கூறினர். வீதி ரோந்துக்கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் சந்தேகத்துக்கிடமான முறையில் நின்றிருந்த ஒருவரை விசாரணை செய்ய முற்பட்ட போது, அவர் ஒருவித பொருளை எடுத்து அருகில் நின்ற யுவதியிடம் கொடுத்துள்ளார்.

அதனை வாங்கிச் சோதனையிட்டபோது ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான மூன்று சரைகளில் சுற்றப்பட்ட கஞ்சா மீட்கப்பட்டது என்றும்-அதனை வைத்திருந்த குற்றச்சாட்டில் இருவரும் கைது செய்யப்பட்டனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ற-ஜ-4,107)

## போதனாசிரியர் வெற்றிடத்துக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம்,ஏப்.1

இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையின் போதனாசிரியர் வெற்றிடத்துக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் சமையல் கலை வல்லுநர், வெதுப்பாளர், மின் மோட்டார் மீள் முறுக்குனர், நீர்க்குழாய் பொருத்துநர், அழகுக்கலை வல்லுநர், வானொலி மற்றும் தொலைக் காட்சிப்பெட்டி திருத்துநர், முன்பள்ளி ஆசிரியர், டீசல் வாகன இயந்திர திருத்துநர், மின்னியலாளர், அலுமினியப் பொருத்துநர், காச்சி இணைப்பவர் முதலான பயிற்சி நெறிகளில்பயிற்றப்பட்டவர்களிடம்இருந்தே விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

தகைமைஉடையவர்கள்சுயவிவரக்கோவையுடன் எதிர்வரும் திங்கட்கிழமை பிற் பகல் 1மணிக்கு வீரசிங்கம் மண்டபத்தில் அமைந்துள்ள இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையின் காரியாலயத்துக்கு சமுகமளிக்குமாறு இலங்கை தொழிற் பயிற்சி அதிகார சபையின் உதவிப் பணிப்பாளர் கு.நிரஞ்சன் அறிவித்துள்ளார். (ற-ஜ-ரி5)

## காரைநகர் இ.போ.ச. பஸ் சேவையில் நேர மாற்றம்

காரைநகர் சாலையின் பயணிகள் நலன் கருதி,இன்று முதலாம் திகதி தொடக்கம் யாழ்.மத்திய பஸ் நிலையத்திலிருந்து காரைநகர் சென்றடையும் 782 ஆம் இலக்க பாதையூடான இ.போ.ச பஸ் சேவைக்கான நேர மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்று காரைநகர் சாலை முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

அதிகாலை 5 மணிக்கு யாழில் இருந்து காரைநகர் நோக்கி இ.போ.ச பஸ் சேவை இடம்பெறவுள்ளது. கொழும்பு மத்திய பஸ் நிலையத்தில் இருந்து புத்தளம் பாதையூடாக யாழ்ப்பாணம் நோக்கி மாலை 6 மணிக்கு புறப்படுகின்ற காரைநகர் சாலைக்குரித்தான பஸ் இதுவரை காலமும், யாழ்ப்பாணத்தில் இருந்து காலை 6.20 மணிக்கு 782 வழித்தடத்தினூடாக காரைநகர் நோக்கி சேவையிலீடுபடுத்தப்பட்டு வந்தது. (ற-ஜ-ரி2)

**அருள்மிகு கண்ணகி அம்மன் ஆலயம்- குஞ்சுப் பரந்தன் - பொறிக்கடவை**

**பங்குனித் திங்கள் வேள்வி விழா - 2016**

**அம்பிகை மெய்யடியார்களே!**

நிகழும் மங்கலகரமான மன்மத வருடம் பங்குனித்திங்கள் 22 ஆம் நாள் 04.04.2016 திங்கட்கிழமை பகல், இரவு, மறுநாள் அதிகாலை வரை வழமை போல் வேள்விவிழா அதிசிறப்பாக நடைபெறும்.

**பொங்கல் விழா நிகழ்வுகள்:**

✓ அபிஷேகம், கொடியேற்றுதல் வைபவம், பூசைகள்
✓ மகேசுவர பூசை (அன்னதானம்)
✓ பகல், இரவு முழு நாளும் காவடி, பாற்செம்பு, கற்பூரச்சட்டி நேர்த்திகள், பறவைக் காவடி சிறப்பு நிகழ்ச்சிகள்.
✓ இரவு அம்பிகை திருவீதி உலா வருதல்
✓ பொங்கல், காவடி, தீமிதிப்பு
✓ அதிகாலை விசேட பூசை
✓ நீர்ச்சோறு வழங்கல்

✓ வேள்வி விழாவுக்குத் தேவையான பால், தயிர், இளநீர், கரும்பு, பூக்கள், பூமாலைகள் போன்றவற்றையும், அன்னதானத்துக்குத் தேவையான அரிசி, மரக்கறி வகைகள், தேங்காய், வாழையிலை போன்ற பொருள்களையும் ஆலயத்தில் கொடுத்து உதவுமாறு அன்பாக வேண்டுகின்றோம்.

✓ அடியார்கள் திங்கட்கிழமை, பகல், இரவு முழுநாளும் காவடி, பாற்செம்பு, கற்பூரச்சட்டி போன்ற நேர்த்திகள், அர்ச்சனைகள் செய்து கொள்ளலாம்.

✓ அன்னதானப் பொருள்கள், பூசைப்பொருள்கள், திருப்பணி நிதி போன்றவற்றை ஆலய அறங்காவலரிடம் மட்டும் கொடுத்துப் பற்றுச் சீட்டைப் பெற்றுக் கொள்ளவும். வேறு எவருக்கும் நிதி, பொருள்கள் சேகரிக்க அனுமதி வழங்கப்படவில்லை.

✓ அர்ச்சனைப் பொருள்கள் ஆலய வளர்ச்சி கருதி அறங்காவலர் அவையினரால் விற்பனை செய்யப்படும்.

✓ வணிக நிறுவனங்கள் (கடை) அமைப்பதற்கான ஏலம் 01.04.2016 வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணி முதல் மாலை 6 மணிவரை நடைபெறும்.

✓ பாதுகாப்பு ஏற்பாடுகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

✓ அனைத்து இடங்களில் இருந்தும் போக்குவரத்துச் சேவை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

**அடியார்கள் அனைவரும் வேள்வி தினத்தில் ஆலய தரிசனம் செய்து அம்பிகை அருள் பெற்று ஏகும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.**

**குஞ்சுப்பரந்தன்.** (64292)(6.16) **ஆலய அறங்காவலர் [illegible]**

**மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு வடமாகாணம்**

**பாடசாலை ஆசிரியர்களுக்கான மேசை மற்றும் கதிரைகளுக்கான கூறுவிலை கோரல்-2016**

தலைவர், அமைச்சு பெறுகைகள் குழு (MPC) மாகாண கல்வி அமைச்சு வடமாகாணம் பாடசாலை ஆசியர்களுக்கான மேசை மற்றும் கதிரைகளுக்கான கூறுவிலை கோரல்.

**Bid No- NP/03/03/PSDG/S.F/2016**

| தொ. இல. | பொருள் விவரம் | தேவையான தளபாடங்களின் எண்ணிக்கை | கேள்வி பிணைமுறி வைப்புத் தொகை ரூபா |
|---|---|---|---|
| 1. | ஆசிரியர் மேசை | 1200 | 100,000.00 |
| 2. | ஆசிரியர் கதிரை | 1200 | |

1. தகுதிவாய்ந்த மற்றும் இதில் நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர்கள் மேலதிக விவரங்களினையும் விலைக்கேள்விப் பத்திரங்களையும் அலுவலக நேரங்களில் கீழ்காட்டப்பட்ட முகவரியில் (தொ.பே.இல:021 205 4095) எமது அமைச்சில் இருந்து பெற்றுக்கொள்ளலாம்.

2. இதில் நாட்டமுள்ள விலைக் கேள்விதாரர்கள் வியாபாரப் பதிவுச்சான்றிதழ், கேள்விப்பத்திரத்தினை பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பக்கடிதம் என்பவற்றினை சமர்ப்பித்து ஒவ்வொரு விலைக்கேள்விபத்திரத்திற்கும் ரூபா 1000 மீளளிக்கப்படமுடியாத கேள்வி வைப்புப்பணத்தினை காசாக செலுத்தி அலுவலக நாள்களில் 04.04.2016 ஆம் திகதி தொடக்கம் 25.04.2016 ஆம் திகதிவரை அலுவலக நேரங்களில் (மு.ப09.00 தொடக்கம்- பி.ப3.00 வரை) எமது அமைச்சில் பெற்றுக்கொள்ளலாம்.

3. விலைக்கேள்விப்பத்திரங்கள் 26.04.2016 ஆம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு முன்பதாக இவ் அமைச்சில் பிரதம கணக்காளர் அறையில் பேணப்படும் பெறுகைகள் பெட்டியில் சேர்ப்பிக்கப்படல் வேண்டும். விலைக் கேள்விப்பத்திரங்கள் சமர்ப்பிப்பதற்கான நேரம் முடிவடைந்த உடனேயே விலைக் கேள்விதாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்..

திரு.இ.இரவீந்திரன்,
தலைவர் - பெறுகைக்குழு
மாகாண கல்வி அமைச்சு,
வடமாகாணம்
செம்மணி வீதி, நல்லூர்
யாழ்ப்பாணம்.

(சி.22413) (13.18)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சீனாவுடனான பாதுகாப்பு உறவுகள் இந்த ஆண்டில் வலுப்படுத்தப்படும்

## பாதுகாப்புச் செயலர் தெரிவிப்பு

கொழும்பு,ஏப்.1

சீனாவுடனான பாதுகாப்பு உறவுகள் இந்த ஆண்டில் மேலும் வலுப்படுத்தப்படும் என்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கருணாசேன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

சீன செய்திச் சேவைக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரை இலங்கை இராணுவம் முடிவுக்குக் கொண்டு வருவதற்கு சீனா உதவி செய்தது. இரண்டு நாடுகளுக்கும் இடையிலான பாதுகாப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்துவது தொடர்பாக இலங்கை அரசு கலந்துரையாடல்களைநடத்திவருகிறது.சீனாவுடன், மிகவும் வலுவான உறவை நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

ஏற்கனவே இராணுவத்தினருக்கு சீனா சில பயிற்சிநெறிகளை வழங்கி வருகிறது. இந்தத் துறையில், எமது உறவுகளை மேலும் விரிவாக்கலாம் என்று நம்புகிறோம், - என்று தெரிவித்துள்ளார். (ற-ஜ-5)

# கசிப்பு உற்பத்தி செய்த இருவருக்கு ஒரு வருட சிறை

சாவகச்சேரி,ஏப்.1

கசிப்பு உற்பத்தியாளர் இருவருக்கு சிறைத் தண்டனையும், வீடுகளில் அளவுக்கு அதிகமாக கள் வைத்திருந்த 19 பேருக்கு அபராதமும் நேற்றுமுன்தினம் சாவகச்சேரி நீதிமன்றில் விதிக்கப்பட்டது.

சாவகச்சேரி மதுவரித் திணைக்களத்தினர் போயா தினத்தன்று கொடிகாமம் கச்சாய் வீதியில் கசிப்பு விற்பனை செய்த பெண்ணொருவரையும், பெண்ணிடம் கால் போத்தல் கசிப்பு கொள்வனவு செய்த நபரொருவரையும் கைது செய்தனர்.

அத்துடன் கொடிகாமம் கண்டி வீதிப் பகுதியில் வீடொன்றைச் சுற்றி வளைத்துத் தேடுதல் நடத்திய போது கசிப்பு உற்பத்தி செய்த நிலையில் ஒருவரைப் பிடித்ததுடன், உற்பத்தி உபகரணங்களையும் கைப்பற்றியிருந்தனர்.

அத்துடன் போயா தினத்தன்று வீடுகளில் கூடுதலாக கள் வைத்திருந்த 21 பேரையும் கைது செய்திருந்தனர்.

இவர்களுக்கு எதிராகத்தாக்கல்செய்யப்பட்ட வழக்குகள் நேற்று முன்தினம் சாவகச்சேரி நீதி மன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டன.

கொடிகாமம் கச்சாய் வீதியில் கசிப்பு வைத்திருந்த பெண்ணின் வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது கொடிகாமம் பொலிஸாரால் பெண்ணுக்கு எதிராக நீதிமன்றில் முன்னரும் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டமை நீதிமன்றில் சுட்டிக் காட்டப்பட்டதையடுத்து, பெண்ணுக்கு ஒரு வருட சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. இவரிடம்கசிப்புக்கொள்வனவு செய்த நபருக்கு 15 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

கசிப்பு உற்பத்திக்குப் பயன்படுத்தும் உபகரணங்கள் வைத்திருந்த கொடிகாமம்,கண்டி வீதியைச் சேர்ந்த நபரின் வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது, அவரைக் கடுமையாக எச்சரிக்கை செய்த நீதிவான் ஐந்து வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட ஒரு வருட சிறைத் தண்டனை விதித்தார்.

மேலும் வீடுகளில் அளவுக்கு அதிகமாகக் கள் வைத்திருந்த 21 பேரின் வழக்குகள் விசாரணைக்கு எடுக்கப்பட்டன. இவர்களில் இருவர் வராததால் அவர்களுக்கு பிடியாணை பிறப்பிக்கப்பட்டது. ஏனைய 19 பேருக்கும் தலா 3 ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதிக்கப்பட்டது. (ற-ஜ-9)




ES Printers GiftZ

Poster / Notice
Lable / Wedding
Card / Bag Print /
Award / Frame Item /
Batch / Vehicle Brand /
T-Shirt / Cap
ID Card / Key Tag
Book Mark /
Pen Print /
Book Printing /
Woodent Print

உங்கள் உறவினர்களுக்கு
அன்பளிப்பு பொருள்களை
எம் இணையத்தளம் ஊடாக
அனுப்பி மகிழுங்கள்
www.esgiftz.com

சகல நிறுவனங்களுக்குமான பற்றுச்சீட்டு (Bill Book)
காபன் பிரதி மற்றும் காபன் பிரதி அற்ற, வர்ண மற்றும்
கறுப்பு வெள்ளை நிறத்தில், விரும்பிய அளவுகளில்
குறித்த நேரத்தில் குறைந்த விலையில் தரமாக செய்துதரப்படும்.

#357, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 492 7471 / 021 492 7472
esprintersjaffna@gmail.com

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/மந்துவில் ஸ்ரீ பாரதி
வித்தியாலயத்தில் - 2015
க.பொ.த. சாதாரண தரப்பரீட்சையில் 9A பெற்று
எமது பிரதேசத்திற்கு பெருமை தேடித்தந்த
செல்வி சாம்பவி இராஜகுலசிங்கம்
அவர்களையும் மற்றும்

| | |
|---|---|
| க.சகிலன் | - 7A B C |
| வீ.திவாஸ்கரன் | - 4A 4C |
| செ.சதீஸ்குமார் | - 3A 3B C S |
| இ.பிரவீனா | - 3A 3B 2C |
| இ.பிரவீன் | - 3A 2B 3C |

அனைவரையும் பாராட்டி
வாழ்த்துகின்றோம்
நிர்வாகிகள்
வள்ளுவன் சனசமூக நிலையம்
மந்துவில் வடக்கு, கொடிகாமம்.
(60789) (13.17.18)

## அறுபதாவது அகவையில் மணிவிழாக்காணும்



திருமதி ஜெயவாணி விவேகானந்தன்
இ.ஆ.சேவை தரம்: 1 (சங்கீத டிப்ளோமா)
அவர்களின் சேவைநலன் பாராட்டு
ஆசிரியசேவையில் ஒன்பது மூன்று வருடங்கள்
அரும்பணியாற்றி இசையால் வசமாக்கிய
எமது சங்கீத ஆசிரியர் அவர்களின்
சேவையைப் பாராட்டி மகிழ்வதோடு அவரும்
அவரது குடும்பத்தினரும் இறை ஆசிபெற்று
வாழ வாழ்த்துகின்றோம்.
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், கல்விசாரா ஊழியர்.
பாடசாலைச் சமூகம்
யா/இளையதம்பி இந்து வித்தியாலயம்
(70400) (13.18)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



ஸ்ரீ இரண்டாம் மொழி
கல்வி நிலைய
ஆசான் திரு. ஸ்ரீறஞ்சன் (ஸ்ரீமாஸ்டர்)
அவர்கள் க.பொ.த (சா.த 2015)
பரீட்சையில் சிங்கள
மொழியில் கல்வி கற்ற
நூற்றுக்கும்
மேற்பட்ட மாணவர்கள் அனைவரையும்
சித்தியடையச் செய்தமைக்கு பாராட்டு
தெரிவிப்பதோடு அவரது பணிகள்
மேன்மேலும் தொடர வாழ்த்துகின்றோம்.
அவரிடம் கல்வி கற்ற (70403) (13.18)
2015 க.பொ.த.சா. மாணவர்கள்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/மந்துவில் ஸ்ரீ பாரதி
வித்தியாலயத்தில் 2015ஆம் ஆண்டு
க.பொ.த.சாதாரண பரீட்சையில் 9A
பெற்று எமது பிரதேசத்துக்குப் பெருமை
தேடித்தந்த
செல்வி சாம்பவி
இராஜகுலசிங்கம்
அவர்களையும் மற்றும்

| | |
|---|---|
| க.சகிலன் | 7A B C |
| வீ.திவாஸ்கரன் | 4A 4C |
| செ.சதீஸ்குமார் | 3A 3B C S |
| இ.பிரவீனா | 3A 3B 2C |
| இ.பிரவீன் | 3A 2B 3C |

அனைவரையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.
முத்துமாரி அம்பாள்
மந்துவில் வடக்கு, கொடிகாமம். அறநெறிப் பாடசாலை.

## யாழ்ப்பாண நினைவுகள் தரும்
## யாழ்.இந்துவின் மைந்தனை வாழ்த்துகின்றோம்



யாழ்.இந்துக் கல்லூரி அன்னைக்கு
புகழ் சேர்த்து யாழ்ப்பாண
வாழ்வியலை அழகாக கட்டுரை
வடிவில் யாழ்ப்பாண நினைவுகள்
பாகம் 1,2,3 என நூல்களை
வெளியிட்டு வரும் எம் இனிய
நண்பன்
வேதநாயகம்
தபேந்திரனை
வாழ்த்துகின்றோம்.
யாழ்.நாச்சிமார் கோயிலடி அருகில்
உள்ள ஹம்சியா மஹால் - ராஜா
கிறீம் ஹவுஸ் மண்டபத்தில்
03.04.2016 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.34 மணிக்கு
எமது கல்லூரி பழைய மாணவர் சங்கத் தலைவர் மருத்துவர்
வை.யோகேஸ்வரன் தலைமையில் நடைபெற உள்ள நிகழ்வில்
பங்கேற்க இந்துவின் மைந்தர்களையும் இலக்கிய ஆர்வலர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.
யாழ்.இந்துவின் மாணவ நண்பர்கள்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/மந்துவில் ஸ்ரீ பாரதி வித்தி
யாலயத்தில் 2015 ஆம் ஆண்டு
க.பொ.த. சாதாரண பரீட்சையில்
9A பெற்றுச் சாதனைபடைத்த
செல்வி சாம்பவி இராஜகுலசிங்கம்
அவர்களையும் மற்றும்
க. சகீலன் 7ABC
வீ. திவாஸ்கரன் 4A 4C
செ. சதீஸ்குமார் 3A 3B C S
இ. பிரவீனா 3A 3B 2C
இ. பிரவீன் 3A 2B 3C
அனைவரையும் பாராட்டி
மேலும் பல சாதனைகள்
படைக்க வாழ்த்துகின்றோம்.
வள்ளுவன்
விளையாட்டுக் கழகம்
மந்துவில் வடக்கு, கொடிகாமம்.
(60786)(12.17)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீர்வேலி விழிப்புக்குழுவினர் மீது தாக்குதல் நடத்தியோர் கைதாவர்

## கோப்பாய் பொலிஸார் உறுதி; பாதுகாப்பு வழங்கவும் ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஏப்ரல் 1

நீர்வேலியில் விழிப்புக் குழுவினர் மீது தாக்குதல் நடத்திய குழுவினரை விரைவில் கைது செய்வதாகவும், நீர்வேலிக் கிராமத்துக்கு உரிய பாதுகாப்பை வழங்குவதாகவும் கோப்பாய் பொலிஸார் உறுதியளித்துள்ளதாக, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய இணைப்பாளர் த.கனகராஜ் தெரிவித்தார்.

நீர்வேலியில் விழிப்புக் குழுவினர் மீது, ஒரு குழுவினர் கடந்த செவ்வாய்க்கிழமை தாக்குதல் நடத்தியிருந்தனர். இந்தச் சம்பவத்தில் கோப்பாய் பொலிஸார், தாக்குதல் நடத்திய குழுவினர் மீது நடவடிக்கை எதுவும் எடுக்காமல் விழிப்புக் குழுவினர் மீது நடவடிக்கை எடுத்ததாகப் பொது மக்கள் குற்றம் சுமத்தியிருந்தனர்.

அத்துடன் இது தொடர்பில் கோப்பாய் பிரதேச செயலர், யாழ்.மாவட்ட அரச அதிபர், யாழ்.மேல் நீதிமன்றம் மற்றும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ்.பிராந்தியக் கிளையிலும் தெரியப்படுத்தியிருந்தனர்.

இதற்கமைய இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.பிராந்திய இணைப்பாளர் த.கனகராஜ் தலைமையிலான குழுவினர் கோப்பாய் பொலிஸ் நிலையத்துக்கு நேற்றுக் காலை நேரடியாகச் சென்றனர். அங்கு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியுடன் கலந்துரையாடல் நடத்தினர்.

இதன்போது, விழிப்புக் குழுவினர் மீது தாக்குதல் நடத்தியவர்களை உடனடியாகக் கைது செய்ய நடவடிக்கை எடுப்பதாகக் கோப்பாய் பொலிஸார் தெரிவித்துள்ளனர். அத்துடன், விழிப்புக் குழு நடவடிக்கையில் ஈடுபடுபவர்களுடன் 4 பொலிஸார் இணைந்து இரவு நேரப் பாதுகாப்புக் கடமையை மேற்கொள்வார்கள் என்றும் கோப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி உறுதி வழங்கியதாக, பிராந்திய இணைப்பாளர் த.கனகராஜ் குறிப்பிட்டார். (த-வ-5)

## சாவகச்சேரி வெடிபொருள் மீட்பு குறித்து பொலிஸாரே விசாரணை

### இராணுவம் கையாளாது என்று பாதுகாப்புச் செயலர் தெரிவிப்பு

சாவகச்சேரியில் வெடிபொருள்கள் கண்டுபிடிக்கப்பட்டமை தொடர்பாக, விசாரணைகளை இராணுவத்தினர் நடத்தமாட்டார்கள். பொலிஸாரே விசாரணைகளை மேற்கொள்வர் - இவ்வாறு பாதுகாப்புச் செயலர் கருணாசேன ஹெட்டியாரச்சி தெரிவித்தார்.

கொழும்பில் நடந்த செய்தியாளர் சந்திப்பில், எழுப்பப் பட்ட கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது–

தனியானதொரு சம்பவத்தைவைத்துக் கொண்டு தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என்று அரசினால் முடிவுக்கு வர முடியாது.

விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்ட பின்னர், கடந்த ஆறு ஆண்டுகளாகப் படையினரும், பொலிஸாரும் புலிகளின் ஆயுதங்களை மீட்டு வருகின்றனர்.

இந்த ஆயுதங்கள் தொடர்பாக பொலிஸாரே விசாரணைகளை மேற்கொள்வார்கள். சாவகச்சேரி விவகாரத்தை இராணுவம் கையாளாது. விசாரணைகளை பொலிஸ் துறையினரே கையாள்வார்கள். – என்றார். (ற-ஜ-5)


## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



சரஸ்வதி மயில்வாகனம்

தோற்றம் 10.09.1928 — மறைவு 24.03.2014

திதி: தேய்பிறைச் நசமி

ஆண்டுகள் இரண்டு ஆனதுவே
ஆறவில்லை எம் துயரம்
மீண்டும் ஒருமுறை வாராயோ...? பாரினிலே
எம் துயர் துடைக்க!
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

குடும்பத்தினர்.

கச்சாய் தெற்கு, கொடிகாமம்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அமரர் வேலுப்பிள்ளை ஜெயசீலன்

தோற்றம் : 03.07.1970
மறைவு : 04.03.2016

கடந்த 04.03.2016 இறைபதம் அடைந்த எமது குடும்பத்தலைவர் அமரர் வேலுப்பிள்ளை ஜெயசீலன் அவர்களின் வீட்டுக் கிருத்திய நிகழ்வுகள் (03.04.2016) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். தாங்கள் அனைவரும் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

"பழையகமம்"
முரசுமோட்டை, பரந்தன். (70344) (13.18) குடும்பத்தினர்.

## ஆண்டுகள் ஆறின் நினைவில்...



அமரர் தளையசிங்கம் நவரத்தினராசா
(ஓய்வுநிலை செயலாளர் - சாவகச்சேரி நகரசபை)

உதிப்பு 30.12.1932 — உதிர்வு 07.04.2010

திதி: பங்குனி அபரபக்க நவமி (01.04.2016)

இருள் அகற்றி எமக்கெல்லாம் ஒளிதந்து
பௌர்ணமியாய் நாம் புவிதனில் பிரகாசிக்க
ஆதாரமாய் இருந்த எமதருமைத் தந்தையே
ஆண்டுகள் ஆறு என்ன அறுபது கடந்திடினும்
எம் வாழ்வோடு கலந்து நிற்பீர் உயிராக

பெருங்குளம் மட்டுவில் வீதி,
சாவகச்சேரி. (சி.22290) (13.18) குடும்பத்தினர்.

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் சுப்பிரமணியம் விக்னேஸ்வரன்

மலர்வு 12.02.1950

உதிர்வு 16.03.2012

திதி: அபர பக்க நவமி

அன்பிலே சிறந்தவராய் மண்ணிலே உதித்து
அமைவுற்ற வாழ்விலே நறுமணம் பரப்பி
கைப்பிடித்த நாள் முதலாய் - என்னை
கண்ணியமாய் காத்து வந்தீரே
இல்லறத்தின் விருட்சமாய் பாசநிழல் தந்தையாய்
எம்மை கண்ணை இமை காப்பது போல் காத்தீரே
மாமா என்று மருமக்கள் அழைத்த போதெல்லாம்
புன்னகை புரிந்து நின்றீரே
பேரப்பிள்ளைகளை வாய் நிறைய அழைத்து
தாத்தா என்று அவர் சொல்லக் கேட்டு மகிழ்ந்தீரே
உறவுகள் வேண்டும் கருணை வடிவாய்
உரிமையாய் உணர்வை அன்பாய் பகிர்ந்தீரே

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கைதடி வடக்கு,
கைதடி. (70405) (13.18). குடும்பத்தினர்.

## 6ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 18 . 03 . 1937
இறப்பு 01 . 04 . 2010

திருமதி
மேரி யோசப்பின் பாக்கியநாதர்
(ஓய்வுபெற்ற ஆசிரியை)

"என்னில் விசுவாசம் கொள்பவர் இறப்பினும் வாழ்வார்"

பிரிவால் துயருறும்

கணவர் - அலெக்சாண்டர் பாக்கியநாதர்,
மகன்மார் - றெஜி, றொகான், றதீஸ்குமார்,
மருமகன்மார் - நிஜிதா, வதனி, தயாளினி,
பேரப்பிள்ளைகள் - மரியறியாங்கி, ஜெறோம், ஆன்செரன், ஆன்ஷிரோனி

கல்லூரி வீதி,மானிப்பாய். 077 635 9240

## 12ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
பண்டாரி வேலாயுதம்
(மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி, வேரற் கேணியடி)

அன்னை மடியில் 31.03.1923

அம்மன் மடியில் 12.04.2004

திதி: 01.04.2016

தலை நிமிர்ந்து வாழ வைத்த தந்தையே!
இந்த நாளில் தலை சாய்த்து வணங்குகிறோம்
ஆண்டுகள் பன்னிரண்டு ஆகிவிட்டதே அப்பா!
ஆனாலும் நீங்காத நினைவுகளை இதயத்தில் சுமந்து
நீர் ததும்பும் விழிகளுடன் நினைவு கூருகின்றோம்
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

என்றும் உங்கள் நினைவுகளுடன் வாழும்:
மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(69143) (13.18)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிதி போதாமையின் காரணமாக வாழ்வாதாரத் திட்டங்கள் முடக்கம்

## வடக்கு அமைச்சர் டெனீஸ்வரன் ஜப்பானியத் தூதுவரிடம் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஏப்.1
கிராமிய அபிவிருத்தி அமைச்சால் ஆரம்பிக்கப்பட்ட வாழ்வாதார அபிவிருத்தித் திட்டத்துக்கு 12 ஆயிரத்து 676 குடும்பங்கள் விண்ணப்பித்திருந்த நிலையில் கடந்த வருடம் 860 குடும்பங்கள் மாத்திரமே இந்தத் திட்டத்துக்குள் உள்வாங்கப்பட்டன. நிதி போதாமையால் 11ஆயிரத்து 816 குடும்பங்களுக்கான வாழ்வாதாரத் திட்டங்களை முன்னெடுக்க முடியாது போய்விட்டது. இவ்வாறு கிராமிய அபிவிருத்தி அமைச்சர் டெனீஸ்வரன் தெரிவித்தார்.

வட மாகாண கிராம அபிவிருத்தி அமைச்சர் பா.டெனிஸ்வரனுக்கும் ஜப்பானியத் தூதுவர் கெனிச்சி சுகனுமாவுக்குமிடையிலான விசேட சந்திப்பு ஒன்று கடந்த செவ்வாய்க்கிழமை மு.ப. 10.30 மணியளவில் கொழும்பு, ஜப்பானியத் தூதரகத்தில் நடைபெற்றது. அதன்போதே குறித்த தகவலை அமைச்சர் வெளிப்படுத்தியுள்ளார்.

இதுகுறித்து அவர் தெரிவித்துள்ளதாவது–

நடைபெற்று முடிந்த உள் நாட்டுப் போரில் பிள்ளைகளைப் பறி கொடுத்த குடும்பங்கள், புனர்வாழ்வு பெற்ற போராளிகள் குடும்பங்கள் மற்றும் தமிழ் அரசியல் கைதிகளின் குடும்பங்கள் எனப் பல்லாயிரக்கணக்கான குடும்பங்கள் வடக்கில் நாளாந்த வருமானம் இன்றிக் கஷ்டப்படுகின்றனர்.

அதனைக் கருத்தில் கொண்டு அவர்களது வாழ்வாதாரத்தை ஊக்குவித்து நிலையான அபிவிருத்திக்குள் இட்டுச் செல்லவேண்டும் என்ற நோக்கோடு குறித்த திட்டத்தை ஆரம்பித்து எனது கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் ஊடாக நடைமுறைப்படுத்துகின்றேன்.

> "நடைபெற்று முடிந்த உள் நாட்டு போரில் பிள்ளைகளைப் பறி கொடுத்த குடும்பங்கள், புனர்வாழ்வு பெற்ற போராளிகள் குடும்பங்கள் மற்றும் தமிழ் அரசியல் கைதிகளின் குடும்பங்கள் எனப் பல்லாயிரக்கணக்கான குடும்பங்கள் வடக்கில் நாளாந்த வருமானம் இன்றிக் கஷ்டப்படுகின்றனர்."

ஏறத்தாழ 12 ஆயிரத்து 676 குடும்பங்கள் குறித்த திட்டத்துக்கு விண்ணப்பித்திருந்தார்கள். எனினும் கடந்த வருடம் 43 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டின் ஊடாக 860 குடும்பங்கள் மாத்திரமே குறித்த வாழ்வாதாரத் திட்டத்துக்குள் உள்வாங்கப்பட்டார்கள். நிதி போதாமையால் 11ஆயிரத்து 816 குடும்பங்களுக்கான வாழ்வாதாரத் திட்டத்தை முன்னெடுக்க முடியாமல் போயுள்ளது. – என்றார்.

இதன்போது கருத்துத் தெரிவித்த ஜப்பானியத் தூதுவர் – இந்தத் திட்டத்தை வெளிநாட்டு வளத்துறை திணைக்களம் பரிந்துரை செய்யும் பட்சத்தில், நிதியுதவி வழங்க எமது நாடு தயாராக உள்ளது. அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுங்கள் என்று தெரிவித்தார் என வடக்கு மாகாண கிராமிய அபிவிருத்தி அமைச்சர் தெரிவித்தார். (ற–21)

## நிர்வாக சபை தெரிவு

சாவகச்சேரி,ஏப்.1
பகிரங்க சேவைகள் ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் தென்மராட்சிக் கிளையின் வருடாந்தப் பொதுக் கூட்டம் கடந்த செவ்வாய்க்கிழமை தென்மராட்சி பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெற்றது. கிளைத் தலைவர் செ.சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் நடப்பு வருட நிர்வாகிகள் தெரிவும் இடம் பெற்றது.

இதில் தலைவராக செ.சுப்பிரமணியம், உபதலைவராக அ.சுந்தரலிங்கம், செயலாளராக ச.ஞானலிங்கம், உதவிச் செயலாளராக மு.பாலசுப்பிரமணியம், பொருளாளராக சு.விஜயநாதன் ஆகியோரும் நிர்வாக சபை உறுப்பினர்களாக எஸ்.பாலசிங்கம், ப.செல்லத்துரை ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர்.
(ற–ஜ–9)

## பதனீர் விற்பனை யாழில் விரைவில்

யாழ்ப்பாணம்,ஏப்.1
பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் நுகர்வோரின் வசதி கருதி, பதனீர் விற்பனையை ஆரம்பிக்கவுள்ளது என்று சமாசத்தின் தலைவர் என்.கணேசன் தெரிவித்தார்.

போத்தலில் பாதுகாப்பான முறையில் அடைக்கப்பட்ட இந்த பதனீர், யாழ்.நகரின் கே.கே.எஸ் வீதியில் உள்ள சமாசத்தின் பனம் பொருள் விற்பனை நிலையத்தில் வைத்து விற்பனை செய்யப்படும்.

தற்போதைய வறட்சி, வெப்பம் போன்றவற்றால் அவதிப்படும் மக்கள் இந்தப் பதனீரை பெற்றுப் பருக முடியும் என்று சமாசத் தலைவர் கூறினார்.

பதனீரைக் குளிரூட்டி விற்பனை செய்வதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது.
(ற–ஜ–17)



**பலநாள் திருடன்....**
ஆட்டுக்குட்டியைப் பிடித்த ஆறு அடி நீளமான மலைப் பாம்பை இளைஞர்கள் அடித்துக் கொன்றனர். கடந்த செவ்வாய்க்கிழமை நுணாவில் மத்தியில் இந்தச் சம்பவம் நடந்துள்ளது. காணியொன்றில் மேய்ச்சலுக்காகக் கட்டப்பட்டிருந்த ஆட்டுடன் காணப்பட்ட குட்டியைப் பாம்பு பிடித்தபோது அது கத்தியதால் ஆட்டின் உரிமையாளர் ஓடிச் சென்று பார்த்தபோது பாம்பு ஆட்டுக் குட்டியைப் பிடித்திருப்பதைக் கண்டு சத்தமிட்டுள்ளார். அதை யடுத்து இளைஞர்கள் திரண்டு வந்து பாம்பை அடித்துக் கொன்றுள்ளனர். (ற–ஜ–9)

## மதுபோதையில் சாரத்தியம் 'லைசென்சுக்கு' 6 மாத தடை

சாவகச்சேரி, ஏப்.1
மதுபோதையில் வாகனம் செலுத்திய கைதடி மற்றும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சாரதிகளின் சாரதி அனுமதிப் பத்திரங்களை ஆறு மாதங்கள் நீதிமன்றில் தடுத்து வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்றில் உத்தரவிடப்பட்டது.

சாவகச்சேரி பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் கடந்த செவ்வாய்க்கிழமை நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டன.

அதன்போது மதுபோதையில் வாகனம் செலுத்திய இருவருக்கு தலா 7 ஆயிரத்து 500 ரூபா வீதம் அபராதம் விதித்தது டன், குறித்த சாரதிகளின் சாரதி அனுமதிப் பத்திரங்களை ஆறு மாதங்கள் நீதிமன்றில் தடுத்து வைக்குமாறு உத்தரவிப்பட்டது.

அத்துடன் வெளிச்சமின்றிச் சென்ற உழவு இயந்திரச் சாரதியொருவருக்கு 3 ஆயிரம் ரூபாவும், மது போதையில் சாரதிய அனுமதிப் பத்திரமின்றி வாகனம் செலுத்திய இரு வருக்கு தலா 10 ஆயிரத்து 500 ரூபா வீதமும், காப்புறுதிப் பத்திரமின்றி வாகனம் செலுத்திய ஒருவருக்கு 7 ஆயிரத்து 500 ரூபாவும் அபராதம் விதிக்கப்பட்டது.
(ஜ–9)

## காக்கைதீவில் சுகாதாரமற்ற மீன் சந்தையை அகற்றும் நடவடிக்கைகள் ஒருவாரத்துக்குள்

### வலி.தென்மேற்கு பிரதேச சபை செயலாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.1
காக்கைதீவு இறங்குதுறையில் சுகாதார விதிமுறைகளுக்கு முரணான வகையில் அமைக்கப்பட்டுள்ள மீன் சந்தையை அகற்றும் நடவடிக்கைகள் ஒருவார காலத்துக்குள் மேற்கொள்ளப்படும் என வலி. தென்மேற்கு பிரதேச சபைச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது–

சுகாதாரத்துக்குப் புறம்பாக மேற் கொள்ளப்படும் வியாபாரம் தொடர்பாக சம்பந்தப்பட்டவருக்குப் பதிவுத் தபால் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. வலி. தென்மேற்குப்பிரதேசத்தில் காக்கைதீவு இறங்குதுறையில் கூறு மண்டபத்துக்கு அருகில் பிரதேச சபையின் அனுமதியின்றி சுகாதார விதிமுறைகளுக்கு முரணாக மீன் சந்தை அமைக்கப்பட்டு கடந்த இரு வரு டங்களுக்கு மேலாக இயங்கி வருகின்றது.

சுகாதாரத்துக்குப் பங்கம் ஏற்படும் வகையில் தரையில் வைத்து விற்பனை செய்யப்படுவதனால் வியாபாரிகள், மீனவர்கள் மட்டுமல்ல நுகர்வோர்களும் பாதிக்கப்படுகின்றனர்.

இந்த நிலை குறித்து பிரதேச சபைச் செயலாளருக்குச் சுட்டிக் காட்டப்பட்டதைத் தொடர்ந்து இதற்குத் தீர்வு காண முன்வந்துள்ளோம், ஒரு வார காலத்துக்குள் மேற்படி சந்தையை அகற்றுமாறு சம்பந்தப்பட்டவருக்கு பதிவுத்தபால் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.– என்றார்.

இதேவேளை சந்தையைக் குத்தகைக்கு எடுக்க முன் வந்துள்ள பொது அமைப்புக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள கருத்து முரண்பாடு காரணமாக சந்தை கடந்த மூன்று மாத காலமாகக் குத்தகைக்கு விடப்படவில்லை. அதனால் பிரதேச சபைக்குக் கிடைக்க வேண்டிய வருமானத்தில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. அதேநேரம் மேற்படி இறங்குதுறையில் மீன் வியாபாரிகளின் நலன்கருதி கடந்த இரு வருடங்களுக்கு முன் பல இலட்சம் ரூபா செலவில் பிரதேச சபையால் அமைக்கப்பட்ட மீன் சந்தை பயன்படுத்தப்படாமல் கைவிடப்பட்ட நிலையிலுள்ளது.
(ற–ஜ–ரி5,115)

# பாடசாலைச் சேவையில் ஈடுபடும் வாகனங்களுக்குப் பரிசோதனை

## 25 மேற்பட்ட வாகனங்களுக்குத் தடை உத்தரவு

யாழ்ப்பாணம்,ஏப்.1
பாடசாலைச் சேவையில் ஈடுபடும் வாகனங்களைப் பரிசோதனை மேற்கொண்டதில் 67 வாகனங்களுக்கு ஸ்ரிக்கர்கள் வழங்குவதற்கான அனுமதியும், 25 க்கும் மேற்பட்ட வாகனங்களுக்கு தடை உத்தரவும் விதிக்கப்பட்டுள்ளன.

பாடசாலைச் சேவையில் ஈடுபடும் வாகனங்களை பொலிஸார் மற்றும் யாழ். மாவட்ட மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள வாகன பரிசோதகர்களும் இணைந்து பரிசோதனை மேற்கொண்டனர்.

யாழ்.புல்லுக்குளம் பகுதியில் நேற்று முன்தினம் புதன்கிழமை மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் போது, பாடசாலைச் சேவையில் ஈடுபடும் வாகனங்கள், ஓடக் கூடிய நிலையில் இருக்கின்றனவா?, பிரேக், மற்றும் சமிக்ஞைகள், இருக்கைகள் என்பவை சரியாக உள்ளனவா போன்ற பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.



இந்தப் பரிசோதனையை யாழ். மாவட்ட மோட்டார் போக்குவரத்து திணைக்கள வாகனப் பரிசோதகர்களான எ.டி.கே.அதிகாரி, லக்மல் வீரசிங்க ஆகியோரும் யாழ். பொலிஸ் நிலைய போக்குவரத்துப்பொலிஸாரும் இணைந்து மேற் கொண்டனர்.

பரிசோதனையின் போது, 67 வாகனங்கள், பாடசாலை மாணவர்களை ஏற்றிச்செல்லக் கூடிய நிலையில், பிரேக் மற்றும் சமிக்ஞை, தரமானதாகக் காணப்பட்டதை யடுத்து ஸ்ரிக்கர்கள் வழங்குவதற்கு அனுமதிக்கப்பட்டன. பிரேக் மற்றும் சமிக் ஞைகள் சரியான நிலையில் இல் லாத 25க்கும் மேற்பட்ட வாகனங்களுக்குத் தடை உத்தரவும் பிறப்பிக்கப்பட்டது.

தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்ட வாகனங்கள் எதிர்வரும் 10 அல்லது 15 நாள்களுக்குள் மீண்டும் பரிசோதனைக்குட் படுத்தப்பட வேண்டும். அவ்வாறு பரிசோதனைக்குட் படுத்தப்படாத வாகனங்கள் நீதிமன்ற நட வடிக்கைக்கு உட்படுத்தப்படும் என்று யாழ். போக்குவரத்துப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ற–ஜ–106)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுகள் பதிவதில் சிரமம்

## சிங்கள மொழியிலேயே பதிவு செய்யப்படுகின்றன என மக்கள் விசனம்

வவுனியா,ஏப்.1
வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுகளைப் பதிவு செய்யும் போது பல சிரமங்களை எதிர்கொள்கின்றோம் என்றும், முறைப்பாடுகள் சிங்கள மொழியிலேயே பதிவு செய்யப்படுகின்றன என்றும்- பொது மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

முறைப்பாடு பதிவு செய்யச் செல்பவர்களைக் குற்றவாளிகள் போன்று பொலிஸார் விசாரணைகளுக்கு உட்படுத்தப்படுத்துகின்றனர் என்றும்- மக்கள் விசனம் தெரிவித்தனர்.

வவுனியா பொலிஸ் நிலையத்தில் அண்மையில் தமக்கு எதிரான முறைப்பாடொன்று குறித்த விசாரணைக்கு வர்த்தகரொருவர் அழைக்கப்பட்டு, அவர் அங்கு சென்றபோது அவரது வாக்குமூலம் சிங்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணம் கொடுக்கல், வாங்கல் தொடர்பாக தனக்கு எதிராக வவுனியா பொலிஸ் நிலையத்தில், தனக்கு பணம் வழங்கியவர் முறைப்பாட்டை மேற்கொண்டுள்ளார் என்றும்- அந்த விசாரணைக்கு பொலிஸார் தனக்கு அழைப்பு விடுத்துள்ளதால் விசாரணைக்குச் சென்றபோது, தனது வாக்கு மூலங்கள் சிங் களத்தில் பதிவு செய்யப்பட்டிருந்தன என்றும், அதில் எழுதுப்பட்ட விடயங்கள் என்னவெனத் தனக்குத் தெரிவிக்கவில்லை என்றும் தெரிவித்த வர்த்தகர் அது குறித்துக் கேட்டபோது, தரக்குறைவான வார்த்தைகளினால் தன்னைப் பொலிஸார் ஏசினர் என்றும் தெரிவித்திருந்தார்.

> வன்னி மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருந்தும் வவுனியா பொலிஸ் நிலையத்தில் சிங்களத்தில் முறைப்பாடு பதிவு செய்வதை தடுத்து நிறுத்த முடியவில்லை.

வவுனியா மாவட்டத்தில் அதிகமாக தமிழ் பேசும் மக்களே வாழ்ந்து வருகின்றனர். அவர்கள் பொலிஸ் நிலையத்துக்குச் செல்லும்போது சிங்களம் தெரிந்த ஒருவரையும் அழைத்துக் கொண்டு செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்று- பொதுமக்கள் சுட்டிக்காட்டு கின்றனர்.

இது குறித்து பொதுமக்கள் தெரிவித்துள்ளதாவது:-

வன்னி மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருந்தும், வவுனியா பொலிஸ் நிலையத்தில் சிங்களத்தில் முறைப்பாடு பதிவு செய்வதை தடுத்து நிறுத்த முடியவில்லை.

ஒரு சில தமிழ் உத்தியோகத்தர்களை பொலிஸ் நிலையங்களில் வைத்துக் கொண்டு அவர்கள் விடுமுறையில் சென்றால் அங்கு தமிழ் பேசும் மக்களின் முறைப்பாடுகள் சிங்களத்தில் பதிவு செய்யப்படுவதுடன், முறைப்பாட்டு விசாரணைக்கு செல்லும் அனைவரும் குற்றவாளிகள் போன்ற கண்ணோட்டத்தில் தகாத முறையில் பொலிஸாரால் விசாரணைகள் மேற் கொள்ளப்படுகின்றன.

முறைப்பாட்டுப் பிரதி பெறப்படும் போதும் இழுத்தடிப்பு செய்யப்பட்டு இரண்டு, மூன்று தினங்களின் பின்பே முறைப்பாட்டுப் பிரதிகள் வழங்கப்படுகின்றன. பொலிஸாருடன் கதைப்பதற்குக் கூட கருத்துச் சுதந்திரம் அற்ற வகையில் பொலிஸார் மக்களைப் புறக்கணிக்கின்றனர் எனத் தெரிவித்தனர்.

இது தொடர்பாக பொலிஸ் ஊடக பேச்சாளர் ரூவான் குணசேகரவுடன் தொடர்பு கொண்ட போது-

வடமாகாணத்தில் உள்ள எல்லா பொலிஸ் நிலையங்களிலும் தமிழ் பொலிஸ் உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். மொழிப் பிரச்சினை பொலிஸ் நிலையங்களில் இருப்பதற்கு வாய்ப்பில்லை. மரியா தை யற்ற வகையில் பொலிஸார் நடந்து கொள்கின்றனர் எனில் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரிடம் முறையிடலாம்- என்றார். (ற-ஐ-21,ரி4)

# தம்மைப் பொலிஸ் எனக் கூறி எனது கணவரைக் கடத்தினர்

## ஆணைக்குழு முன்பாக மனைவி சாட்சியம்

வவுனியா, ஏப்.1
தம்மைப் பொலிஸார் எனக் கூறி எனது கணவரைக் கடத்திய 50-7062 இலக்க வாக னத்தை கொஹுவல பொலிஸ் நிலையத்தில் கண்டேன் என காணாமற் போன கணேசு சதாசிவத்தின் மனைவி, ஜனாதிபதி ஆணைக்குழு முன் சாட்சியமளித்தார்.

கடந்த செவ்வாய்க்கிழமை வவுனியா பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற காணாமற் போனோர் தொடர்பாக விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் அமர்வில் கலந்து கொண்டு சாட்சியம் அளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தனது சாட்சியத்தில் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

நான் எனது கணவர் மற்றும் பிள்ளைகள் கொழும்பு, களுபோவில பகுதியில் உள்ள வீடு ஒன்றில் வாடகைக்கு வசித்து வந்தோம். கடந்த 2007 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 15 ஆம் திகதி இரவு 9 மணிக்கும் 10 மணிக்குமிடையில் வீட்டின் கதவைத் தட்டும் சத்தம் கேட்டது.

இதன் போது எனது தம்பி கதவைத் திறந்தார். அப்போது வீட்டுக்குள் நுழைந்த இனந்தெரியாதவர்கள் எனது கணவரைக் கூப்பிட்டார்கள். நான், நீங்கள் யார் எனக் கேட்டேன். அதற்கு தாம் பொலிஸார் எனக் கூறி , எனது கணவரின் அடையாள அட்டை, பொலிஸ் வதிவிடச் சான்றிதழ் என்பவற்றைப் பார்த்துவிட்டு கணவரைப் பிடித்துச் சென்றார்கள்.

கணவரை விடுமாறு கதறிய போதும், எம்மை வீட்டுக்குள் பூட்டி விட்டு கணவரை இழுத்துச் சென்றார்கள். எனது கணவரை 50- 7062 இலக்க வாகனத்தில் ஏற்றிக் கொண்டு சென்றார்கள்.

அதன் பின்னர் வெள்ளவத்தையில் இருந்த எனது அப்பாவை வரவழைத்து பொலிஸ் நிலையம் சென்று விசாரித்தபோது தாம் எனது கணவரைப் பிடிக்கவில்லை எனக் கூறினார்கள். ஆனால், எனதுகணவரைக் கொண்டு சென்ற வாகனம் பொலிஸ் நிலையத்தில் நின்றதை நான் பார்த்தேன். எனது கணவரைக் கண்டுபிடித்து தாருங்கள்- என்றார். (ற-ஐ-21)

## மரண அறிவித்தல்

### திருமதி ஞானசக்தி கனகரட்ணம்



சரவணையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஞானசக்தி கனகரட்ணம் 30.03.2016 புதன்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பொ.கனகரட்ணத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சதாசிவம் - பார்வதிப்பிள்ளை தம்பதிகளின் புதல்வியும், காலஞ்சென்றவர்களான மயில்வாகனம், இலிங்கப்பிள்ளை மற்றும் பரமேஸ்வரி, இலட்சுமிதேவி, சண்முகலிங்கம் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரியும், சபேசன் (கொழும்பு), பிரபாகரன் (சுவிஸ்), மிபாகரன் (டிப்பர் - ஜீவா), லகீந்திரன் (சுவிஸ்), கர்ஜினி (இத்தாலி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், றஜிமாலா, வையந்தி, சாந்தினி, சுபாசினி, லம்போதரன் ஆகியோரின் அன்பு மாமியாரும், கிரிதரன், ரெபேக்கா, சனுஜன், பிரியங்கா, பிரியக்ஷா, பிரித்திகன், வினுஷா - ஜெயக்குமார் ( ஜெயா வீடியோ), மிதுஷா, சானுஷா, நிதர்சனா, மதுசனா, அருட்சயன், துசாந், தட்சாயினி, தாருஜன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், ஜெயானுஷனின் அன்புப் பூட்டியும், காலஞ்சென்ற தனபாலன் மற்றும் ஞானசிங்கம், சகுந்தலா (ஜேர்மனி), கருணாவதி, அசாதேவி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.04.2016) வெள்ளிக்கிழமை சரவணையில் உள்ள அவரது இல்லத்தில் முற்பகல் 10 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நாரந்தனை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சின்னமடுவடி,
சரவணைமேற்கு, சரவணை.

தகவல்:
பிள்ளைகள்

077 736 5667, 077 139 9524, 075 662 5197

www.livestream.com/jeyavideo : (இணையதள நேரடி ஒளிபரப்பு) (70103) (12,16)



**அள்ளித் தந்த கடல்....**

முல்லைத்தீவு அலம்பில் பகுதியில் மீனவர் ஒருவரின் வலையில் கடந்த செவ்வாய்க்கிழமை 10 ஆயிரம் கிலோ பாரை மீன்கள் அகப்பட்டுள்ளன. அகப்பட்ட மீன்களின் மொத்தப் பெறுமதி 3 லட்சம் ரூபா ஆகும் எனவும், இவ்வாறு ஒரே தடவையில் மீன்கள் பிடிபட்டதால் மிகுந்த மகிழ்ச்சி அடைந்துள்ளேன் என்றும்- பாரை மீன்கள் அகப்பட்ட வலையின் உரிமையாளரான மீனவர் ஒருவர் தெரிவித்தார். (ற-ஐ-21)

# யோகர் சுவாமிகள் குருபூசை

பளை,ஏப். 1
பளை, இயக்கச்சி மல் வில் கிருஷ்ணன் ஆல யத்தில் முதல் தடவை யாக யோகர் சுவாமிகள் குருபூசை மற்றும் காரைக்கால் அம்மையார் குருபூசை ஆகி யவை அண்மையில் நடத்தப்பட்டுள்ளன.

ஆலய அறநெறிப் பாட சாலை மாணவர்களின் ஏற்பாட்டில் மேற்கொள்ளப்பட்ட குறித்த குருபூசைகளில் ஆன்மிகச் சொற் பொழிவுகளும், மாணவர்களின் நிகழ்வுகளும் நடத்தப்பட்டன.

பளை பிரதேச செயலக கலாசார அலுவலர் தலைமையில் நடை பெற்ற குருபூசைகளில், பளை பிரதேச சபையின் ஓய்வுநிலை நூலகர் திருமதி அ.தர்மகுலசிங்கம், பிரதேச சபை அலுவலர் க.விநாயக மூர்த்தி, ஓய்வுநிலை அதிபர் க.குணபால சிங்கம் ஆகியோர் ஆன்மிகச் சொற்பொழிவுகளை நிகழ்த்தினர். ஆலய அறநெறிப் பாடசாலை மாணவர்களின் பல்வேறு நிகழ்வுகளும் நடைபெற்றன என்று ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்தனர். (ற-ஐ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களின் சொந்தக் காணிகளில் கல் வீடுகளையே அமைக்க வேண்டும்

## சிவசக்தி ஆனந்தன் எம்.பி. வலியுறுத்து

வவுனியா,ஏப்.1

மக்கள் அவர்களுடைய சொந்தக் காணிகளில் குடியமர்த்தப்பட்டு அந்தக் காணிகளிலேயே புதிய வீடுகள் அமைத்து கொடுக்கப்பட வேண்டும். அமைத்துக் கொடுக்கப்படும் வீடுகள் மக்கள் பரம்பரையாக வாழக் கூடியவாறான நிரந்தரக் கல் வீடுகளாக இருக்க வேண்டும்.- இவ்வாறு வன்னிய மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவ சக்தி ஆனந்தன் வலியுறுத்தியுள்ளார்.

மீள் குடியேற்ற அமைச்சால் புதிதாக அமைக்கப்படவுள்ள 65ஆயிரம் பொருத்து வீட்டுத் திட்டம் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினரால் ஊடகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

போர் முடிவுக்கு வந்த பின்னரும், தமிழ் மக்களின் பிரச்சினைகள் தீரவில்லை என்பதை உணர்ந்து கொண்ட சர்வதேச சமூகம், தமது தவறுகளை மூடிமறைக்க மனிதாபிமான உதவிகள், நிவாரணங்கள் என்ற பெயரில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவ முன்வந்தன.

அதன் முதற்கட்டமாக இந்தியா வடக்கு, கிழக்கில் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு 50 ஆயிரம் வீடுகளைக் கட்டித்தருவதற்கு முன்வந்தது. ஆனால் கடந்த அரசு அதனை தனது இராஜதந்திர அணுகுமுறையினூடாக நாட்டின் சகல பகுதியினருக்கும் என்று மாற்றியமைத்தது.

தற்போது 21 இலட்சம் பெறுமதியான 65 ஆயிரம் உருக்கு வீடுகளைக் கட்டித் தருவதற்கு வெளிநாட்டுக்கடன் உதவியுடன் அரசு முன்வந்திருக்கின்றது. அந்தத் திட்டத்திலும், பயனாளிகளைத் தெரிவு செய்யும் படிவத்தில் கேட்கப்படுகின்ற கேள்விகளை உற்று நோக்கும்போது கடந்த அரசின் அணுகுமுறை இந்த நல்லாட்சி அரசு என்று சொல்லப்படுகின்ற, தமிழ் மக்களின் ஏகோபித்த ஆதரவைப் பெற்றுக் கொண்டுள்ள தற்போதைய அரசிலும் தொடர்கின்றதா? என்ற சந்தேகம் மிகவும் வலுவாக எமது மக்கள் மத்தியில் எழுந்துள்ளது.

இந்த வீட்டுத்திட்டத்தில் கட்டப்படும் வீடுகளின் தரம் ஒருபுறம் குழப்பத்தை ஏற் படுத்துகையில், பயனாளிகள் தெரிவு எமது மக்களை மேலும் குழப்பியுள்ளது.

அதேநேரம் தற்போதும் இடம்பெயர்ந்த முகாமில் இருக்கின்றீர்களா? என்றவொரு வினா கேட்கப்பட்டுள்ளதே தவிர பொது மக்களின் இழப்பீடு தொடர்பாக எவ்விதமான தரவுகளையும்பெறுவதற்கு முயற்சி மேற்கொள் ளப்படவில்லை.

> பொதுமக்களைத் அவர்களது சொந்தக்காணிகளில் மீளவும் குடி யேற்றி அதிலேயே அவர்களுக்கான நிரந்தர வீடுகள் அனைத்து வழங்கப் பட வேண்டும். தற்போது ஒரு வீட்டுக்கு செலவிடப்படும் 21 இலட்சத்தில் நிரந்தமான கல்வீடுகள் இரண்டைக் கட்ட முடியும். அது பரம் பரை ரீதியாகவும் மக்களுக்குப் பயன் தரவல்லது.

குளறுபடிகள் நிறைந்த விண்ணப்பப் படிவத்தை எங்கு பெற்றுக் கொள்வது என்று தெரிவிக்காமல், எவரிடம் விண்ணப்பங்களைக் கையளிப்பது என்பதை அறிவிக்காமல் எமது மக்களை மீண்டும் மீண்டும் கையேந்தும் நிலைக்குத் தள்ளு வது தான் நல்லாட்சியா?

அதுவொரு புறமிருக்க, பொதுமக்களைதமது சொந்தக் காணிகளில் மீளவும் குடியேற்றிஅதிலேயே அவர்களுக்கான நிரந்தர வீடுகள் அமைத்து வழங் கப் பட வேண்டும். தற்போது ஒரு வீட்டுக்குச் செல விடப் படும் 21 இலட்சத்தில் நிரந்தமான கல்வீடுகள் இரண்டைக் கட்ட முடியும். அதுபரம்பரை ரீதியாகவும் மக் களுக்குப் பயன் தரவல்லது.

அவ்வாறான செயற்பாட்டைத் தவிர்க்கும் இந்த அரசு, எவ்வாறு நல்லிணக்கத்தை ஏற்படுத்தப் போகிறது? வன்னி மாவட்டத்துக்கு மட்டும் ஏறக்குறைய 40 ஆயிரம் வீடுகள் தேவைப்படு கின்றன. நல்லிணக்கத்தையும், நிரந்தர சமாதானத்தையும் ஏற்படுத்த வேண்டுமாக இருந்தால், பாதிக்கப்பட்ட மக்களுக்கு அவர்கள் குடும்பத்துடன் வாழ்வதற்கான வீட்டை நேர்மையாக வழங்க இந்த அரசு முன்வர வேண்டும். - என்றுள்ளது. (ற-ஐ-402,2)

### மாதாந்தக் கூட்டம்

யாழ்ப்பாணம்,ஏப்.1

வலி.வடக்கு மீள்குடியேற்ற மற்றும் புனர்வாழ்வுச் சங்கத்தின் மாதாந்தக் கூட்டம், நாளை சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு, மல்லாகத்திலுள்ள ஸ்ரார் கல்வி நிலையத்தில் இடம்பெறவுள்ளதுஎன்றுஅதன் தலைவர் அ.குணபாலசிங்கம் தெரிவித் துள்ளார். (ற-ஐ-5)

### நூல் வெளியீடு

யாழ்ப்பாணம்,ஏப்.1

வேதநாயகம் தபேந்திரனின் "யாழ்ப்பாண நினைவுகள் மூன்று" எனும் யாழ்ப்பாண வாழ்வியலைக் கூறும் கட்டுரைகளின் தொகுப்பு நூல் வெளியீடு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு, சேர் பொன் இராமநாதன் வீதியில் அமைந்துள்ள ராஜா கிறீம் ஹவுஸின் ஹம்சியா மஹாலில் நடைபெறவுள்ளது. (ற-ஐ-ரி5)

### சண்டையிட்ட நாய்களால் குடை சாய்ந்தது ஓட்டோ

தம்மிடையே சண்டையிட்ட நாய்கள் வீதியில் சென்ற ஓட்டோவுடன் மோதிய தில் ஓட்டோ குடை சாய்ந்து அதன் சாரதி காயமடைந்தார்.

இந்தச் சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு சாவகச்சேரியில்ஏ-9வீதியில்இடம்பெற்றது. அதே வேளை கொடிகாமம் பகுதியில் இடம்பெற்ற மற்றொரு விபத்தில் பாலாவியைச் சேர்ந்த சாரதியும் காயமடைந்தார்.இவர்கள் இருவரும்சாவகச்சேரிவைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டனர். (ற-ஐ-9)



தந்தை செல்வாவின் 118 ஆவது பிறந்த தின நிகழ்வுகள், யாழ்ப்பாணம் செல்வா சதுக்கம் மற்றும் வவுனியா மணிக்கூட்டுச் சந்திக்கு அருகில் உள்ள நினைவுச் சிலைக்கு முன்பாகக் கொண்டாடப்பட்டன. செல்வா சதுக்கத்தில் நேற்று அதன் அறங்காவலர் சபைத் தலைவர் பேராயர் ஜெபநேசன் தலைமையில் நிகழ்வு இடம் பெற்றது. வவுனியாவில் தந்தை செல்வா சிலைக்கு மலர் மாலை அணிவித்து வணக்கம் செலுத்தப்பட்டது. (ற-ஐ-101,402)

# மணல் ஏற்றிய சாரதிகளுக்கு ரூ. 30 ஆயிரம் அபராதம்

கிளிநொச்சி, ஏப்.1

கிளிநொச்சியில் வெவ்வேறு இடங்களில் நிபந்தனைகளை மீறி மணல் ஏற்றிய வாகனச் சாரதிகள் அறுவருக்கு மொத்தமாக 30 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டதுடன் மணலையும் பறி முதல் செய்யுமாறு கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்று தீர்ப்பளித்தது.

கடந்த சனி மற்றும் ஞாயிறு ஆகிய தினங்களில் கிளிநொச்சியில் வெவ்வெறு இடங்களில் நிபந்தனைகளை மீறி மணல் ஏற்றியதாக கூறப்பட்ட 6 டிப்பர் வாகனங்களும், அவற்றின் சாரதிகளும் கிளிநொச்சிப் பொலிசாரால் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு, கடந்த திங்கட்கிழமை கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர்.

இதன்போது மன்றில், குற்றவாளிகள் குற்றத்தை ஒப்புக்கொண்டதன் காரணத்தால் ஒருவருக்கு 5 ஆயிரம் ரூபா வீதம், அறுவருக்கும் 30 ஆயிரம் ரூபா அபராதம் விதித்ததுடன் மணலையும் பறிமுதல் செய்யுமாறு கிளிநொச்சி நீதிமன்ற நீதிவான் ரி.யே.பிரபாகரன் தீர்ப்பளித்தார். (ற-ஐ-ரி3)

மாபெரும் மலிவு விற்பனை
சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு
இன்று 01.04.2016 தொடக்கம் எதிர்வரும் 14.04.2016 வரை
ராசி கலக்ஷன்ஸ் (ராசி சில்க்ஸ்)
இந்தியாவில் இருந்து விசேடமாக தருவிக்கப்பட்ட நவீன டிசைன்களினாலான ஆடைத் தினுசுகள்

| | | |
|---|---|---|
| சாறிகள்(சீக்குயின்ஸ்) | 4000/= | 1500/= |
| மொடல் சாறி | 5500/= | 2000/= |
| கொட்டன் சாறி | 1000/= | 500/= |
| நெற் சல்வார் | 6000/= | 4000/= |
| கொட்டன் சல்வார் | 5000/= | 2500/= |
| TOP | 1600/= | 800/= |
| T சேட் | 1800/= | 800/= |
| மொடல்சேட் | 1800/= | 900/= |

இது மட்டுமன்றி அனைத்து ஆடைவகைகளும் மாபெரும் மலிவு விற்பனை. இன்றே விரையுங்கள். உங்களுக்குப் பிடித்தமானதை அள்ளிச் செல்லுங்கள்.



Rasi Collections
ராசி கலக்ஷன்ஸ் (ராசி சில்க்ஸ்)
இல.199, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 021 222 5571

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைவர் பிரபாகரன் ஆயுதம் ஏந்த கொழும்பு ஆட்சியாளரே காரணம்

## அமைச்சர் டிலான் பெரேரா தெரிவிப்பு

கொழும்பு, ஏப்.1

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்படாமல் ஆட்சியாளர்கள் அதனை பந்தாடியமையாலேயே வடக்கில் ஆயுதப் போராட்டம் தலைதூக்கியது. வே.பிரபாகரன் என்ற இளைஞர் ஆயுதமேந்தினார். - இவ்வாறு சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஊடகப்பேச்சாளரும், இராஜாங்க அமைச்சருமான டிலான் பெரேரா தெரிவித்தார்.

கொழும்பில் அமைந்துள்ள சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் நேற்றுமுன் தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் இனவாத, பிரதேசவாத செயற்பாடுகளுக்கு இனி ஒருபோதும் இடமளிக்க மாட்டோம். நாங்கள் கட்சியை விஸ்தரிப்பதற்காக பல்வேறு பகுதிகளிலும் அடிமட்ட கூட்டங்கள் மற்றும் இளைஞர் மாநாடுகளை நடத்தியிருந்தோம். அந்தவகையில் யாழ்ப்பாணத்திலும் நாங்கள் வெற்றிகரமாக எமது செயற்பாடுகளைச் செய்திருந்தோம்.

நாட்டில் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும். பிரதான இரு கட்சிகள் இணைந்து செயற்படும் இந்த வரலாற்றுச் சந்தர்ப்பத்தில் எதிர்பார்க்கும் இலக்குகளை நாங்கள் அடைய வேண்டும். கடந்த காலங்களில் பண்டா - செல்வா, டட்லி - செல்வா ஒப்பந்தங்கள் நடைமுறைப்படுத்தப்படாமல் அலட்சியப்படுத்தப்பட்டன. இனப் பிரச்சினைக்குத் தீர்வு என்ற விடயத்தில் அரசியல்வாதிகள் பந்தாடிவந்தனர். அத னாலேயே வடக்கில் ஆயுதக் கலாசாரம் உருவாகியதுடன், பிரபாகரன் என்ற இளைஞர் ஆயுதம் ஏந்தவேண்டிய நிலை ஏற்பட்டது.

கடந்த காலத்தில் ஏற்பட்ட தவறுகளை அனைவரும் பகிர்ந்துகொள்ள வேண்டும் என்று மகிந்த ராஜபக்ச குறிப்பிட்டுள்ளார். அவ்வாறா யின்,



கடந்த காலங்களில் நடைபெற்ற வெற்றிகளையும் அனைவரும் பகிர்ந்து கொள்ள வேண்டும். போர் வெற்றி உள்ளிட்ட முக்கிய விடயங்களுக்கான புகழை ஒரு குடும்பம் மாத்திரம் வைத்துக் கொள்ள முடியாது - என்றார். (ந-ஐ-5)

## எலி வேட்டையாடுவதற்கு தயாராகிறது மாநகர சபை

கொழும்பு, ஏப்.1

வெலிக்கடை சிறைச்சாலை வளாகத்தில் காணப்படும் எலிகளை வேட்டையாட கொழும்பு மாநகர சபை அதிகாரிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

வெலிக்கடை சிறைச்சாலை வடிகான்கள் மற்றும் கைதிகள் தடுப்பு அறைகள் என்பவற்றில் ஏராளமான எலிகள் சுதந்திரமாக உலாவி வருகின்றன.

அவற்றைக் கட்டுப்படுத்துவதற்கு சிறைச்சாலை நிர்வாகம் எடுத்த அனைத்து முயற்சிகளும் தோல்வியடைந்த நிலையில், தற்போது கொழும்பு மாநகர சபையின் பொது சுகாதாரப் பிரிவினரைக் கொண்டு எலிகளைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வெலிக்கடை சிறை வளாகத்தினுள் சுமார் 4 ஆயிரம் எலிகள் உள்ளன என்று கணக்கிடப்பட்டுள்ளது. அவற்றை விசம் வைத்துக் கொல்வது குறித்தே தற்போது கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இதற்காக எதிர்வரும் வாரத்துக்குள் கொழும்பு மாநகர சபை அதிகாரிகள், சிறைச்சாலை வளாகத்துக்குள் எலி வேட்டையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர். சுமார் 15 அதிகாரிகளை எலி வேட்டையில் ஈடுபடுத்த மாநகர சபை நிர்வாகம் தீர்மானித்துள்ளது.

சிறைக் கூண்டுகளில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் சுமார் 3 ஆயிரத்து 500 வரையான கைதிகள் இந்த எலித் தொல்லை காரணமாக பாதிப்புக்குள்ளாகி இருப்பதுடன், அவர்களுக்கு எலிக்காய்ச்சல் மற்றும் கொலரா போன்ற பெரும் நோய்கள் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதையடுத்தே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று சிறைச்சாலை நிர்வாகம் அறிவித்துள்ளது. (ந-ஐ-5)

## மாணவர்கடத்தலுடன்தொடர்புடைய அறை முத்திரையிட்டு மூடப்பட்டது

### நீதிமன்றில் குற்றப் புலனாய்வுப் பிரிவு அறிக்கை

கொழும்பு, ஏப்.1

கொழும்பில் வைத்துக் கடத்தப்பட்ட 5 மாணவர்கள் உள்ளிட்ட 11 பேரின், கடத்தல்களுடன் தொடர்புடைய தடயங்களைக் கொண்டிருக்கும், வெலிசறை கடற்படைத் தளத்தின் இரகசிய அறை ஒன்று குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் முத்திரையிட்டு மூடப்பட்டுள்ளது என்று குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கோட்டை நீதிவான் முன்னிலையில் நேற்று முன்தினம் அறிக்கை தாக்கல் செய்துள்ளனர்.

கடத்தப்பட்டவர்களுக்குச் சொந்தமான வாகனங்கள், பாகம் பாகங்களாகப் பிரிக்கப்பட்டு, இந்த இரகசிய அறைக்குள் போடப்பட்டுள்ளன என்றும், அடுத்த வாரம் இந்த அறையை அரச இரசாயனப் பகுப்பாய்வாளர்கள் ஆய்வுக்கு உட்படுத்தவுள்ளனர் என்றும் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றில் தெரி வித்துள்ளனர்.

இதுகுறித்து தெரிவிக்கப்பட்டுள்ளதாவது–

வத்தளைப் பகுதியில் வைத்து கடத்தப்பட்ட ஒருவர், கடத்தப்படும்போது பயணித்துக் கொண்டிருந்த டொயாடோ ரக வாகனம் தொடர்பாக நாம் முன்னெடுத்த விசாரணைகளில் பல முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

முதலில் இந்த வாகனம் திருகோணமலை கடற்படைத் தளத்தில், இயந்திரம் – அடிச்சட்ட இலக்கங்கள் மாற்றப்பட்டு பயன்படுத்தப்படுவது குறித்து எமக்குத் தகவல் கிடைத்தது. அங்கு சென்று விசாரணைகளை ஆரம்பித்தபோதே, வெலிசறை கடற்படைத்தளத்தில் உள்ள இரக சிய அறை குறித்த தகவல்களை அறிய முடிந்தது.

இதனையடுத்து வெலிசறை கடற்படை முகாமுக்குச் சென்றபோது அங்குள்ள இரகசிய அறை கண்டறியப்பட்டது. அதில் உந்துருளிகள், டொயாடோ ரக வாகனங்கள் மற்றும் கடத்தப்பட்ட மேலும் சிலர் பயணித்த வாகனங்கள் என நம் பப்படும் வாகனங்கள் பாகங்களாகப் பிரிக்கப்பட்டுள்ள நிலையில் காணப்பட்டன.

அந்த அறையில் 72 வாகன உதிரிப்பாகங்கள் உள்ளன. அந்த அறையைத் தற்போது முத்திரையிட்டு மூடிவைத்துள்ளோம். வாகனப் பாகங்கள் 2009 ஆம் ஆண்டு முதல் இரகசிய அறையில் இருக்கின்றன என்று விசாரணைகளில் தெரியவந் துள்ளது. அந்த வாகனப் பாகங்கள் குறித்து அரச இரசாயன பகுப்பாய்வு அறிக்கையை நாம் எதிர்பார்க்கிறோம். இந்த வாகனப் பாகங்களை அடுத்தவாரம் அரச இரசாயனபகுப்பாய்வாளர்கள் ஆய்வு செய்யவுள்ளனர்– என்று நீதிமன்றில் தெரிவிக்கப்பட் டுள்ளது. (ந-ஐ-5)

## அரசமைப்புக் கருத்தரங்கை அலட்சியம் செய்த எம்.பிக்கள்

கொழும்பு, ஏப்.1

புதிய அரசமைப்பை உருவாக்குவது தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆற்றலை வலுப்படுத்தும் நோக்கில், அமெரிக்கா கடந்த செவ்வாய்க்கிழமை கொழும்பில் நடத்திய கருத்தரங்கில், மிகக் குறைந்தளவு நாடாளுமன்ற உறுப்பினர்களே பங்கேற்றுள்ளனர்.

முன்னதாக இந்தக் கருத்தமர்வை அமெரிக்கா நடத்துவது தொடர்பில் மகிந்த தலைமையிலான கூட்டு எதிர்க்கட்சி எதிர்ப்பு வெளியிட்டிருந்தது. இந்த நிலையில், இந்தக் கலந்துரையாடலில் மிகக் குறைவானவர்களே பங்குபற்றியுள்ளனர்.

புதிய அரசமைப்பு உருவாக்கப்படவுள்ளது. இது தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அறிவூட்டும் வகையில், யு.எஸ்.எயிட் அமைப்பால் கொழும்பில் ஒரு நாள் கருத்தரங்கு நடத்தப்பட்டது. இந்தக் கருத்தரங்கில் பங்கேற்குமாறு நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் 225 உறுப்பினர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டது.

வோட்டர் எட்ஜ் விடுதியில் இந்தக் கருத்தரங்கு இடம்பெற்றது. இந்த நிகழ்வில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, சபாநாயகர் கரு ஜெயசூரிய, அமெரிக்கத் தூதுவர் அதுல் கெசாப் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கருத்தரங்கில், மதிய வேளையில் 50 நாடாளுமன்ற உறுப்பினர்கள் மட்டுமே பங்கேற்றிருந்தனர். கூட்டு எதிர்க்கட்சி மற்றும் ஜே.வி.பி. உறுப்பினர்கள் எவரும் இந்தக் கருத்தரங்கில் பங்கேற்கவில்லை. (ந-ஐ-5)

## மகளது படம் இருந்ததால் மைத்திரிபால அதிருப்தி

கொழும்பு,ஏப்.1

பொலனறுவையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற பொலிஸ் நடமாடும் சேவையின்போது, ஜனாதிபதி மைத்திரிபாலவின் மகளின் ஒளிப்படம் அடங்கிய துண்டுப் பிரசுரம் விநியோகிக்கப்பட்டமை தொடர்பில் ஜனாதிபதி மைத்திரிபால கடுமையான அதிருப்தியை வெளியிட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

பொலனறுவை, மன்னம்பிட்டிய பிரதேசத்திலுள்ள பாடசாலை ஒன்றில் பொலிஸ் நடமாடும் சேவை கடந்த ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்றது. இதன்போது அங்கு துண்டுப் பிரசுரம் ஒன்று பொலிஸ் திணைக் களத்தால் விநியோகிக்கப்பட்டுள்ளது. அதில் ஜனாதிபதியின்மகள்சத்துரிக்காவின் ஒளிப்படம் காணப் பட்டுள்ளது.

இது தொடர்பில் ஜனாதிபதி கடுமையான அதிருப்தியை வெளியிட்டுள்ளார். இவ்வாறான நடவடிக்கைகளுக்காக தனது குடும்பத்தவர்களது ஒளிப்படங்கள் அல்லது பெயர்கள் பயன்படுத்தப்படுவதை அனுமதிக்க முடியாது என்று அவர் தெரிவித்துள்ளார்.

அரச சேவை நடவடிக்கைகளின்போது இவ்வாறானவற்றை எதிர்வரும் காலங்களில் பயன்படுத்த வேண்டாம் என்று பொலிஸ் நடமாடும் சேவை ஏற்பாட்டாளர்களுக்குஜனாதிபதிஆலோசனை வழங்கியுள்ளார். (ந-ஐ-5)

## ரூபாவின் மதிப்பு தொடர் வீழ்ச்சி!

கொழும்பு,ஏப்.1

அமெரிக்க டொலருக்கு எதிரான ரூபாவின் நாணய மதிப்பு, வரலாறு காணாத வீழ்ச்சியைச் சந்தித்துள்ளது. அமெரிக்க டொலர் ஒன்றின் மதிப்பு 149 ரூபாவைக் கடந்துள்ளது. அதனால் இறக்குமதிசெய்யப்படும்பொருள்களின் விலை அதிகரிக்கலாம் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கை ரூபாவின் மதிப்பு சடுதியாக குறையத் தொடங்கியுள்ளது. மத்திய வங்கியில் கடந்த திங்கட்கிழமை, 148.91 ரூபாவாக இருந்த அமெரிக்க டொலர் ஒன்றின் விற்பனை விலை, 149.54 ரூபாவாக அதிகரித்தது.

இலங்கை ரூபாவின் மதிப்பு இந்தளவுக்கு மோசமான வீழ்ச்சியை சந்தித்திருப்பது இதுவே முதல் முறையாகும். ரூபா வின் மதிப்பு தொடர்ந்து வீழ்ச்சி கண்டு வருவதால், இறக்குமதியாகும் பொருள்களின் விலைகள் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது. (ந-ஐ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கில் எதையும் சமாளிக்க தயார் நிலையில் இராணுவம்

## யாழ். கட்டளைத் தளபதி கூறுகின்றார்

கொழும்பு, ஏப்.1
வடக்கில் எந்த அவசர நிலையையும் சமாளிக்கும் வகையில் படையினர் தயார்நிலையில் உள்ளனர் என்று யாழ். படைகளின் தலைமையக கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மகேஸ் சேனநாயக்க தெரிவித்துள்ளார்.
சாவகச்சேரியில் வெடிபொருள்கள் மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பாக கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்றுக்கு அவர் கருத்து வெளியிடுகையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
முழுமையான விசாரணைகளின் பின்னரே, கைது செய்யப்பட்ட விடுதலைப் புலிகளின் போராளியின் நோக்கங்கள் என்ன என்பது பற்றித் தெரிந்து கொள்ள முடியும். எனினும் எந்த அவசர நிலையையும் எதிர்கொள்ளும் வகையில், படையினர் தொடர்ந்து மூலோபாய ரீதியாக தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர்- என்று தெரிவித்துள்ளார். (ஐ-5)

# பொதுபல சேனா மீதான கோபமே மகிந்தவுக்குத் தோல்வியைத் தந்தது

## கோத்தபாய ராஜபக்ச கூறுகின்றார்



கொழும்பு, ஏப்.1
பொதுபல சேனா மீது பௌத்த மக்களே கோபத்தில் இருக்கின்றனர். அவர்களின் செயற்பாடுகள் காரணமாகவே மகிந்த சிறுபான்மையினரின் வாக்குகளை இழந்தார். - இவ்வாறு பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச முஸ்லிம் மக்கள் மத்தியில் தெரிவித்துள்ளார்.
மேல் மாகாண சபை உறுப்பினர் எம்.எஸ்.எம்.சகாவுல்லாவின் அழைப்பின்பேரில், நீர்கொழும்பு, பெருதொட்ட பிரதேசத்துக்கு கோத்தபாய ராஜபக்ச சென்றிருந்தார். அங்குள்ள முஸ்லிம் மக்களுடன் கடந்த திங்கட்கிழமை மாலை சந்திப்பு ஒன்றை நடத்தியிருந்தார். இதன்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.
அங்கு அவர் தெரிவித்துள்ளதாவது-
பொது பல சேனாவுடன் இருந்த பௌத்த மக்கள் தற்போது கடும் கோபத்தில் உள்ளனர். பொதுபல சேனாவின் செயற்பாடுகள் காரணமாகவே சிறுபான்மையினரின் வாக்குகளை இழந்து முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியுற்றார் என்று தற்போது பௌத்த மக்கள் குற்றஞ் சுமத்துகின்றனர்.
தம்புள்ள பள்ளிவாசல் தொடர்பான பிரச்சினையில் பொதுபலசேனா சம்பந்தப்படவில்லை. அளுத்கமையில் இதற்கு முன்னரும் பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன. ஆயினும் அப்போது அதனை எவரும் அரசியல் இலாபத்துக்காகப் பயன்படுத்தவில்லை. கிறீஸ் பூதம் பிரச்சினையிலும் என் மீது பழி போடப்பட்டது. அன்று எமது அரசில் இருந்த முஸ்லிம் அரசியல்வாதிகள் மக்களுக்கு உண்மைநிலைமையை எடுத்துக் கூறவில்லை. இதன் காரணமாக முஸ்லிம் மக்கள் எம் மீது சந்தேகப்பட்டனர்-என்று தெரிவித்துள்ளார். (ஐ-5)

# காணாமற் போனோர் ஆணைக்குழு அடுத்த அமர்வு மட்டு. மாவட்டத்தில்

கொழும்பு, ஏப்.1
காணாமற் போனோர் தொடர்பில் விசாரணை நடத்தும் ஜனாதிபதி ஆணைக்குழு தனது அடுத்த அமர்வை மட்டக்களப்பு மாவட்டத்தில் நடத்தவுள்ளது. ஆணைக் குழுவின் பதவிக் காலம் மே மாத இறுதிவரை நீடிக்கப்பட்டுள்ளதால், புதுவருடம் முடிவடைந்த பின்னர் மட்டக்களப்பு அமர்வு இடம்பெறவுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.
மக்ஸ்வெல் பரணகம ஆணைக் குழுவின் பதவிக் காலம் கடந்த பெப்ரவரி 15 ஆம் திகதியுடன் நிறைவடைந்தது. எனினும் பணிகளை இறுதிப்படுத்துவதற்காக மூன்று மாதங்கள் பதவி நீடிப்பை ஜனாதிபதி வழங்கினார்.

> “மக்ஸ்வெல் பரணகம ஆணைக் குழுவின் பதவிக் காலம் கடந்த பெப்ரவரி 15 ஆம் திகதியுடன் நிறைவடைந்தது. எனினும் பணிகளை இறுதிப் படுத்துவதற்காக மூன்று மாதங் கள் பதவி நீடிப்பை ஜனாதிபதி வழங்கினார்.”

விசாரணைகளை முன்னெடுத்து வருகின்ற பரணகம ஆணைக்குழு, போர்க் குற்றங்கள் தொடர்பிலான தனது இறுதிவிசாரணை அறிக்கையை கடந்த ஓகஸ்ட் மாதம் ஜனாதிபதியிடம் கையளித்தது. அத்துடன், காணாமற் போனோர் தொடர்பில் இடைக்கால அறிக்கையொன்றையும் கையளித்திருந்தது. இருப்பினும் காணாமற் போனோர் தொடர்பான விசாரணைகள் இன்னும் முடிவடையவில்லை. இறுதி அறிக்கையும் சமர்ப்பிக்கப்படவில்லை. அதனால் இறுதி அறிக்கையை சமர்ப்பிப்பதற்காக தற்காலிக பதவி நீடிப்பு வழங்கப்பட்டுள்ளது. அந்த வகையில் இறுதி அறிக்கை ஜூன் மாதத்தில் சமர்ப்பிக்கப்படும் என்று ஆணைக்குழு தெரிவித்துள்ளது.
இதற்கிடையில் ஆணைக்குழு தனக்குக் கிடைத்த முறைப்பாடுகள் தொடர்பில் விசாரணைகளை துரிதமாக முன்னெடுத்து வருகிறது. கடந்த மாதம் யாழ்ப்பாணத்தில் அமர்வுகளை நடத்திய ஆணைக்குழு, தற்போது வன்னியில் நடத்தி வருகின்றது. இதனைத் தொடர்ந்து மட்டக்களப்பில் அமர்வுகளை நடத்தத் தீர்மானித்துள்ளது. (ஐ-5)

# வட மாகாண முதலமைச்சரால் நல்லிணக்கத்துக்குப் பாதிப்பாம்

## ஜாதிக ஹெல உறுமய கூறுகின்றது

கொழும்பு, ஏப்.1
வடமாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், பிரிவினைவாத - இனத்துவேச அடிப்படையில் செயற்படுகிறார். அவரது நடவடிக்கை, நல்லிணக்கத்துக்கு பாதிப்பை ஏற்படுத்துகிறது. - இவ்வாறு ஜாதிக ஹெல உறுமயவின் தேசிய அமைப்பாளர் நிசாந்த சிறீ வர்ணசிங்க தெரிவித்துள் ளார். கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.
இதுகுறித்து அவர் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் வகையில் அரசு பல்வேறு முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறது. அதியுயர் பாதுகாப்பு வலயங்களை அகற்றுவதிலும், வடக்கு மாகாணசபை நடவடிக்கைகளை மீளமைப்பதிலும் அரசு முன்னின்று செயற்படுகிறது. எனினும் விக்னேஸ்வரன் அந்த முயற்சிகளுக்கு ஆதரவு வழங்குவதாகப் போன்று தெரியவில்லை.
அரசமைப்புக்கு எதிராக விக்னேஸ்வரன் செயற்பட்டால், அவருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இதே வேளை- வட மாகாணசபைக்கு ஒதுக்கப்பட்ட நிதியில் 20 வீதம் மாத்திரமே பயன்படுத்தப்பட்டது. மீதித்தொகை திறைசேரிக்கு திரும்பிவிட்டது.-என்றார்.(ஐ-5)

# ஜேர்மன் நாட்டின் வணிகக் குழு மே மாதம் கொழும்பு வருகிறது

கொழும்பு, ஏப்.1
ஜேர்மன் நாட்டின் வணிகக் குழுவொன்று மே மாதம் நடுப்பகுதியில் கொழும்பு வரவுள்ளது. இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்வது தொடர்பில் ஆராயும் நோக்கிலேயே இந்தக் குழு இங்கு வரவுள்ளது என்று அரச தகவல்கள் தெரிவிக்கின்றன.
ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான இலங்கையின் உயர்மட்ட தூதுக் குழு கடந்த பெப்ரவரி 15 ஆம் திகதி ஜேர்மனுக்கு பயணம் மேற்கொண்டிருந்தது.
அதன்போது அந்த நாட்டு முதலீட்டாளர்களுடன் இலங்கைத் தூதுக்குழு பேச்சு நடத்தியது. இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்ளுமாறும் அழைப்பு விடுத்திருந்தது.
அதற்கமையவே, ஜேர்மனியின் பிரபல வர்த்தகர்கள் உள்ளடங்கிய குழுவொன்று இங்கு வருகிறது என்றும், இவர்களுடன் ஜேர்மன் நாட்டு அரச பிரதிநிதிகள் குழுவொன்றும் வருகை தரும் என்றும் அறிய முடிகின்றது. (ஐ-5)

# நயினாதீவுப் புத்தர் விவகாரத்தில் மைத்திரி, ரணிலுக்குத் தொடர்பில்லை

## அமைச்சர் ஹரின் தெரிவிப்பு

கொழும்பு, ஏப்.1
நயினாதீவில் புத்தர் சிலை அமைக்கும் செயற்பாடு நிறுத்தப்பட்டமை தொடர்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனாவுக்கோ, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கோ தொடர்பு எதுவும் கிடையாது. இந்த விடயத்தில் இனவாதத்தை தூண்ட வேண்டாம்.- இவ்வாறு தொலைத் தொடர்பு மற்றும் டிஜிற்றல்துறை அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோ தெரிவித்தார்.
ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.
நயினாதீவில் புத்தர்சிலை அமைப்பதற்கு யாழ்ப்பாண மாவட்ட அரச அதிபர் தடை விதித்துள்ளார் என்று சிங்கள ஊடகங்களில் செய்தி வெளியிடப்பட்டுள்ளது. இந்த விடயத்தில் மாவட்ட அரச அதிபருடன் பேசியுள்ளோம். இந்த விடயத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கோ அல்லது பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கோ தொடர்பு எதுவும் கிடையாது. ஆகவே இனவாதத்தைத் தூண்ட வேண் டாம் - என்று அவர் தெரிவித்துள்ளார். (ஐ-5)

# பிரதமர் தலைமையிலான குழு எதிர்வரும் வாரம் சீனா பயணம்

கொழும்பு, ஏப்.1
பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான உயர்மட்ட அரச குழுவினர், எதிர்வரும் 6 ஆம் திகதி சீனா பயணமாகவுள்ளனர். இந்தப் பயணத்துக்கான ஏற்பாடுகள் அனைத்தும் பூர்த்தியாகியுள்ளன என்று அரச தகவல்கள் தெரிவிக்கின்றன.
இலங்கையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பின்னர், கடந்த ஆண்டு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சீனாவுக்கான பயணத்தை மேற்கொண்டார். மகிந்த ராஜபக்ச அரசின் ஆட்சியில் சீனாவுக்கும் இலங்கைக்குமான உறவு மிகவும் வலுவான நிலையில் காணப்பட்டது. ஆட்சி மாற்றத்தின் பின்னர் சீன - இலங்கை உறவு முறிவடைந்துள்ளது என்று பரவலாகப் பேசப்பட்ட நிலையிலேயே தற்போது பிரதமரின் சீனப் பயணம் இடம்பெறவுள்ளது.
இந்த மாதத்தின் ஆரம்பத்தில் அமைச்சர்களான மலிக் சமர விக்கிரமசிங்க மற்றும் சாகல ரத்நாயக்க ஆகியோர் சீனாவுக்கான பயணத்தை மேற்கொண்டு சீன நிறுவனம் ஒன்றால் இலங்கையில் மேற் கொள்ளப் பட்டுவரும் துறைமுக நகரத் திட்டம் தொடர்பில் தீர்க்கமாகக் கலந்துரையாடியிருந்தனர்.
பிரதமரின் சீனப் பயணத்துக்கு முன்னர் துறைமுக நகரம் தொடர்பான உடன்படிக்கை கைச்சாத்திடப்படும் என்று இலங்கை அரசு ஏற்கனவே அறிவித்திருந்தது. இதன் காரணமாக இலங்கையில் சீனாவின் முதலீடுகளையும், அபிவிருத்தி திட்டங்களை மேலும் அதிகரிக்கும் முகமாகவும், வர்த்தக நடவடிக்கைகளை விரிவுப்படுத்தும் வகையிலும் பிரதமரின் பயணம் வகுக்கப்பட்டுள்ளது.
பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன், அமைச்சர்களான மங்கள சமரவீர, மலிக் சமர விக்கிரசிங்க, நிமல் சிறிபால டி சில்வா, சரத் அமுனுகம, ரவூப் ஹக்கீம், சஜித் பிரேமதாச உள்ளிட்டவர்களும் சீனாவுக்குப் பயணம் மேற் கொள்ளவுள்ளனர். அத்துடன், ஐக்கிய தேசியக் கட்சிக்கும், சீனாவின் கம்யூனிஸ் கட்சிக்கும் இடையில் உறவை வலுப்படுத்தும் முகமாக ஐக்கிய தேசியக் கட்சியின் சர்வதேச விடயங்களைக் கையாளும் மகிந்த அமரதாசவும் பயணத்தில் கலந்து கொள்ளவுள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## வடக்குக்குப் பொருத்து வீடுகளா? வேண்டவே வேண்டாம்...

வடக்கில் பொருத்து வீடுகளை அமைக்கும் உத்தேசத் திட்டம் பொருத்தம் அற்றது என்று "போர்க் கொடி" தூக்கி உள்ளது வடக்கு மாகாண சபை. அதற்கான காரணத்தை அக்கு வேறு ஆணி வேறாக, அதன் சார்பில் வ.மா. சபையின் அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம் புட்டுக்காட்டி உள்ளார்.

அந்தக் காத்திரமான நிலைப்பாடு குறித்து, ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும், மீள்குடியேற்ற அமைச்சருக்கும் விலாவாரியான விவரங்களுடன் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

மாகாண சபையின் நிலைப்பாட்டை, எவரும் தட்டிக்கழிக்க முடியாதவாறு, கனகச்சிதமாக, காரண காரியங்களை அவைத் தலைவர், பகுத்துப் பிரித்து எடுத்துரைத்துள்ளார்.

வீடுகள் ஒவ்வொன்றும், இருபத்தொரு லட்சம் ரூபா செலவில் அமைக்கப்படுவது பொருத்தமற்ற செயற்பாடாகும்.

உத்தேச வடிவமைந்த வீடுகளின் பாதுகாப்புக் கேள்விக்குறியானது. சுவர்கள் வலிமையற்றவை. திருடர்கள், கொள்ளையர்கள், பாலியல் துஷ்பிரயோகம் செய்பவர்களுக்கு இவை இலகுவான வாய்ப்பை வழங்க வல்லவை.

21 லட்சம் ரூபா செலவில், வடக்கில் சாதாரணமாகக் கட்டப்படும் இரண்டு வீடுகளை, அமைத்து விடலாம்.

மேற்போந்தவை மட்டுமன்றி, பொருத்து வீடுகள், வடக்கின் காலநிலைக்கும் மற்றும் சூழலுக்கும் முற்றிலும் பொருத்தம் அற்றவை. அதாவது வெப்பகால வேளைகளில் அதிக உஷ்ணமாகவும், மழைக் காலங்களில் வெள்ளம் வீட்டுக்குள் புகுந்து, சுகாதாரக் கேடுகளை உண்டாக்கும் நிலைமையும் வருடந்தோறும் மேலுயரும்.

குறைந்த பணச் செலவில், நிறைந்த வசதிகள் மற்றும் சௌகரியங்களைத் தரும் வீடுகளுக்குப் பதிலாக--

பல வசதிகளையும், பழக்கப்பட்ட நிலைமைகளைப் புறந்தள்ளிவிட்டு, "மொட்" என்று கருதி, அதிக பணச் செலவில் அமைக்கப்படும், தள்ளாடித் தளரும் பொருத்து வீடுகள் தேவை தானா?

உத்தேசமான அந்தத் திட்டத்தைக் கிழித்து வீசிவிட்டு, எங்கள் மக்களுக்குப் பழக்கப்பட்ட, ஆண்டாண்டு காலமாக வழக்கத்தில்-புழக்கத்தில்-உள்ள வகையான வகைசார்ந்த வீடுகளே எமது மக்களுக்கு அமைத்துக் கொடுக்கப்பட வேண்டும்.

புதுமை என்று எண்ணி, தப்புக் கணக்குப் போட்டு, பாதிப்புற்ற எமது மக்கள் மீது குதிரை விட, நல்லாட்சி அரசு முனைவது நிறுத்தப்பட வேண்டும்.

பொருத்து வீடு வேண்டாம் என்ற, எமது மக்களின் நலன் நாடிய வேண்டுகையை தட்டிக் கழித்து, தனது அபசார எண்ணத்தைத் திணிக்கும் திட்டத்தைக் கைவிட்டு, நன்றே செய்வதற்கு நல்லாட்சி அரசு முன்வராவிடில், சர்வாதிகாரம் மேலுயரும் போக்கே, முகிழ்த்து விரியும்...

பொறுத்திருந்து பார்ப்போமே...!

# ஊடகவியலாளர்கள் படுகொலைகளுக்கு சர்வதேச விசாரணையே வேண்டும்

எம்.ஐ.முபாறக்

கடந்த ஆட்சியில் ஊடகவியலாளர்கள் பலர் கொல்லப்பட்டமை தொடர்பிலும், ஊடக நிறுவனங்கள் தாக்கப்பட்டமை தொடர்பிலும், விசாரணைகள் நடத்தப்படவும் இல்லை, குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்படவும் இல்லை. நீதி நிலைநாட்டப்படாது - பாதிக்கப்படவர்களுக்கு நிவாரணங்கள் வழங்கப்படாது இருக்கின்ற நிலையில், சர்வதேச விசாரணை ஒன்றின் ஊடாகவே இந்தச் சம்பவங்கள் தொடர்பில் உண்மையைக் கண்டறிய முடியும் என்ற வடக்கு ஊடகவியலாளர்களின் சரியான நிலைப்பாடு மதிக்கப்பட வேண்டும்.

தகவல் அறிவதற்கான உரிமையை மக்களுக்கு வழங்குவதன் ஊடாக இந்த நாட்டில் ஜனநாயகத்தை உறுதிப்படுத்துவதற்கு மைத்திரி – ரணில் அரசு தகவல் அறியும் உரிமைச் சட்ட வரைவை நாடாளுமன்றில் சமர்ப்பித்துள்ளது. ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்காக இந்த அரசு எடுத்துவரும் நடவடிக்கைகளில் ஒன்றாக இதைப் பார்க்கலாம்.

தகவல் அறியும் மக்களின் உரிமை என்பது ஊடக சுதந்திரத்தில்தான் தங்கியுள்ளது. ஊடக சுதந்திரம் எவ்வளவு தூரம் பாதுகாக்கப்படுகின்றதோ, அவ்வளவு தூரம் தகவல் அறியும் உரிமையும் பாதுகாக்கப்படும்.

இந்த நாட்டில் இடம்பெற்ற 30 வருட கால போரைக் காரணம் காட்டி ஆட்சியாளர்கள் போருடன் எந்த வகையிலும் தொடர்புபடாத எத்தனையோ சிவிலியன்களை - துறைசார்ந்தோரை பெரும் சிக்கலுக்குள் தள்ளி இருக்கின்றார்கள் என்பது வரலாற்றைப் புரட்டிப் பார்த்தால் எமக்குப் புரியும். போரில் பங்கேற்ற விடுதலைப் புலிகள் தமிழ் இனத்தைச் சேர்ந்தவர்கள் என்பதால், அப்பாவித் தமிழர்கள் நசுக்கப்பட்டனர், கடத்தப்பட்டனர், காணாமற் ஆக்கப்பட்டனர், கொல்லப்பட்டனர். அதேபோல், போர் என்ற போர்வையில் அரசால் அரங்கேற்றப்பட்ட அநீதிகளுக்கு எதிராகக் குரல் கொடுத்தவர்களுக்கும் அதே நிலைதான் ஏற்பட்டது.

கருத்துச் சுதந்திரம் அறவே இருக்கவில்லை. அரசின் அநியாயங்கள் விமர்சிக்கப்பட்டால் அது தேசத் துரோகமாக சித்திரிக்கப்பட்டது. சில அப்பாவிப் பொது மக்கள் அந்தத் தேசத் துரோகம் என்ற பதத்துக்கு மயங்கவே செய்தனர்.

> கடந்த ஆட்சியில் ஊடகவியலாளர்களான லசந்த விக்கிரமதுங்க, சிவராம், நடேசன், சுகிர்தராஜன் போன்ற பலர் கொல்லப்பட்டனர். எக்னெலிகொட கடத்தப்பட்டார். உதயனின் முன்னாள் ஆசிரியர் வித்தியாதரன் கடத்தப்பட்டு மயிரிழையில் தப்பினார்.

ஊடகவியலாளர்கள் முதல் அனைவரது கருத்துக்களும் அரசுக்கு சாதகமாகவே இருக்க வேண்டும். எதிராகக் கருத்துத் தெரிவித்தால் அந்தக் கருத்துக்கு தேசத் துரோகம் என்ற முத்திரை குத்தப்படும்.

அந்த வகையில், அரசுக்கு எதிராகக் கருத்துத் தெரிவித்த - தமது ஊடக சுதந்திரத்தைப் பயன்படுத்திய ஊடகங்கள் மீதும் தேசத் துரோக முத்திரை குத்தப்பட்டது. கடந்த காலங்களில் ஊடகங்கள் எவ்வாறு நசுக்கப்பட்டன – ஊடகவியாலாளர்கள் எவ்வாறு நசுக்கப்பட்டார்கள் என்பதை நாம் அறிவோம். மகிந்தவின் ஆட்சி ஊடகவியலாளர்களின் வாழ்வில் ஒரு கறுப்பு அத்தியாயமாகும்.


### மகிந்த ஆட்சியில் உச்சம்

அனேகமாக, எல்லா ஆட்சியாளர்களாலும் ஊடகங்கள் நசுக்கப்பட்டபோதிலும், மகிந்தவின் ஆட்சியில்தான் அது உச்சம் பெற்றிருந்தது. ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டனர்; மிரட்டப்பட்டனர்; ஊடகவியலாளர்கள் பலர் உயிருக்குப் பயந்து வெளிநாடுகளுக்குத் தப்பிச் சென்றனர். அத்தோடு, பல ஊடக நிறுவனங்களும் தாக்கப்பட்டன. ஊடக நிறுவனங்களுக்குச் சொந்தமான சொத்துக்களும் அழிக்கப்பட்டன.

கடந்த ஆட்சியில் ஊடகவியலாளர்களான லசந்த விக்கிரமதுங்க, சிவராம், நடேசன், சுகிர்தராஜன் போன்ற பலர் கொல்லப்பட்டனர். எக்னெலிகொட கடத்தப்பட்டார். உதயனின் முன்னாள் ஆசிரியர் ந.வித்தியாதரன் கடத்தப்பட்டு, மயிரிழையில் தப்பினார். கொழும்பில் உள்ள 'சுடர் ஒளி'யின் அலுவலகம் மீது கைக்குண்டுத் தாக்குதல் நடத் தப்பட்டு ஒரு பணியாளர் கொல்லப்பட்டார்; பலர் காயமடைந்தனர்.

### உதயன்- சுடர் ஒளிக்கும் நெருக்கடி


யாழ்ப்பாணத்தில் இயங்கி வரும் உதயன் பத்திரிகையின் சகோதரப் பத்திரிகையான சுடர்ஒளி பத்திரிகை பல நெருக்குதல்களைச் சந்தித்தது. அந்த அலுவலகம் மீதும், அந்த நிறுவனத்தின் ஊடகவியலாளர்கள் மீதும் பல




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







தடவைகள் தாக்குதல்கள் நடத் தப் பட்டன. உதயன் பத்திரிகையின் ஊடகவியலாளர்கள் மற்றும் சந்தைப்படுத்தும் முகாமையாளர் உள்ளிட்ட பணியாளர்கள் பலர் கொல் லப்பட்டனர், காயமடைந்தனர்.
அதேபோல், சிரச ஊடக நிறுவனம் இரண்டு தடவைகள் தாக்கப்பட்டது. பன்னிப்பிட்டியில் உள்ள அந்த அலுவலகத்துக்குள் நுழைந்த ஆயுததாரிகள் அந்த அலுவலகத் தைத் தீ வைத்துக் கொளுத்தி பல ஆவணங்களை அழித்தனர். இரண்டாவது தடவை அந்த நிறு வனத்தின் கொழும்பு அலுவலகம் மகிந்த அரசின் அனுசரணை பெற்ற ஆர்ப்பாட்டக்காரர்களால் தாக்கப் பட்டது.
ரூபவாஹினி நிறுவனத்துக்குள் ளும் முன்னாள் அமைச்சர் மேர் வின் சில்வா புகுந்து தாக்குதல் நடத்தினார். இவ்வாறான அடக்குமுறை கள் காரணமாக அதிகமான ஊடகவி யலாளர்கள் உயிருக்குப் பயந்து வெளி நாடுகளுக்குத் தப்பிச் சென்றனர். ஆட்சி மாற்றத்தின் பின்னர்தான் ஊடக நிறு வனங்கள் நிம்மதிப் பெருமூச்சு விடத் தொடங்கியுள்ளன. மகிந்த ஆட்சி கவிழ்க் கப்பட்டுப் புதிய அரசு நாட்டின் நிர்வாகத் தைக் கையேற்றதும், ஊடக சுதந்திரம் உறுதிப்படுத்தப்பட்டது. மகிந்த அரசால் முடக்கப்பட்ட செய்தி இணையத் தளங் கள் இயங்கத் தொடங்கின.

**இவ்வாறான அடக்குமுறைகள் காரணமாக அதிக மான ஊடகவிய லாளர்கள் உயிருக்குப் பயந்து வெளிநாடுகளுக்குத் தப்பிச் சென்றனர். ஆட்சி மாற்றத்தின் பின்னர்தான் ஊடக நிறுவனங்கள் நிம்மதி பெருமூச்சு விடத் தொடங்கி யுள்ளன.**

அந்த வரிசையில் படுகொலைசெய் யப்பட்ட 44 ஊடகவியலாளர்களின் குடும் பங் களுக்கு நட்டஈடு வழங்கப் போவதாக வும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அண் மையில் நாடாளுமன்றில் கூறி யிருந்தார். ஊடகவியலாளர்களைக் கொலை செய்தவர்கள், தாக்கியவர்கள், ஊடக நிறு வனங்களைத் தீ வைத்துக் கொளுத்தி யவர்கள் என இந்த அக்கிரமங்களில் ஈடுபட் அனைவரும் தண்டிக்கப்பட வேண்டும். இது தொடர்பில் சர்வதேச விசாரணை ஒன்று முன்னெடுக்கப்பட வேண்டும் என வடக்கு ஊடகவியலாளர்கள் கோரிக்கை ஒன்றை முன் வைத்துள்ளனர்.

### தட்டிக்கழிக்கப்பட முடியாத கோரிக்கை

அரசால் வடக்கில் ஏற்பாடு செய்யப்படிருந்த தெற்கு மற் றும் வடக்கு ஊடகவியலா ளர்களிடையே ஒற்றுமையை ஏற்படுத்துவதற்கான விசேட வேலைத் திட்டத்தின்போதே வடக்கு ஊடகவியலாளர்கள் இந்தக் கோரிக்கையை ஊடக அமைச்சரிடம் முன் வைத்துள்ள னர். இது தட்டிக் கழிக்கப்பட முடி யாத கோரிக்கையாகும். ஊடக நிறுவனங்கள் மீதான தாக்கு தல்கள் தொடர்பிலும், ஊடகவிய லாளர்கள் கொல்லப்பட்டமை தொடர்பிலும், பாதிக்கப்பட்ட வர் களுக்கோ அவர்களது குடும்பத்தி னருக்கோ இதுவரை எந்தவொரு நிவாரணமும் பெற்றுக் கொடுக் கப்பட வும் இல்லை; குற்றவாளி கள் கண்டுபிடிக்கப்பட்டு தண்டிக் கப்படவும் இல்லை.
ஆகவே, இந்த நல்லாட்சியிலாவது இது தொடர்பில் பொருத்தமான நட வடிக்கை எடுக்கப்பட வேண்டும்; பாதிக் கப்படவர்களின் குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்கப்பட வேண்டும் என்ற வடக்கு ஊடகவியலாளர்களின் நியாயமான நிலைப்பாடு மதிக்கப்பட வேண்டும். சர்வதேச விசாரணையை நோக்கியதான நகர்வு இப்போதே முன்னெடுக்கப்பட வேண்டும்.

## அனுமதியின்றிப் பாலங்களை அமைப்பதால் அவலப்படும் பொதுமக்கள்

வடமராட்சி மாலுசந்தி, உடுப்பிட்டி வீதிக்கு வதிரி, அல்வாய் பிரதேசத்தினூடாக வந்து சேரும் பாதையானது Bcon தனியார் உயர் கல்வி நிலையம்வரை மட்டும் செப்பனிடப்பட்டு மிகுதி வீதி அமைக்கப்படாது சுமார் 100 மீற்றர் வரை காணப்படுகின்றது. இந்தப் பாதையில் சயன்ஸ் அக்கடமி எனும் மற்று மொரு உயர் கல்வி நிலையமும் உள்ளது. இந்த வீதி உடுப்பிட்டி வீதியுடன் சென்று முடிவடைவதால் நீண்ட காலமாக இந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த மக் களும், தனியார் கல்வி நிலைய மாணவர்களும், துரித போக்குவரத்துக்கான பாதையாகப் பயன் படுத்தி வந்தனர். இந்தப் பாதை முடிவடையும் இடத்தில் தனியார் ஒருவர் தனது வீட்டுக்கு பாலம் அமைப்பதற்காக பொதுமக்களின் எதிர்ப்புக்கு மத்தியிலும் பாதையைத் தடைசெய்து அவசர அவசரமாக பாலம் அமைக்கின்றார். பாலம் அமைப்பதற்காகத் தனது சிறுதுண்டு காணியை அகலமாகக் கொத்திப் பரவிப் பாதையைச் சிறியதாக்கி கல், மண் பறித்து பாலம் கட்டுகிறார். இந்தப் பாதையால் மழைக் காலங்களில் பாயும் நீர் வடிந்தோட முடியாதபடி ஏற்கனவே பல பாலங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அவை அனைத்தும் பிரதேச சபையின் அனுமதியுடன் கட்டப்பட்டிருக்க வேண்டும். அப்படி அனுமதி பெறப்படவில்லை. பொறுப்பான அதிகாரி மேற் பார்வையிடாமல் உயரம் குன்றியும் பாலங்களுக்கு நடுவில் தூண்கள் போடப்பட்டும் கட்டப்பட்டிருக்கின்றன. நீர் பல பிரதேசங்களினூடாக மழை காலங்களில் பாய்ந்து வருவதால் பாலங்கள் குப்பைகளால் தடுக்கப்பட்டு நீர் பல மணி நேரம் தேங்கி நிற்பதால் (4அடி வரை உயர்ந்து) போக்குவரத்து தடைப்பட்டு விடும். தனியார் கல்வி நிலையங்கள்கூட செயற்பட முடியாமல் கல்வி நிலையங்களுக்குள்ளும் தண்ணீர் தேங்கிக் காணப்படும். அனைத்தும் தெரிந்தும் பிரதேச சபையின் அனுமதி பெறாமல், குறித்த நபரும் அவசரமாகப் பாலம் கட்டுவது பிரதேச மக்கள் மத்தியில் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது. உரிய அதிகாரிகள் பாதைகளின் நீர் வடிகால்களில் அவதானம் செலுத்தாமல் செயற்பட்டால் யாழ்ப்பாணமும் குறுகிய காலத்தில் நீரினால் சூழப் படும் அபாயம் உருவாகும். யாழ்ப்பாணமும் சென்னை நகரம் போல் வராமல் தடுப்பது உரிய அதிகாரிகளின் கடமையல்லவா?

பொதுமக்கள் சார்பாக

## என் மீது இரங்குவதற்கு எவருமே இல்லையா?

வலி.மேற்குப் பிரதேசத்தில் என்னைத் தெரியாதோர் ஒரு சிலரே எனலாம். நான் வலி. மேற்குப் பிரதேசத்தில் பனிப்புலம், செட்டிகுறிச்சியில் மிகவேதனையுடன் வாழும் ஓர் அநாதை. பனிப்புலம் காலையடிக்கும், சாந்தை, பனிப்புலத்துக்கும் இடையிலுள்ள செட்டி குறிச்சியே எனது இடம். ஆனால், பல கிராமங்களுக்கு முக்கியமான ஒருவன். நான் பிறந்து பல வருடங்களாகியும் இதுவரை எந்தவித முன்னேற்றமும் இல்லாது மிகவும் கஷ்ட நிலையில் இருக்கிறேன். எனது உடல் முழுவதும் குஷ்டரோகி போல் மக்கள் பார்த்து அருவருக்கும் நிலையில் உள்ளது. இரட்டைப் புலவர்கள் இன்றிருந்தால் என்னை வைத்தே ஓர் அழகான கவி புனைந்து விடுவார்கள்.
மாரி காலம் வந்தால் எனது உடலில் நீர் தேங்காத இடமே கிடையாது. என்னால் பயன்பெறும் அனைவரும் என்மீது விழுந்து என்னை வணங்காது போவ தில்லை. அத்துடன் நன்றிகெட்ட இவர்கள் என்னைத் திட்டித் தீர்த்துக் கொண்டு போவதை என்னால் பொறுக்க முடிவதில்லை. என்மீது பாசமுள்ள ஒருசிலர் என்நிலையைப் பெரும் அதிகாரிகளுக்குத் தெரிவித்து, உதவி கேட்டபோதும் எனக்கு உதவ ஒருவரும் முன்வரவில்லை. எமது பகுதிப் பிரதேச சபை உறுப்பினர், பிரதேச சபைத் தவிசாளர், மாகாண சபை உறுப்பினர், நாடாளு மன்ற உறுப்பினர் எனப் பலர் வந்து பார்த்தும் எனக்கு எந்தவித விமோசனமும் கிடைக்கவில்லை. பனிப்புலம் சாந்தை, சங்கக்கடை, தபாற்கந்தோர், பண்ணாகம் வடக்கு அ.மி.த.க.பாடசாலை ஆகிய நிறுவனங்களுக்கு நான் மிகவும் வேண் டப்பட்டவன்.
நானறிய, இலங்கையில் மக்களாட்சி தொடங்கிய காலத்திலிருந்தே இந்தப் பகுதி மக்கள் தமிழ் என்ற சொல்லுக்குள் அடங்கிச் செயற்பட்டு வருவதை நான் அறிவேன். நானிருக்கும் இடம், அந்த நாளிலிருந்தே முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் அமரர் அ. அமிர்தலிங்கத்தின் கோட்டையாகக் கருதப்பட்ட இடம் என்பது குறிப்பிடத்தக்கது. இப்போது விரக்தியடைந்த மக்கள் மாற்றுக் கட்சிகளை நாடு வதைக் கண்டு வேதனையடைகிறேன். எனவே எனது நிலைக்கு இரங்கி, என்னை இந்தக் கிராமத்துக்குப் பிரயோசனமானவனாக ஆக்கி வைக்க வேண்டியது சம்பந் தப்பட்டவர்களின் கடமை என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அநாதை வீதி,
பனிப்புலம், செட்டி குறிச்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஜப்பான் நாட்டு நாய் ஒன்றின் இரட்டைக் கின்னஸ் சாதனை

ரோக்கியோ, ஏப்.1
ஜப்பானிய நாய் ஒன்று பந்தின் மேல் நின்று உருட்டிப் பயணம் செய்து சாதனைப் பதிவில் இடம் பிடித்துள்ளது. 10 வயதான பியூரின் எனப்படும் நாயே இந்தச் சாதனையைப் படைத்துள்ளது.
கடந்த வருடமும் இது ஒரு நிமிடத்தில் அதிகமான பந்துகளைக் கால்களால் பிடித்த நாய் என்னும் சாதனையைப் படைத்து பரபரப்பை ஏற்படுத்தியது. தற்போது பந்தின் மேல் நின்று 10 மீற்றர் தூரத்தை அதிவேகமாக உருட்டிச் சாதனை படைத்துள்ளது. 10.39 செக்கன்கள் நேர அளவில் பதிவு இடம்பெற்றுள்ளது.
ரோக்கியோவில் மக்கோட்டோ குமாகாய் என்பவர் இந்த நாயை வளர்த்து வருகின்றார். பந்தின் மேல் சமநிலையில் 11.9 செக்கன்கள் இருந்து சாதனைப் பதிவை இது ஏற்படுத்தியுள்ளது.
சர்வதேச நாய்கள் தினத்தில் இந்த இரட்டைச் சாதனைப் பதிவை பியூரின் ஏற்படுத்தியது. அது தனது சுய முயற்சியில் இரட்டைச் சாதனைப் பதிவை நிகழ்த்தி சுப்பர் ஸ்ராராக மாறியுள்ளது எனக் கின்னஸ் சாதனைப் பதிவின் தலைமை அதிகாரி தெரிவித்துள்ளார். (த-ரி4)

## 103 அரசியல் கைதிகளைக் கொன்ற சிறை அதிகாரிக்கு 20 வருடச் சிறை



ரோம், ஏப்.1
103 அரசியல் கைதிகளுக்குச் சாவுத் தண்டனை வழங்கிய சிறை அதிகாரிக்கு 20 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்துள்ளது ரோம் நீதிமன்றம். 1956 ஆம் ஆண்டில் இருந்து 1963 ஆம் ஆண்டு வரை ரம்நிசு சரத் சிறையில் கடைமையாற்றிய அலக்சான்று விசினெ ஸ் என்ற சிறை அதிகாரிக்கு கைதிகளைக் கொலை செய்த குற்றச்சாட்டில் 20 ஆண்டுகள்சிறைத்தண்டனைவிதிக்கப்பட்டுள்ளது.
இதேவேளை, அயன் பிசியர் எனும் பெயர் கொண்ட சிறை அதிகாரி, 1958 ஆம் ஆண்டில் இருந்து 1963 ஆம் ஆண்டு வரை பெரிப்பிராவா முகாமுக்கு தலைமை அதிகாரியாகக் கடைமையாற்றி வந்தார். இங்கு கைதிகளாகச் சிறை வைக்கப்பட்டவர்கள், அடித்துத் துன்புறுத்தப்பட்டதுடன், உணவு, மருந்துகள் என்பவற்றுக்குப் பற்றாக்குறை நிலவியது. குளிர்காலங்களில் சிறைச்சாலைக் கைதிகள் குளிரால் பாதிக்கப்பட்டனர் என அயன் மீது குற்றம் சுமத்தப்பட்டது. இவற்றை மறுத்த அயன், நான் சுயமாகச் செயற்படவில்லை. எனக்கு கொடுக்கப்பட்ட கட்டளையை நிறைவேற்றினேன் எனத் தெரிவித்தார். அத்துடன் அவருக்கு மேன் முறையீட்டுக்கான அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. (த-ரி4)

## அமெ. அதிகாரிகளின் குடும்பங்களை துருக்கியிலிருந்து வெளியேற உத்தரவு

இஸ்தான்புல், ஏப். 1
பாதுகாப்பு அச்சுறுத்தல் காரணமாக அமெரிக்கத் தூதரக அதிகாரிகள் மற்றும் இராணுவப் பணியாளர்களது குடும்பத்தாரைத் துருக்கியின் தெற்கு பகுதியிலிருந்து வெளியேறுமாறு அமெரிக்க வெளியுறவுத்துறை மற்றும் பென்டகன் உத்தரவிட்டுள்ளது.
துருக்கி அரசுக்கும் குர்து படைகளுக்கும் ஏற்படுத்தப்பட்ட போர் நிறுத்த உடன்படிக்கை கடந்த ஜூலை மாதம் முறிவடைந்ததை அடுத்து அங்கு மோதல்கள் தீவிரமடைந்துள்ளன. இந்த நிலையில், அமெரிக்கக் குடிமக்களுக்கு மேம்படுத்தப்பட்ட பயண எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது. அத்துடன், அங்குள்ள விமானத் தளத்தில் உள்ள அமெரிக்க அதிகாரிகளின் உறவுகளை உடனடியாக வெளியேறுமாறும் வலியுறுத்தப்பட்டுள்ளது.
சர்வதேச மற்றும் அமெரிக்க சுற்றுலாப் பயணிகள் வெளிப்படையாக சர்வதேச மற்றும் உள்நாட்டுப் பயங்கரவாத அமைப்புகளால் இலக்கு வைக்கப்பட்டுள்ளதாக வெளியுறவுத்துறையின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
எனவே அமெரிக்க பிரஜைகள் தனிப்பட்ட பாதுகாப்பை உறுதி செய்து கொள்வதுடன், அனைத்துத் தருணங்களிலும் விழிப்புடன் செயற்பட வேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டுள்ளது. (த)

# பெல்ஜியப் பி... குறிவைத்துள்...

## பொலிஸ் விசாரணையில் வெளியானது

பிரஸ்சல்ஸ், ஏப்.1
ஐ.எஸ். அமைப்பு, பெல்ஜியப் பிரதமரைக் கொலை செய்யத் திட்டமிட்டிருந்ததாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.
கடந்த வாரம் விமான நிலையத்தில் இடம்பெற்ற குண்டுவெடிப்பின் பின்னர் குற்றவாளிகளைக் கண்டு பிடிக்கப் பொலிசார் அதிரடித் தேடுதல்கள், சுற்றிவளைப்புகளை நடத்தி வருகின்றனர். இவற்றின் போது பெறப்பட்ட கணினி ஒன்றில், பெல்ஜியப் பிரதமர் ஐ.எஸ். அமைப்பினரால் குறி வைக்கப்பட்டிருப்பதாக அறியப்பட்டுள்ளது. அவரது பட...
அலுவலகம், வீடு என்பவை அந்தக் கணி...
இருந்ததாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்...
மேலும், விமான நிலையக் குண்டுவெடி...
தொடர்புடையவர் எனச் சந்தேகிக்கப்பட்ட...
இருப்பிடத்தைப் பொலிசார் சுற்றி வளைத்...
அந்த அடுக்குமாடிக் குடியிருப்பின் குப்பைத்...
யினுள் கணினி ஒன்று பெறப்பட்டுள்ளது. ...
கணினியில் பெல்ஜியப் பிரதமரின் தகவல்க...
மல்லாமல், நகர அமைப்பு, அரச திணைக்கள...



## ரயிலில் ஒரு முறை பயணிக்... 2 லட்சத்து 50 ஆயிரம் ரூ...

புதுடில்லி, ஏப்.1
இந்தியாவில் புராதன ரயில்கள் 34 வருடங்களின் பின்னர்பொதுமக்களின்பாவனைக்குவிடப்பட்டுள்ளன. சக்கரங்களைக் கொண்ட அரண்மனை என விவரிக்கப்படும் இந்த ரயில், உலகப் பொருளாதார மந்த நிலை காரணமாக 2007 ஆம் ஆண்டில் இருந்து 2009 ஆம் ஆண்டு வரை போக்குவரத்துக்குப் பயன்படுத்தப்படாமல் நிறுத்தப்பட்டு இருந்தது. நேற்று முன்தினம் இந்த ரயில் போக்குவரத்து மீண்டும் ஆரம்பிக்கப்பட்டது.
ரயில் முகாமையாளர் தெரிவிக்கையில், ...
அளவு இடப் பதிவுகளுடன் ரயிலை இயக்க...
குறிப்பிட்ட அளவு இருக்கைகள் மாத்தி ர...
நிலையில் இதன் பயணச் சீட்டுக்கான தெ...
அதிகமாகும். ஹோலி பண்டிகை தினத்த...
பெற்ற போக்குவரத்தில் 8 வெளிநாட்டுசுற்று...
கள் பயணித்தனர். 104 இருக்கைகளைக்...
இந்த ரயிலில் ஒரு தடவை பயணிக்க 2 ல...
ஆயிரம் இந்திய ரூபா அறவிடப்படுகிறது...



கனேடியப் பிரதமரான ஜஸ்டின் ரூடோ யோகாசனப் பயிற்சியில் ஈடுபட்டிருக்கும் படம் இ... வைரலாகப் பரவி வருகின்றது. உலக அரசியல் தலைவர்களுள் சிலரே இவ்வாறான உடற் ப... தம்மை ஈடுபடுத்தி வருகின்றனர். முன்னதாக ரஷ்ய ஜனாதிபதி புடின் உடற்பயிற்சி செய்யும்... வெளியிட்டு மக்களின் அபிமானத்தைப் பெற்றார். அத்துடன் அமெரிக்க அதிபர் நடனம்... வலைப்பந்து விளையாட்டில் ஈடுபட்டதும் மக்கள் கவனத்தை ஈர்த்தமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதமரை

# ள்ள ஐ.எஸ்

## பானது தகவல்

ு. அவரது படங்கள்,
அந்தக் கணினியில்
ரிவித்துள்ளனர்.
குண்டுவெடிப்புடன்
தேகிக்கப்பட்டவரின்
சுற்றி வளைத்தனர்.
பின் குப்பைத் தொட்டி
ப்பட்டுள்ளது. இந்தக்
ரின் தகவல்கள் மட்டு
ரச திணைக்களங்கள்,

ஐரோப்பிய ஒன்றியக் கட்டடங்கள் என்பவற்றின் படங்களும் காணப்பட்டதாக உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.
இந்தப் படங்கள் பெறப்பட்டதில் இருந்து மூன்று வெடி குண்டுத்தாக்குதல்களும்எவ்வாறு இடம்பெற்றுள்ளன என்பதை அறியக் கூடியதாக உள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர். விமான நிலையம் மீண்டும் இயங்க ஒரு மாத காலம் ஆகும். கட்டடம் சேதமடைந்ததுடன் இரத்தக் கறைகள் காய்ந்தும் காணப்படுகின்றன என விமான நிலைய அதிகாரி தெரிவித்துள்ளார். (த-ரி4)



## ணிக்க

## ூ ரூபா

ிவிக்கையில், குறைந்த
ரியிலை இயக்க முடியாது.
ககள் மாத்தி ரமே உள்ள
சீட்டுக்கான தொகை மிக
ாடிகை தினத்தன்று இடம்
வளிநாட்டுசுற்றுலாப்பயணி
ருக் கைகளைக் கொண்ட
பய ணிக்க 2 லட்சத்து 50
றவிடப்படுகிறது.
(த-ரி4)




க்கும் படம் இணையத்தில்
றான உடற் பயிற்சிகளில்
பிற்சி செய்யும் படங்களை
அதிபர் நடனம் ஆடியதும்,
டத்தக்கது. (த-ரி4)

# போரினால் சிரியாவின் பொருளாதாரச் சேதம் 200 பில்லியன் டொலர்

## ஜனாதிபதி அசாத் தெரிவிப்பு

டமஸ்கஸ், ஏப்.1
சிரியாவில் இடம்பெற்ற 5 வருடப் போரினால் 200 பில்லியன் டொலர் பெறுமதியான சொத்துகள் தேமடைந்துள்ளதாக அந்த நாட்டு ஜனாதிபதி பசார் அல் அசாத் தெரிவித்துள்ளார். ரஷ்ய தொலைக்காட்சி ஒன்றுக்குப் பேட்டியளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
பொருளாதார ரீதியில் விரைவில் முன்னேற்றம் அடைவோம் என்ற நம்பிக்கையுள்ளது. ஆனால் சிரியாவின் கட்டுமானத்தை மீளமைக்க நீண்ட சமாதான உடன்பாடு அவசியம் எனவும் அவர் தெரிவித்தார்.
மனிதாபிமான நெருக்கடி குறித்து அவர் எந்தக் கூற்றையும் வழங்கவில்லை.
அரை மில்லியன் மக்கள் கொல்லப்பட்டதுடன், 4 மில்லியன் சிரியர்கள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர். இந்த நிலையில், பொருளாதார ரீதியிலும், கட்டுமான ரீதியிலும் 200 பில்லியன் டொலர் சேதம் ஏற்பட்டுள்ளதாக அசாத் தெரிவித்துள்ளார்.
பொருளாதார இழப்பீட்டைவிட, மனித வள இழப்பீடு அதிகமாகும். ஐ.நா வின் அகதிகள் எண்ணிக்கையில் சிரிய அகதிகள் 4.3 மில்லியன் எண்ணிக்கையில் காணப்படுவதாகவும், உலக அகதிகள் எண்ணிக்கையில் இது அதி கூடிய எண்ணிக்கை எனவும் தகவல் வெளியாகியுள்ளது.
தொலைக்காட்சிச் செவ்வியில், சிரியாவில் நிலவி வரும் போர் நிறுத்தம் குறித்தும் ஜனாதிபதி அசாத் கருத்துத் தெரிவித்துள்ளார்.
அரச படைகளுக்கும், போராளிக் குழுக்களுக்கும் இடையில் உடன்பாடு ஏற்பட்டுள்ளது என்றும், இந்தச் சமாதானப் பேச்சில் அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் தமது பங்களிப்பை வழங்கின எனவும் அவர் தெரிவித்தார். (த-ரி4)





# தரிப்பிடத்தில் நிறுத்தப்படாத தங்கக் கார்கள்

லண்டனில் கார் நிறுத்துமிடத்தில் தங்கக் கார்களை நிறுத்தாமையால் அவற்றுக்குக் குற்றப்பணம் அறவிடப்பட்டுள்ளது.
லம்போர்கினி அவன்ரடோர், ரோல்ஸ் ரோய்ஸ், மெர்சிடஸ் மற்றும் பென்ட்லி வகை தங்கக் கார்களுக்கே குற்றப்பணம் விதிக்கப்பட்டுள்ளது. பணத்தைச் செலுத்திவிட்டே கார்களை எடுத்துச் செல்லலாம் என உரிமையாளர்களிடம் பொலிஸார் தெரிவித்தனர். இதற்கிடையில் மக்கள் பலர் சாலையில் சாதாரணமாக நிறுத்திவைக்கப்பட்ட தங்கக் கார்களுடன் ஒளிப்படம் எடுத்துக் கொண்டனர். மெர்சிடிஸ் மற்றும் பென்ட்லி வகைக் கார்களுக்குகுற்றப்பணம் 80 பவுண்ஸ் களும், 14 நாள்களுள் செலுத்தினால் அது 40 பவுண்ஸ்களாகக் குறைக்கப்படும் என வும் பொலி சார் தெரிவித்தனர். கார்களின் உரிமையாளர்சவூதிஅரேபியாவில் உள்ளார் எனவும் தகவல் வெளியாகியுள்ளது. இந்தக் கார்கள் மத்திய லண் டனின் கிங்ஸ் பிறிச் பகுதியில் உள்ள யுமேரியா கார்ல்டன் ஹோட் டலுக்கு வெளியில் நிறுத்தப்பட்டுள்ளன. (த-ரி4)


# பெறுகைகள் அறிவித்தல் - 2016 / 17

## வவுனியா பொது வைத்தியசாலை

## 2016 ஆம் ஆண்டுக்குத் தேவையான வழங்கல்கள் / சேவைகள்

வவுனியா பொது வைத்தியசாலைக்குப் பின்வரும் வழங்கல் சேவைகளுக்கான பெறுகைகள் **2016 மே முதலாம் திகதி முதல் 2017 சித்திரை 30ஆம்** திகதி வரையான காலப்பகுதிக்கு கோரப்படுகின்றன.

**1. வழங்கல்கள் / சேவைகளின் விவரமும் வைப்புத் தொகைகளும்**

| இல | விவரம் | மீளளிக்கப்படாத வைப்புத்தொகை (ரூபா) | கேள்வி பிணை (ரூபா) |
|---|---|---|---|
| அ) | உணவு விநியோகித்தல் | 1000.00 | 100000.00 |
| ஆ) | அழுக்கு துணிகளைச் சலவை செய்தல் | 1000.00 | 15,000.00 |
| இ) | குளிரூட்டி பராமரிப்பு | 1000.00 | 15,000.00 |
| ஈ) | பிணவறை குளிரூட்டி பராமரிப்பு சேவை | 1000.00 | 10,000.00 |
| உ) | மின் உயர்த்தி பராமரிப்பு சேவை | 2000.00 | 25,000.00 |

**2. பெறுமதி ஆவணம்/ கேள்வி பிணை**

**31.07.2016** வரை செல்லுபடியாகக் கூடிய அங்கீகரிக்கப்பட்ட அரச வங்கி ஒன்றிலிருந்து பெற்றுக் கொண்ட கேள்வி பிணை முறி ஒன்று ஒவ்வொரு கேள்விப் பத்திரத்துடனும் இணைக்கப்பட வேண்டும்.

**3. வைப்புக்கள் / மீளளிக்கப்படாத வைப்பு**

பொது வைத்தியசாலை, நிதி முகாமைத்துவ அலகில் உள்ள கொடுப்பனவுக்கிளையில் பணம் செலுத்தி தனித்தனியாக பெறுகைகளுக்கான பற்றுச்சீட்டைப் பெற்றுக்கொள்ளலாம்.

**4. வியாபாரப்பதிவு சான்றிதழ்**

பெறுகைப்பத்திரம் கோரும் நிறுவனாங்கள் வியாபாரப் பதிவு படிவத்தின் மூலப்பிரதியின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதியை விண்ணப்பத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

**5. அனுபவ சான்றிதழ்**

கடந்தகால. நிகழ்கால அனுபவசான்றிதழ்களையும் பெறுகை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். உணவு விநியோகித்தலுக்காக விண்ணப்பிப்பவருக்கு ஆகக் குறைந்தது இரண்டு வருடங்கள் அரசாங்க நிறுவனத்துக்கு இடையீடின்றி உலர் உணவு வழங்கிய பூரண அனுபவமிருத்தல் வேண்டும்.

**6. பெறுகைப் படிவங்கள் / ஆவணங்கள்**

பெறுகை ஆவணங்கள் **28.03.2016 ஆம் திகதி தொடக்கம் 18.04.2016 ஆம் திகதி பிற்பகல் 3 மணி வரையும்** வவுனியா பொது வைத்தியசாலை நிதி முகாமைத்துவப் பிரிவில் வேலை நேரங்களில் வழங்கப்படும். பெறுகைப் படிவங்கள் அனைத்தும் இரு பிரதிகளில் முதலாம் பிரதி. இரண்டாம் பிரதி எனக் குறிப்பிட்டு அனுப்பப்படல் வேண்டும்.

**7. பெறுகைகள் விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முறை**

சகல முத்திரையிடப்பட்ட பெறுகைகளும் "**தலைவர் , பெறுகைகள் குழு, பொது வைத்தியசாலை, வவுனியா**" என்ற முகவரிக்குப் பதிவு தபாலில் அனுப்பப்படுதல் வேண்டும். கடிதத்தில் இடதுபக்க மேல் மூலையில் வழங்கல்கள் / சேவைகள் 2016.... எனக் குறிப்பிட்டு இங்கு கோடிட்ட இடத்தில் சேவையின் தன்மையும் குறிப்பிடப்படல் வேண்டும். நேரடியாக வழங்கினால் பெற்றுக்கொண்டதற்கான பற்றுச்சீட்டு வழங்கப்படும்.

**8. இறுதித் திகதி**

சகல முத்திரை இடப்பட்ட பெறுகைகளும் **20.04.2016 முற்பகல் 10.30** மணிவரை மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.

**9. பெறுகைகள் திறத்தல்**

பெறுகை நேரம் முடிவடைந்ததை அடுத்து பெறுகைப்பத்திரங்கள் **20.04.2016 முற்பகல் 10.30** மணிக்கு திறக்கப்படும். விண்ணப்பதாரரோ அல்லது எழுத்து மூலம் நியமிக்கப்பட்ட பிரதிநிதியோ பெறுகைகள் திறக்கும்போது சமுகமளிக்கலாம். பெறுகை நிபந்தனைகளுக்கு அமைவாக அனுப்பப்படாத ஆவணங்களும் பூரணமாக நிரப்பப்படாத நடைமுறை விலைகளுடன் ஒவ்வாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும். மேற்படி பெறுகை கோரல்களை இரத்துச்செய்யவோ. நிறுத்திவைக்கவோ, பகுதியாக வழங்குவதற்கோ புதிதாகக் கோருவதற்கோ பெறுகைகள் குழுவுக்கு பூரண அதிகாரமுண்டு. பெறுகை தொடர்பான பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும். மேலதிக விவரங்களை **024 3241 561, 024 222 2761** என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு அறிந்து கொள்ளலாம்.

**பெறுகைகள்குழு தலைவர்,**
**வடமாகாண பெறுகைகள் குழு,**
**வடமாகாண சுகாதார சேவைகள் திணைக்களம், வடமாகாணம்.**

(சி/22407)
(1.17.12)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராகு கேது
## பெயர்ச்சிப் பலன்கள்



*(ராகு கேது பெயர்ச்சிப் பலன்கள் வரிசையில் மீன ராசிக்காரர்களுக்கான பலன்கள் பற்றிய விவரங்கள் இன்றும் தொடர்கின்றன )*

**மீனம்**

**கேதுவின் பலன்கள்**

இதுவரை உங்களின் ராசியிலேயே அமர்ந்து கொண்டு ஆரோக்கியக் குறைவையும், மனதில் ஒருவித பதட்டத்தையும் தந்து உங்களை விரக்தியின் விளிம்புக்கே அழைத்துச் சென்ற கேது, இப்போது 12ஆம் வீட்டில் சென்று மறைகிறார். எனவே, மனப் போராட்டங்கள் ஓயும். சின்னதாக ஒரு நெஞ்சு வலி வந்தாலும், பெரிய நோய் ஏதேனும் இருக்குமோ என்ற பயம் இனி விலகும். ஆரோக்கியம் சீராகும்.

வாழ்க்கையின் நெளிவு, சுளிவுகளைக் கற்றுக்கொள்வீர்கள். உங்கள் பேச்சில் அனுபவ அறிவு வெளிப்படும். கோபம் குறையும். களையிழந்திருந்த உங்கள் முகம் இனி மலரும். தாழ்வு மனப்பான்மையிலிருந்து விடுபடுவீர்கள். மற்றவர்களின் உள்மனதைப் புரிந்துகொண்டு செயற்படத் தொடங்குவீர்கள்.

**கேதுபகவானின் நட்சத்திர சஞ்சாரம்**

உங்கள் ராசிநாதனும்–ஜீவனாதிபதியுமான குருவின் பூரட்டாதி நட்சத்திரத்தில் 8.1.2016 முதல் 12.7.2016 வரை கேதுபகவான் செல்வதால் உங்களுடைய நிர்வாகத்திறன், ஆளுமைத்திறன் அதிகரிக்கும். திடீர் பணவரவு உண்டு. இரு சக்கர வாகனத்தை மாற்றி, நான்கு சக்கர வாகனம் வாங்குவீர்கள். பொது விழாக்கள், சுப நிகழ்ச்சிகளில் முதல் மரியாதை கிடைக்கும். நீண்ட காலமாகப் போக வேண்டுமென்று நினைத்திருந்த புண்ணிய தலங்களுக்குச் சென்று வருவீர்கள். ராகுவின் சதயம் நட்சத்திரத்தில் 13.7.2016 முதல் 20.3.2017 வரை கேதுபகவான் செல்வதால், ஏதோ ஒன்றை இழந்ததைப் போல அவ்வப்போது இருப்பீர்கள்.

கடந்த காலத்தில் ஏற்பட்ட நம்பிக்கைத் துரோகமான செயல்களை நினைத்து வருந்துவீர்கள். சந்தேகத்தால் நல்லவர்கள் நட்பை இழக்க நேரிடும். உங்கள் தன– பாக்யாதிபதியான செவ்வாயின் அவிட்டம் நட்சத்திரத்தில் 21.3.2017 முதல் 25.7.2017 வரை கேதுபகவான் செல்வதால் மன இறுக்கங்கள் குறையும். எதிர்பார்த்திருந்த தொகை கைக்கு வரும்.

குடும்பத்தில் உங்கள் கை ஓங்கும். பெரிய மனிதர்களின் நட்புக் கிடைக்கும். சகோதரங்கள் பக்கபலமாக இருப்பார்கள். அங்கு, இங்கு புரட்டி ஏதாவது ஒரு வீடோ, மனையோ வாங்கி விட வேண்டுமென முயற்சிப்பீர்கள். வியாபாரத்தில் இரட்டிப்பு இலாபம் உண்டாகும். வேலையாள்கள், வாடிக்கையாளர்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். பழைய பங்குதாரர் மீண்டும் வந்து இணைவார். உத்தியோகத்தில் உங்கள் கை ஓங்கும். அலுவலகப் பிரச்சினைகள் நீங்கி நிம்மதி பிறக்கும். நீங்கள் விருப்பப்பட்ட இடத்துக்கே இடமாற்றம் கிடைக்கும். சக ஊழியர்கள் உங்கள் ஆலோசனைக்கு முக்கியத்துவம் தருவார்கள். அதிகாரிகள் நினைப்பதை முடித்துக் காட்டுவீர்கள். இந்த ராகு–கேது மாற்றம் அடிமைபட்டுக் கிடந்த உங்களை விஸ்வரூபமெடுக்க வைப்பதுடன் திடீர் யோகங்களையும், வெற்றியையும் அள்ளித் தருவதாகவும் அமையும்.

(முற்றும்)



"இந்தத் தொலைபேசிப் பாவனையால் நன்மைகளும், தீமைகளும் சரிசமமாக உள்ளன. இதில் நன்மையும், தீமையும் அவரவர் செயல்களைப் பொறுத்ததே."

# காத்திருக்க வைக்கும் தொலைபேசிப் பாவனை

இணுவில் சுகி

மனிதன் ஆரம்ப காலத்தில் தனது கருத்துக்களை வெளிப்படுத்த சைகைகளைப் பயன்படுத்தினான். பின்பு நாகரிகம் வளர வளர நவீன கண்டுபிடிப்புக்களின் பயனாக ஒருவரோடு ஒருவர் தொடர்பு கொள்ளவும் தகவல்களைப் பெற்றுக் கொள்ளவும், பிறருக்குத் தெரிவிக்கவும் பல்வேறு கருவிகள் பயன்படுத்தப்பட்டன.

அந்த வகையில் ஒருவரோடு ஒருவர் தொடர்பு கொள்ள தொலைபேசிகள், மின் இலத்திரனியல் சாதனங்கள், பிற சமூக வலைத் தளங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

காலத்துக்குக் காலம் புதிய கண்டுபிடிப்புக்கள் கண்டுபிடிக்கப்பட்டாலும், தொலைபேசிப் பாவனையே பெருமளவில் புழக்கத்தில் காணப்படுகிறது. இந்தத் தொலைபேசியானது கிராமம்நகரம், படித்தவன்–பாமரன் என்ற வித்தியாசம் இல்லாத விதத்தில் அனைவரும் பயன் படுத்தும் ஒரு சாதனமாகவே கொள்ளப்படுகிறது.

இந்தத் தொலைபேசிப் பாவனையால் நன்மைகளும், தீமைகளும் சரிசமமாக உள்ளன. இதில் நன்மையும், தீமையும் அவரவர் செயல்களைப் பொறுத்ததே.

இங்கு நான் நன்மை தீமைகளைப் பற்றி ஆராயவில்லை. அதனை எங்கு, எந்தச் சந்தர்ப்பத்தில் பயன்படுத்த வேண்டும் என்பதையே ஞாபகமூட்ட எண்ணுகின்றேன்.

தொலைபேசிப் பாவனையானது வைத்தியசாலை, பாடசாலைகள், அரச தனியார் நிறுவனங்கள் சேவை நிலையங்கள் என்று பல இடங்களிலும் பரந்தளவில் உள்ளது. ஒவ்வொரு தனிமனிதனுக்கும் தொழிலில் சுயதேவைகள், விருப்பு, வெறுப்புக்கள் காணப்படுவது இயல்பே. ஆனால், ஒருவரின் தனிநலன் நாடிய செயற்பாட்டால் பொது நலன் பாதிக்கப்படக்கூடாது என்பதே எனது அவா.


சில அரசதனியார் வைத்தியசாலைகளிலும் சரி, அரச பொது நிறுவனங்களிலும் சரி, இன்னும் பிற அலுவலகங்களிலும் சரி, நோயாளர்களையோ அல்லது வேறு தேவைகளுக்கு வருவோரையோ, கண்டும் காணாதது போல இருந்து, தமது கடமை நேரத்தில் சுயநலன் உடையவர்களாய் தமது தனிப்பட்ட தேவைகளுக்கு தொலைபேசியைப் பயன் படுத்துகிறார்கள். இதனால் வீணான மனச் சஞ்சலங்களும், அதிருப்தியும் நேர விரயமும் ஏற்படுகின்றன.

ஒரு சில விநாடிகளோ, நிமிடங்களோ பேசினாலும் பரவாயில்லை. நீண்ட நேரம் உரையாடுவதால் பல சிரமங்களை ஏனையவர்கள் எதிர்கொள்கின்றனர்.

எனவே முடிந்தவரை இவ்வாறான செயற்பாடுகளைத் தவிர்த்து தேவைக்கன்றி அனாவசிய தொலைபேசிப் பாவனையைக் குறைத்துத் தேவைகளை நிறைவேற்றிக்கொள்ள வருவோரின் தேவையறிந்து முகம் கோணாமல் அவர்களுக்கு உதவ வேண்டும்.

தற்போது இவ்வாறான நடவடிக்கைகள் அதிகம் காணப்படுவதால் தொலைபேசி என்பது தொல்லை தரும் பேசியாக மாறிக் கொண்டிருக்கிறது. எனவே இதனை மனதில் இருத்தி சம்பந்தப்படும் தரப்பினர் செயற்பட்டால் நல்லதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# போதைக்குள் புதையும் நல்வாழ்வு

மல்லாவிக் கஜன்

ஓ கடவுளே! மூளையைத் திருடிச்செல்லும் ஒரு எதிரியை இந்த மனிதர்கள் தங்கள் வாய்க்குள் விட்டுக்கொள்கிறார்களே! அறிஞர் எட்வட்ரௌர்கி ஸ்ன்பவர் மதுப்பழக்கம் பற்றி வேடிக்கையாகக் கூறிய கருத்துப்பற்றி சற்றுச் சிந்திக்க வேண்டிய நிலைக்கு இன்று நாம் தள்ளப்பட்டுவிட்டோம். மது பற்றிய சிந்தனைப்போக்கானது இன்று நேற்று தொடங்கப்பட்டதொன்றல்ல. கல்தோன்றி மண்தோன்றா காலத்தின் முன்தோன்றிய மூத்தகுடி; தமிழ்க்குடி என புகழாரம் சூட்டப்படுவதுபோன்று, மதுவுக்கும் மிக நீண்ட தொன்மையும், பாரம்பரியமும் காணப்படுவதை பல்வேறு இலக்கிய மூலாதாரங்கள் மூலம் அறிய முடிகின்றது. 2.3 மில்லியன் வரையான மக் கள் தொகையை கொண்ட இலங்கை உலக வரைபடத்தில் ஓரிடத்தில் ஒதுங்கிப் போயிருந்தாலும், சிற்சில விடயங்களில் உலகளாவிய ரீதியில் பேசப்படுகின்றது.

**இலக்கியங்களில் மிளிரும் மதுப்பாவனைக் கருத்துக்கள்**

மதுப்பாவனையின் தொடக்கம் பற்றி அறிய முற்படுகையில் புராதன கால இலக்கியங்களும், இதிகாச சான்றுகளும் போதிய அளவில் இதற்கு விளக்கமளித்து விடுகின்றன. இராமாயண கால கட்டத்திலேயே மதுப்பாவனை இருந்தமைக்கான சான்றுகள் உள்ளன. நூறு நூறு குடங்கள்ளும் நுங்கினான்... என இராவணனது தம்பியான கும்ப கர்ணன் குறித்த கூற்றின் வாயிலாக இது தெளிவாகிறது. மேலும், இந்துமதம் சார்ந்த வேதநூல்களில் சோமபானம் எனப்படும் மது, தெய்வங்களுக்கு மக்களால் படைக்கப்பட்டு பூசிக்கப்பட்டுள்ளதை வேத மந்திரங்கள் உறுதி செய்கின்றன. இன்றும் சில தெய்வங்களுக்கு சாராய பூசைகள் மேற்கொள்ளப்படும் வழக்கம் எமது சமூகத்தில் நிலவி வருவதைக் காணலாம்.

**போதையின் பாதையில்**

நவீன விஞ்ஞான கண்டுபிடிப்புகளுக்குள் மூழ்கிப்போயுள்ள இன்றைய சமுதாயம், மதுவுக்குள் தன் வாழ்வைத் தொலைத்துள்ள நிலையிலும், அது தொடர்பில் எதுவும் அலட்டிக்கொள்ளாமல் கால் போன போக்கில் பயணித்துக் கொண்டிருக்கின்றது. போதைக்கு அடிமையாகி பேதையாகிப் போகும் மனித வாழ்வை, போர்த்து மூடிக்கொண்டிருக்கும் உயிரற்ற வெறும்கூடுகளாக நாம் உலா வருகின்றோம் என்பது நுணுக்கமாக ஆராயப்பட வேண்டியதொன்று. மது உள்ளே போக, மதி வெளியே போகும் என்பதாய் மதிகெட்ட மாந்தராய் அலையும் மனிதப்பிறவிகளாக எம்மில் பெரும்பாலானோர் மாறி விட்டார்கள். சங்க காலத்திலே. போருள் உழன்று, மாதர்கள் மீது மயங்கி வாழ்வைத் தொலைத்த மனிதன், 21ஆம் நூற்றாண்டில் போதைக்குள் மூழ்கித் தன் வாழ்வைத் தானே தீயிட்டு கருக்கிக் கொள்கின்றான் பண்டைக் காலத்தில் கீழைத்தேச நாடுகளான இந்தியா, இலங்கை உள்ளிட்டநாடுகளில் பாவனையிலிருந்த மதுபான வகைகள் தயாரிப்பதற்கு இயற்கையிலிருந்து பெறப்பட்ட கள் பயன்படுத்தப்பட்டது. காலப்போக்கில் நவீன தொழில்நுட் பங்களின் வருகையைத் தொடர்ந்து புதுவருவாய்களான ஏகப்பட்ட போதைப் பொருள்கள் எம்மை அறியாமலே எம்மீது திணிக்கப்பட்டு வருகின்றன.

**இலங்கையில் போதைப்பொருள் பாவனை**

அண்மைக் காலமாக இலங்கையின் போதைப்பொருள் பாவனையானது வெகுவாக அதிகரித்து வருவதாகத் தேசிய போதைப்பொருள் தடுப்புச் சபை எச்சரித்துள்ளது. குறிப்பாக இளம் சமுதாயத்தினரின் மீது திட்டமிட்ட ரீதியில் போதைப்பொருள்களின் பாவனை திணிக்கப்பட்டு வருவதாகக் கண்டறியப்பட்டுள்ளது. அண்மைக்கால ஆய்வொன்றின் பிரகாரம், இலங்கையில் 40 ஆயிரத்துக்கும் அதிகமானோர் போதைப்பொருள் பாவனைக்கு நிரந்தர அடிமைகளாக மாறியிருப்பது கண்டறியப்பட்டுள்ளது. ஈதையில் அற்ககோல் எனப்படும் பதார்த்தமே மதுவில் காணப்படுகிறது. தற்காலத்தில் பெயர் குறிப்பிட்டுகூறமுடியாத அளவுக்கு ஏகப்பட்ட மதுபான வகைகள் அறிமுகமாகியிருக்கின்றன. ஹெறோயின் மற்றும் கஞ்சா, கசிப்பு முதலான போதைப் பொருள்களின் பாவனையானது துரித அதிகரிப்புக் கண்டுள்ளது. இவற்றுள் இறுதியாக குறிப்பிடப்பட்ட கசிப்பு எனும் மதுபான வகையானது, நஞ்சுக்கு நிகரானது. மீதையின் அற்ககோல் இதில் 95 வீதம் காணப்படுகிறது. இது மிகவும் நச்சுத்தன்மை உடையதொன்றாகும். இதிலிருந்தே ஏழைகளின் இரட்சகன் எனப்படும் கசிப்பு உற்பத்தி செய்யப்படுகிறது. இலங்கையிலும், தமிழகத்திலும் குடிசைக் கைத்தொழிலாக மேற்கொள்ளப்பட்டு வந்த கசிப்பு உற்பத்தியானது, தற்போது பிரபல்யமான உற்பத்தி நடவடிக்கையாக மாறியிருப்பதுடன், தனக்கான அடிமைகளின் தொகையையும் அதிகரிக்கச் செய்துள்ளது. இலங்கையைப் பொறுத்தவரை பாடசாலை மாணவர்கள் மத்தியில் போதைப் பொருள்களது பாவனை திட்டமிட்ட ரீதியில் பரப்பப்படுவதாகப் பலரும் கருத்துத் தெரிவிக்கின்றனர். அது உண்மையும் கூட. பள்ளி செல்லும் மாணவனது காற்சட்டை பைக்குள் கஞ்சா போதைப் பொருள் கண்டெடுக்கப்பட்ட சம்பவங்களும் வடக்குப் பகுதியின் பிரபல பாடசாலைகளில் இடம்பெற்றிருக்கின்றமை வியப்பையும், வேதனையையும் தருகிறது. போதைப்பொருள்கள் வெவ்வேறு வடிவங்களாகத் தயார் செய்யப்பட்டு விநியோகிக்கப்படுதலானது பாவனையை சூட்சுமமாக மேற்கொள்ள வாய்ப்பளிக்கிறது. இலங்கையர்களில் ஏறத்தாழ 6 லட்சம் வரையான கஞ்சா பாவனையாளர்கள் இருப்பதுடன், 1980க்குப் பின்னர் ஹெரோயின் போதைப்பொருளின் பாவனையும் அதிகரித்துள்ளது. எமது நாட்டைப் பொறுத்த வரை அண்மைக்காலமாக சிறுவர்களே போதைப் பொருள் பாவனைக்கு பெருமளவில் அடிமையாக இருக்கின்றமை கண்டறியப்பட்டிருக்கிறது. இதற்கு மேலாக ஆண்களைப் போன்று பெண்களும் போதைப் பொருள் பாவனைக்குச் சளைத்தவர்கள் அல்லர் என்பதை நிரூபித்து வரும் சம்பவங்களும் பரவலாக இடம்பெற்று வருகின்றன.

**உடலைத் தாக்கும் போதைப் பொருள்கள்**

மதுப்பாவனை மற்றும் போதைப் பொருள்களின் பாவனையானது மனித உடற்கலங்களை வெகுவாகச் செயலிழக்கச் செய்வதாக மருத்துவ ஆராய்ச்சிகள் தெளிவு படுத்துகின்றன. குறிப்பாக வெறுவயிற்றிலே உட்கொள்ளப்படும் அற்ககோல் இரைப்பையினால் மிகவேகமாக உறிஞ்சப்படுகிறது. இது இரத்த ஓட்டத்துடன் வெகுவாகக் கலப்புற்று ஒவ்வொரு திசுக்களிலும் இணைந்து உடற்கலங்களை துரிதமாகச் செயலிழக்கச் செய்து விடுகிறது. குறிப்பாக போதைப் பொருள்களது பாவனை காரணமாக மூளை, சிறுநீரகம், ஈரல், தசைகள், நரம்பு மற்றும் என்புகள் உடலின் கீழ்ப்பாக உறுப்புக்கள் என்பவை முழுமையாகவோ அல்லது பகுதியளவிலோ செயலிழக்கின்றன. குடி குடியைக் கெடுக்கும் எனக் கூறி வைத்திருக்கின்றனர். இது உண்மையே. குடிப்பழக்கமுடைய ஒருவனது செயற்பாடு, அவனை மாத்திரமன்றி, அவனது குடும்பத்தையும் செயலிழக்கச் செய்வதுடன் நிற்காது, ஒட்டுமொத்த நாட்டின் எதிர்காலத்தையுமே கேள்விக்குறியாக்கி விடுகிறது. குடிகாரன் பேச்சு விடிந்தால் போச்சு. ஆயினும் அவன் வாழ்வு சாவின் முடிவாக ஆவதை எவராலும் தடுத்துவிட முடியாது என்பதும் கவனிக்க வேண்டியதாகும்.

மேலும், வாழ்க்கையில் மகிழ்ச்சி அற்றுப் போவதுடன், முன்னேற்றமும் தடைப்பட்டு விடுகின்றது. அத்துடன் குடும்பத்தில் பிள்ளைகளின் கல்விச் செயற்பாடுகளும் மந்தமாகி, பிள்ளைகளும் தந்தையின் செயற்பாட்டைப் பார்த்து பின்பற்றக்கூடியதொரு சூழல் ஏற்படுகின்றது.

வாகனங்களைச் செலுத்தும்போது போதைப்பொருள் களை அருந்திவிட்டு செலுத்திச் செல்வதால் விபத்துக்கள் நேரவழியேற்படுகிறது. வேலைவாய்ப்புகளைப் பெறுவதில் சிரமமேற்படுகின் றது. இந்த வகையில் அமெரிக்காவில் புகழ்பெற்ற கடிலாக் மோட்டார் நிறுவனம் பின்வருமாறு ஒரு விளம்பரத்தை வாசலில் வைத்திருப்பது குறிப்பிடத்தக்க தாகும். "மது அருந்துபவர்கள், சிகரெட் பிடிப்பவர்களை எமது நிறுவனம் வேலைக்கு அமர்த்துவதில்லை" போதைப்பொருள் பாவனையில் ஈடுபடும் மாணவர்களின் கல்வி நடவடிக்கை சீரழிந்து போவதுடன், இத்தகைய செயற்பாட்டால் கொலை, கொள்ளை, கற்பழிப்பு முதலான சமூக விரோதச் செயற்பாடுகளும் தலை தூக்குகின்றன. உயர்கல்வி நடவடிக்கைகளுக்காகக் குடும்பங்களைப் பிரிந்து நகரங்களில் தங்கியிருக்கும் மாணவிகள் மதுபோதையில் உழலும் வீடியோ காட்சியொன்று அண்மையில் இணையத்தளங்களில் தீயாகப் பரவியிருந்து. இவ்வாறு நோக்குகையில் எமது சமுதாயமானது போதையின் பாதைக்கு ஆண், பெண் வேறுபாடற்று அடிமையாகி விட்டது என்பது தெளிவு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வர்ணம் தீட்டுவோம் வாங்க....



உதயன் சிறுவர் பகுதியில் 'வர்ணம் தீட்டுவோம் வாங்க' என்ற தலைப்பில் வெளியிடப்படும் சித்திரங்களை, சிறுவர்கள் பலர் ஆர்வத்துடன் வர்ணம் தீட்டி அவற்றை எமக்கு அனுப்பியும் வைத்து வருகின்றனர். அவர்களுக்கு உற்சாக மூட்டும் வகையில் கச்சிதமான விதத்தில் வர்ணம் தீட்டப்படும் சித்திரங்கள் இந்தப் பகுதியில் வெளியிடப்படும்.



சுதன்,
கனகரத்தினம் மகா வித்தியாலயம்.

# எது இல்லை

வேலனும் பாலனும் எட்டாம் வகுப்பில் படித்து வந்தனர். இருவரும் இணைபிரியாத நண்பர்கள்.

ஆசிரியர்கள் சொல்லிக் கொடுக்கும் பாடங்களையெல்லாம் உற்றுக் கேட்டு மனதில் நன்றாக இருத்திக் கொள்ளும் இயல்புடையவன் வேலன்.

பாலனோ இதற்கு நேர்மாறானவன். பாடவேளையின்போது பக்கத்தில் அமர்ந்திருக்கும் பையன்களிடம் அரட்டை அடிப்பதும், அங்கும் இங்கும் வேடிக்கை பார்ப்பதுமாகப் பொழுது போக்குவான். அப்படியே பாடத்தைக் கேட்டாலும் அரைகுறையாகவும் அலட்சியமாகவும் காது கொடுப்பான். அதனாலேயே தேர்வுகளில் அவனுக்கு மதிப்பெண்கள் குறையும். காலையிலும் மாலையிலும் வீட்டில் படிக்கும்போது கூட கவனத்தைச் சிதற விடுவான். எப்போதுமே திசைமாறும் நினைவுகள்தான் அவனுக்கு.

ஒருநாள் தமிழாசிரியர் "பாலா... நீ படாத பாடுபட்டுப் படித்தேன் என்று சொன்னாயே? ஆனால், தமிழ்ப் பாடத் தேர்வில் மிகக் குறைந்த மதிப்பெண் அல்லவா வாங்கி இருக்கிறாய்?" என்றார்.

"நான் விழுந்து விழுந்துதான் படித்தேன். உயிரை விட்டு உருப்போட்டும் பார்த்தேன்... என்னவென்று தெரியவில்லை சேர். எதுவும் என் மண்டையில் ஏறமாட்டேன் என்கிறது. அதற்கு என்ன செய்வது என்று தெரியவில்லை சேர்" – என்றான் பாலன்.

"அப்படி அல்ல பாலா.. உன் நண்பன் வேலன் படிப்பில் கவனம் செலுத்துவதைப் போல் நீயும் கவனம் செலுத்தினால் நிச்சயம் கல்வியில் தேர்ச்சிஅடைவாய்" என்றார் தமிழாசிரியர்.

"நான் படிப்பில் கவனமாயில்லை என்று நீங்கள் எப்படிச் சேர் சொல்றீங்க" என்று கேட்டான் பாலன்.

"சரி..அப்படியானால் உனக்கு இப்போது ஒரு சின்னச் சோதனை வைக்கிறேன். அதில் நீ வெற்றி அடைந்துவிட்டால் உனக்கு ஞாபக சக்தி அதிகம்தான் என்பதை ஒப்புக் கொள்கிறேன்" என்றார் ஆசிரியர். 'சரிசேர்' என்றான் பலா.

'அவல் இருந்தால் பலகாரம் பண்ணலாம். ஆனால் சர்க்கரை இல்லை என்றால் இவற்றில் எது இல்லை? எங்கே... தாமதிக்கலாம் 'டக்' கென்று பதில் சொல்லு பார்ப்போம்" என்றார் ஆசிரியர்.

"அவல் இல்லை...."என்றான் பாலன்.

தமிழாசிரியர் வேலனிடம் கேட்டார். "என்ன வேலா! நீ சொல்லு"



"இரண்டுமே இல்லை சேர்" என்றான் வேலன்!

"பாலா, உன்னிடம் கவனக்குறைவு உள்ளது" என்றார் தமிழாசிரியர்.

"என் கேள்வியை நீ நன்றாகப் புரிந்துகொள்ள வேண்டும். 'அவல் இருந்தால்'எனும் போதே 'அவல் இல்லை' என்ற பொருள் தொக்கி நிற்கிறது. 'சர்க்கரை இல்லை' எனும்போது சர்க்கரையும் இல்லை என்று வெளிப்படையாகவே தெரிகிறது. என்ன இல்லை? என்பதுதான் கேள்வி. இதற்கு நீ கூறவேண்டிய பதில் "இரண்டுமே இல்லை' என்பது தானே? வேலன் என் கேள்வியை நன்றாகப்புரிந்து கொண்டு கவனமாக 'இரண்டுமே இல்லை' என்று சரியான பதிலைக் கூறினான். ஆகவே கேள்வியைக் கவனமாகப்புரிந்து கொண்டு பொருத்தமான பதிலைக்கூற வேண்டும்" என்றார்.

அப்போதுதான் பாலனுக்குப்புரிந்தது.

ஆழ்ந்த கவனமே கல்வி வளர்ச்சிக்கு அடிப்படை என்று தமிழாசிரியர் கூறியதைக் கவனமாகக் கேட்டுக்கொண்டிருந்த பாலன் தன்னிடமுள்ள குறைபாட்டை உணர்ந்துகொண்டான்.



# வரலாற்றில் இன்றைய தினம்

325 – முடிக்குரிய இளவரசர் ஜின் செங்கடி, பேரரசராக்கப்பட்டார்.

1625 – டச் – போர்த்துக்கேயப் போரின்போது ஸ்பானிஷ் மற்றும் போர்த்துக்கேய கப்பல்கள் 52 இணைந்து பாஹியாவை மீளக் கைப்பற்றத் தொடங்கின.

1867 – பிரிட்டிஷ் முடிக்குரிய ஆட்சிக்குள் சிங்கப்பூர் வந்தது.

1873 – 19ஆம் நூற்றாண்டின் மிக மோசமான கடல் விபத்தாக, நோவா ஸ்கொட்டியாவுக்கு அப்பால், வைற்ஸ்ரார் நிராவிக் கப்பலான ஆர்.எம்.எஸ் அட்லான்டிகா கடலில் மூழ்கி 547பேர் சாவு.

1887 – பம்பாயில் தீயணைப்புப் படை நிறுவப்பட்டது.

1889 – வட கொலோறடோ பல்கலைக்கழகம் நாட்டின் சாதாரண பாடசாலையாகத் தொடங்கப்பட்டது.

1918 – றோயல் பிளையிங் படையும் றோயல் கடல் விமான சேவையும் இணைந்து றோயல் ஏயர்போஸ் உருவாக்கப்பட்டது.

1924 – 'பீர் ஹோல் புட்ஷ்' இல் பங்கு கொண்டமைக்காக அடொல்ப் ஹிட்லருக்கு5ஆண்டுகள்சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

1924 – றோயல் கனடியன் விமானப்படை உருவாக்கப்பட்டது.

1935 – இந்தியாவின் மத்திய வங்கியான 'றிசேவ் பாங் ஒப் இந்தியா' உருவாக்கப்பட்து

1936 – கலிங்கம் என அறியப்பட்ட ஒரிஷா இந்திய மாநிலங்களில் ஒன்றானது.

1941 – 200 தொடக்கம் 2000 வரையான றோமானிய குடிமக்கள் சோவியத் எல்லைப் படைகளால் கொல்லப்பட்டனர்.

1941 – ஈராக்கில் இடம்பெற்ற இராணுவ சதிப் புரட்சியில் அப்ட் அல்லாஹ் ஆட்சி தூக்கி வீசப்பட்டு, றஷீ அலி அல் ஹய்லானி பிரதமரானார்.

1949 – ஐரிஷ் நாட்டின் 26 மாநிலங்கள் இணைந்து அயர்லாந்து உருவானது.

1971– பங்களாதேச விடுதலைப் போர். பங்களாதேச கெரனிகள் உபஷிலா பகுதியில் 1000க்கும் மேற்பட்ட பொது மக்கள் பாகிஸ்தான் இராணுவத்தால் படுகொலைசெய்யப்பட்டனர்.

1973 – இந்திய ஜிம்கோர்பெற் தேசிய பூங்காவில் புலிகளைப் பாதுகாக்கும் செயற்றிட்டம் தொடங்கப்பட்டது.

1978 – பிலிப்பைன்ஸ் வர்த்தகக் கல்லூரி பிலிப்பைன்ஸ் பல் தொழில்நுட்ப பல்கலைக்கழகமாகியது.

1979 – ஷா ஆட்சியை முடிவுக்குக் கொண்டுவந்து ஈரான் இஸ்லாமிய மக்கள் குடியரசு 99 வீதமான மக்கள் ஆதரவுடன் உருவாகியது.

2001 – போர்க்குற்ற விசாரணைக்கு உட்படுவதற்காக யூகோஸ்லேவியா சமஷ்டி மக்கள் குடியரசின் முன்னாள் ஜனாதிபதி ஸ்லோபோடன் மைலோசெவிக் பொலிஸ் விசேட படையினரிடம் சரணடைந்தார்.

2001 – நெதர்லாந்தில் ஒரேபால் இனத் திருமணம் சட்ட பூர்வமானது.

2009 – கொறேஷியா, அல்பேனியா ஆகிய நாடுகள் நேட்டோவில் இணைந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அ.அஜித்

# இந்து ஆலயக் கோபுரத்தில் புதைந்துள்ள அறிவியல் உண்மை

முற்காலத்தில் ஊரில் கோயில் கோபுரத்தை விட உயரமாக எந்தக் கட்டடமும் இருக்கக் கூடாது என்று ஓர் எழுதாத சட்டம் இருந்தது. என்ன காரணம்? கோயில்களையும் உயரமான கோபுரங்களையும் அதன் மேல் இருக்கும் கலசங்களையும் பார்த்திருப்பீர்கள். அவற்றின் பின் ஒளிந்திருக்கும் ஆன்மிக உண்மை பலருக்குத் தெரியவில்லை. ஆனால் அவற்றின் பின் எவ்வளவு பெரிய அறிவியல் ஒளிந்திருக்கிறது என இப்போது தான் எம்மில் பலருக்குத் தெரிகிறது.

கோபுரத்தின் உச்சியில் தங்கம், வெள்ளி, செம்பு, உள்ளடங்கிய ஐம்பொன்னால் செய்யப்பட்ட கலசங்கள் இருக்கும். இந்தக் கலசங்களில் கொட்டப்படும் தானியங்களும், உலோகங்களும் மின்காந்த அலைகளை ஈர்க் கும் சக்தியைக் கலசங்களுக் குக் கொடுக்கின்றன. நெல், உப்பு, கேழ் வரகு, தினை, வரகு, சோளம், மக்காச் சோளம், சாமை, எள் ஆகியவற்றைக் கொட்டி வைத்துள்ளனர். காரணத்தைத் தேடிப்பார்த்தால் ஆச்சரியமாக இருக்கின்றது. வரகு மின்னலைத் தாங்கும் அதிக ஆற்றலைப் பெற்றிருப்பது என இப்போதைய அறிவியல் கூறுகிறது.

இவ்வளவு தானா? இல்லை பன்னிரண்டு வருடங்களுக்கு ஒருமுறை குடமுழுக்கு விழா என்ற பெயரில் கலசங்களில் இருக்கும் பழைய தானியங்கள் நீக்கப்பட்டு புதிய தானியங்கள் நிரப்பப் படுகின்றன. அதை இன்று சம்பிரதாயமாக மட்டுமே கடைப்பிடிக்கிறார்கள். காரணத்தைத் தேடினால், அந்தத் தானியங்களுக்குப் பன்னிரண்டு வருடங்களுக்குத்தான் அந்தச் சக்தி இருக்கின்றது. அதன் பின்னர் அவை செயலிழந்து விடுகின்றன. இதை எப்படி அப்போது எமது முன்னோர் அறிந்திருந்தார்கள்? ஆச் சரியம்தான்.

**பன்னிரண்டு வருடங்களுக்கு ஒருமுறை குட முழுக்கு விழா என்ற பெயரில் கலசங்களில் இருக்கும் பழைய தானியங்கள் நீக்கப்பட்டு புதிய தானியங்கள் நிரப்பப்படுகிறது. அதை இற் றைக்கு சம்பிரதாயமாகவே மட்டும் கடைப்பிடிக் கிறார்கள்.**

அவ்வளவுதானா? அதுவும் இல்லை. இன்றைக்கு பெய்வதைப் போன்று மூன்று நாள்களா மழை பெய்தது அன்று? தொடர்ந்து மூன்று மாதங்கள் பெய்தது. ஒருவேளை தானியங்கள் அனைத்தும் நீரில் மூழ்கி அழிந்து போனால், மீண்டும் எதை வைத்துப் பயிர் செய்வது? இவ்வளவு உயரமான கோபுரத்தை நீர் சூழ வாய்ப்பில்லை. இதையே மீண்டும் எடுத்து விதைக்கலாமே!

ஓர் இடத்தில் எது மிக உயரமான இடத்தில் அமைந்த இடிதாங்கியோ அதுதான் முதலில் மின்னோட்டத்தை ஏற்கும். மேலும் அது எத்தனை பேரைக் காப்பாற் றும் என்பது அதன் உயரத்தைப் பொறுத்தது. உதாரணமாக, கோபுரத்தின் உயரம் ஐம்பது மீற்றர் என்றால், நூறு மீற்றர் விட்டம் வரைக்கும் பரப்பில் எத்தனை பேர் இருந்தாலும் அவர்கள் இடிதாக்காமல் காக்கப்படுவார்கள். அதாவது 75008 ச.மீற்றர் பரப்பளவி லிருக் கும் மனிதர்கள் காப்பாற்றப்படுவார்கள்!

சிலகோயில்களுக்கு நான்கு வாயில்கள் உள்ளன. அவை நாலாபுறமும் 7;500 சதுர மீற்றர் பரப்பளவைக் காத்து நிற்கின்றன. இது ஒரு தோராயமான கணக்குத்தான். இதைவிட உயரமான, இதைவிட அதிகமான பணிகளை சத்தமில்லாமல் செய்து வரு கின்றன ஆலயக் கோபுரங்கள். கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்ற பழமொழி பொருத்தமாக இருக்கின்றதல்லவா?

[illegible]

# பிரஸ்சல்ஸ் நகரம் குறி வைக்கப்பட்டது ஏன்?

பாரிஸ் நகரில் தொடர் குண்டுவெடிப்புக்குக் காரணமான சலா அப்தெஸ்லாம் பெல்ஜியத்தில் பதுங்கியிருந்ததைக் கண்டுபிடித்து, கைது செய்து ஒப்படைத்த ஒரே காரணத்துக்காக பயங்கரவாதிகளின் தாக்குதலுக்கு இலக்காகி இருக்கிறது பெல்ஜியத்தின் தலைநகர் பிரஸ்ஸல்ஸ். இதுவரை 35 பேர் உயிரிழந்துள்ளனர்.

2015 ஆம் ஆண்டு நவம்பர் 13 ஆம் திகதி பாரிஸ் நகரில் நடைபெற்ற தொடர் குண்டுவெடிப்பில் 130 பேர் உயிரிழந்த சம்பவத்தில் தொடர்புடைய பயங்கரவாதிகளில் பிடிபடாமல் தப்பித்துத் தலைமறைவாக இருந்த சலா அப்தெஸ்லாம் என்கிற ஐ.எஸ். பயங்கரவாதி, பெல்ஜியத்தில் மார்ச் 18 ஆம் திகதி பிடிபட்டார். அடுத்த நாளே துருக்கியில், இஸ்தான்புல் நகரில் ஒரு தற்கொலைத் தாக்குதல் நடத்தப்பட்டது. அடுத்து, மார்ச் 22 ஆம் திகதி பிரஸ்சல்ஸ் நகரில் தொடர்த் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது.


ஐரோப்பிய ஒன்றியத்தில் பிரஸ்சல்ஸ் நகரைத் தேர்வு செய்யக் காரணம் இங்கேதான் ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைமைச் செயலகம் உள்ளது. நேட்டோ தலைமை அலுவலகமும் இங்குதான் உள்ளது. பிரஸ்சல்ஸ் மிகவும் முக்கியமான நகரம் என்றாலும், எளிமையான, பாதுகாப்புப் பந்தாக்கள் இல்லாத நகரம். அதனால், ஐ.எஸ். பயங்கரவாதிகள் இந்த நகரைத் தேர்வு செய்திருக்கக் கூடும்.

மேலும், இஸ்லாமியர்களை அதிகமாகக் கொண்டிருக்கும் ஐரோப்பிய நாடு பெல்ஜியம். பாரிஸ் தாக்குதலில் ஈடுபட்ட பெரும்பாலான பயங்கரவாதிகள் பிரஸ்சல்ஸ் நகரத்தை அடுத்த மொலன்பீக் என்கிற ஊரைச் சேர்ந்தவர்கள். சலா அப்தெஸ்லாமின் கைதைத் தொடர்ந்து தாக்குதல் நடைபெறக்கூடும் என்று எதிர்பார்த்ததாக பெல்ஜியம் பிரதமர் சாள்ஸ் மிக்கேல் கூறுகிறார். பிறகு ஏன் அவர் பாதுகாப்பு நடவடிக்கைகளை முடுக்கிவிடவில்லை?

பெல்ஜிய அரசின் அலட்சியம்தான் இத்தனை பெரிய பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. தற்போது பிரஸ்சல்ஸ் விமான நிலையத்தில் தற்கொலைத் தாக்குதல் நடத்தியுள்ள இப்ராஹிம் அல் பக்ரூயி கடந்த ஆண்டு இறுதியில், துருக்கியிலிருந்து வெளியேற்றப்பட்டவர். இது குறித்து பெல்ஜியம் அரசுக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது என்று துருக்கி அதிகாரிகள் கூறுகின்றனர். அப்படித் தகவல் கிடைத்தும்கூட, அவரைக் கண்காணிக்கத் தவறியது ஏன்?

பாரிஸ் தாக்குதலில் ஈடுபட்ட பிலால் ஹட்லி என்பவர் ஜிகாதி என்று அடையாளம் காணப்பட்டும், அவரைப் போதுமான பலமில்லாத பெல்ஜியம் பொலிஸார் தவறவிட்டனர். விசாரணை செய்யப்பட்ட இப்ராஹிம் அப்தெஸ்லாம் தொடர்ந்து கண்காணிக்கப்படாததால் தப்பி விட்டார். அவரது சகோதரரும் இப்போது கைது செய்யப்பட்டிருப்பவருமான சலா அப்தெஸ்லாமும் கூட, சிரியாவுக்கு ஜிகாதியாகப் பயணித்திருக்கிறார். தனது சாரதி அனுமதிப் பத்திரத்தைக் காட்டி பிரான்ஸில் வெடிமருந்து வாங்கியிருக்கிறார். போதுமான கண்காணிப்பும், தகவல் பரிமாற்றமும் இருந்திருந்தால், பாரிஸ், பிரஸ்சல்ஸ் தாக்குதல்களைத் தடுத்திருக்க முடியும்.

பெல்ஜியம் சம்பவத்திலிருந்து உலக நாடுகள் பாடம் படிக்க வேண்டியிருக்கிறது. பயங்கரவாதத்தை எதிர்கொள்ள புலனாய்விலும், பொலிஸ் துறையிலும் நிறைய முதலீடு செய்யப்பட்டாகவேண்டும். இப்படி பொதுமக்கள் மீது தாக்குதல் நடத்திப் பீதியைப் பரவ விடுவது பயங்கரவாதிகளின் பைத்தியக்காரத்தனம் என்று நினைக்கக்கூடாது. ஐ.எஸ். பயங்கரவாதிகளுக்கு அதற்கான தேவை இருக்கிறது.



கடந்த 2015 ஜனவரி முதல் ஈராக், சிரியா பகுதியில் தன்வசமிருந்த 22 வீத இடங்களை இழந்து பெரும் பின்னடைவைச் சந்தித்து வருகிறது ஐ.எஸ். இந்த நிலையில் தனது போராளிகளின் உணர்வுகளையும், வேகத்தையும் தக்க வைக்க இதுபோன்ற தாக்குதல்கள் தேவைப்படுகின்றன.

அதுமட்டுமல்ல, இப்படித் தாக்குதல்கள் நடைபெறும்போது, பரவலாக இஸ்லாமியர்கள் மீது சந்தேகமும், வெறுப்பும் அதிகரித்து, ஏனைய சமூகத்தினர் அவர்களைத் தனிமைப்படுத்துவார்கள். இதனால் எரிச்சலும் கோபமும் அடையும் இஸ்லாமிய இளைஞர்கள் பயங்கரவாதிகளாகத் தங்கள் பின்னால் அணிதிரள்வார்கள் என்பதுதான் ஐ.எஸ். அமைப்பின் எதிர்பார்ப்பு. அதற்காகவும்கூட இந்தத் தாக்குதல்கள் நடத்தப்படுகின்றன.

பயங்கரவாதத்தை வெறும் பொலிஸ் கண்காணிப்பு, புலனாய்வு ஆகியவற்றால் மட்டுமே தடுத்துவிட முடியும் என்று தோன்றவில்லை. உலகம் முழுவதும் உள்ள இஸ்லாமிய அமைப்புகள், கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைந்து, ஐ.எஸ்., அல்குவைதா அமைப்புகளைக் கண்டிப்பதும், அவற்றுக்கான நிதியுதவிகளை நிறுத்துவதும், அவரவர் குடும்பங்களில் உள்ள அங்கத்தினர்கள் எவரும் அவர்களது மூளைச் சலவைக்கு ஆட்படாமல் பார்த்துக் கொள்வதும்தான் இத்தகைய பயங்கரவாதத் தாக்குதல்களைத் தடுத்து நிறுத்தும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்:** மனதில் குழப்பம் உருவாகி மறையும். தொழில், வியாபாரத்தில், நிர்வாகச் செலவு அதிகரிக்கும். இலாபம் சுமார். பிள்ளைகளின் செயற்பாடு, மனநிம்மதிக்கு வழிவகுக்கும்.

**இடபம்:** பணியை நிறைவேற்றுவதில், தாமதம் ஏற்படலாம். தொழில், வியாபாரத்தில், அதிக முயற்சி தேவைப்படும். மிதமான இலாபம் கிடைக்கும். பணியாளர்கள், நிர்வாகத்தின் சட்டதிட்டங்களை மதிப்பது நல்லது.

**மிதுனம்:** இடையூறுகளை சமயோசிதமாகச் சரி செய்வீர்கள். தொழிலில், விற்பனை அதிகரிக்கும். ஆதாயம் உயரும். நிலுவைப் பணம் அதிர்ஷ்டவசமாகக் கிடைக்கும். உறவினர் வருகையால், மகிழ்ச்சி உண்டாகும்.

**கடகம்:** மகிழ்ச்சியான நிகழ்வை நண்பரிடம் பேசி மகிழ்வீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால், வருமானம் அதிகரிக்கும். பிள்ளைகளின் தேவை அறிந்து நிறைவேற்றுவீர்கள். அரசியல்வாதிகள் நற்பெயர் பெறுவர்.

**சிங்கம்:** அவசரப்பணியில் ஈடுபட நேரிடலாம். தொழில், வியாபாரத்தில், குளறுபடி உருவாகலாம், கவனம். இலாபம் சுமாராக இருக்கும். மனைவியின் ஆலோசனை நிம்மதிக்கு வழிவகுக்கும்.

**கன்னி:** கடினமான பணிகளில் ஈடுபட நேரிடலாம். தொழில், வியாபாரத்தில், திட்டமிட்ட இலக்கு நிறைவேற கால அவகாசம் தேவைப்படும். இலாபம் சுமார். பிள்ளைகள் உதவிக்கரமாகச் செயற்படுவர்.

**துலாம்:** நேர்மையுடன் செயற்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில், வருமானம் படிப்படியாக உயரும். நிலுவைப் பணம் கிடைக்கும். பெண்கள், குழந்தைகளின் நலன் சிறக்க பணி மேற்கொள்வர்.

**விருச்சிகம்:** அறிமுகம் இல்லாதவரிடம் பொது விடயம் பற்றிப் பேச வேண்டாம். தொழில், வியாபார நடைமுறை, மந்தகதியில் இயங்கும். வருமானம் சுமாராக இருக்கும். பெண்கள் சிக்கனமாக இருப்பது நல்லது.

**தனுசு:** நண்பரிடம் கேட்ட உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில், வியத்தகு வளர்ச்சி உண்டாகும். உபரி வருமானம் கிடைக்கும். பெண்கள், வெகுநாள் வாங்க நினைத்த பொருளை வாங்குவர்.

**மகரம்:** முக்கிய மனிதர்களின் அறிமுகம் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில், வளர்ச்சிப் பணியில் ஈடுபடுவீர்கள். இலாபம் அதிகரிக்கும். பெண்கள், தாய் வீட்டினரின் ஆதரவு கிடைக்கப் பெறுவர்.

**கும்பம்:** உறவினர் செய்த உதவிக்கு நன்றி செலுத்துவீர்கள். தொழில், வியாபாரத்தில், வளர்ச்சி நிலை உருவாகும். எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கும். குடும்பத்தில் சுபநிகழ்ச்சி நடத்தத் திட்டமிடுவீர்கள்.

**மீனம்:** செயல்களில் நேர்த்தி நிறைந்திருக்கும். தொழில், வியாபாரத்தில், வளர்ச்சி இலக்கு நிறைவேறும். ஆதாயம் பெருகும். அரசு தொடர்பான உதவி கிடைக்கும். விருந்து விழாவில் பங்கேற்பீர்கள்.

# பி.சுசீலாவுக்கு கின்னஸ் கௌரவம்



பி.சுசீலா பதினைந்து வயதில் சென்னை வானொலியில் பாப்பா மலர் நிகழ்ச்சியில் பாடத் தொடங்கினார். இவரது இசைத் திறமையால் கவரப்பட்ட இயக்குநர் கே.எஸ்.பிரகாஷ் ராவ் தனது படத்தில் இவரை முதன்முதலாக பின்னணிப் பாடகராக பாட வைத்தார். 1955 இல் இவர் பாடிய "எந்தன் உள்ளம் துள்ளி விளையாடுவதும்..", "உன்னை கண் தேடுதே..." பாடல்களால் பிரபலமடைந்தார். பல போட்டியாளர்களுக்கு மத்தியில் தனித்தன்மை வாய்ந்த தனது குரல் இனிமையால் தொடர்ந்து பல மொழிகளில் ஹிட் பாடல்களைப் பாடி, அரை நூற்றாண்டுகள் தொடர்ந்து தடம்பதித்தவர் பி.சுசீலா.

இவர் இசைத்துறைக்கு வந்து 60 ஆண்டுகளுக்கும் மேல் ஆகிவிட்டது. இவர் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், ஹிந்தி உள்ளிட்ட பல்வேறு மொழிகளில் ஆயிரக்கணக்கான பாடல்களை பாடியுள்ளார். இவரது இத்தகைய நீண்ட இசைப் பயணத்தையும், சாதனையையும் பாராட்டும் விதமாக இவருக்கு கின்னஸ் கௌரவம் கிடைத்துள்ளது. அதிக பாடல்களைப் பாடியவர் என்ற சாதனைக்கு கின்னஸ் அங்கீகாரம் அளித்துள்ளது. 1960 முதல் இன்று வரை பி.சுசீலா 17 ஆயிரத்து 695 பாடல்களைப் பாடியுள்ளார்.

இவர் பாடிய டூயட் பாடல்கள் தென்னிந்திய திரையிசை உலகில் சரித்திரம் படைத்தன. குறிப்பாக, டி.எம்.சவுந்திரராஜனுடன் தமிழில் நூற்றுக்கணக்கான டூயட் பாடல்களைப் பாடியுள்ளார். விஸ்வநாதன் இசையமைப்பில் தொடங்கி, இளையராஜா, ஏ.ஆர்.ரஹ்மான் என ஏராளமான இசையமைப்பாளர்களின் இசையில் பாடியுள்ள இவர், 5 முறை தேசிய விருதுகள், பத்மபூசன் விருது, 10க்கும் மேற்பட்ட மாநில விருதுகள், கலைமாமணி பட்டம், ஆந்திர மாநில அரசு விருது போன்ற பல விருதுகளைப் பெற்றவர். தற்போது அதிகமாக பக்திப்பாடல்களில் கவனம் செலுத்தி வருகின்றார். பல்வேறு ஒடியோ நிறுவனங்களுக்காக ஆயிரத்துக்கும் மேற்பட்ட பக்திப் பாடல்களைப் பாடியுள்ளார்.










**வந்தியத்தேவன்** Mar 23
ஒரு வாரம் வீட்டுச் செலவை எல்லாம் பார்த்தா, இத்தனை நாள் சோறு போட்ட எங்க அப்பாவும் கடவுளாகத் தெரிகிறார்.

**Mr.வண்டு முருகன்** 18 Dec 2014
ஒரே மாதிரி உலகத்திலை ஏழு பேர் இருப்பாங்களாம், நம்ம நிலைமையோ மோசமாயிருக்கு, மிச்ச ஆறு பேரு எந்த நாட்டிலை எந்தத் தெருவிலை பிச்சை எடுத்துட்டு இருக்கிறாங்களோ...



ஒரு கணவனுக்கு தனது மனைவி வளர்த்து வந்த பூனையைக் கண்டால் மிகுந்த கோபம். அதை எப்படியாவது விரட்டி விட வேண்டும் என்று நினைத்தான். ஒரு நாள் அந்தப் பூனையைத் தூக்கிக் கொண்டு போய் இருபது வீடுகள் தள்ளி எறிந்து விட்டு வந்தான். வீட்டுக்கு வந்தால் பூனை வாசலில் நின்று கொண்டிருக்கிறது. அடுத்த நாள் அந்தப் பூனையை அடுத்த தெருவில் விட்டு விட்டு வந்தான். அன்றும் பூனை அவனுக்கு முன்னாள் வந்து மாடியில் இருந்து அவனைப் பார்த்துக் கொண்டிருந்தது.

வெறுப்படைந்த அவன் அடுத்த நாள் பூனையைக் காரில் ஏற்றிக் கொண்டு வலது புறம், இடது புறம் என்று மாறி மாறி நீண்ட தூரம் சென்று பூனையை விட்டுவிட்டு வந்தான். சிறிது நேரம் கழித்து கணவனிடமிருந்து மனைவிக்கு போன் வந்தது.

"உனது பூனை வீட்டுக்கு வந்து விட்டதா?" என்றான்.

ஆம்! என்றாள் அவள்.

"போனை பூனையிடம் கொடு. எனக்கு வீட்டுக்கு வர வழி தெரியவில்லை." என்றான் கணவன்.



# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | | 4 | | | | 3 | | 9 |
| | | | | | | | 1 | |
| | 3 | | 6 | 8 | | | | |
| | 5 | | | 4 | | | | |
| 2 | | | | | | 7 | | |
| 1 | | 8 | | 9 | | | | |
| | | | 3 | | 7 | | | |
| | 9 | | | | | | | 5 |
| 7 | | | | | | 2 | | 6 |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 7 | 8 | 3 | 9 | 2 | 4 | 1 | 5 |
| 1 | 9 | 5 | 7 | 6 | 4 | 8 | 3 | 2 |
| 3 | 2 | 4 | 5 | 1 | 8 | 7 | 9 | 6 |
| 2 | 8 | 9 | 1 | 4 | 3 | 6 | 5 | 7 |
| 5 | 1 | 6 | 9 | 8 | 7 | 3 | 2 | 4 |
| 4 | 3 | 7 | 2 | 5 | 6 | 9 | 8 | 1 |
| 8 | 5 | 3 | 6 | 7 | 1 | 2 | 4 | 9 |
| 9 | 6 | 2 | 4 | 3 | 5 | 1 | 7 | 8 |
| 7 | 4 | 1 | 8 | 2 | 9 | 5 | 6 | 3 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3 ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).

இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தட வைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப் பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நாளை**
**பங்குனி -20**
சனிக்கிழமை
02.04.2016
திதி: தசமி
பி.இ.03.08 வரை
நட்சத்திரம்: உத்தராடம்
மு.ப.10.13 வரை
ராகுகாலம்:
09.10-10.40 வரை
சுபநேரம்:
03.10-04.40 வரை



# நேற்றைய கடலுணவு விலை நிலவரம்

| | யாழ்ப்பாணம் | மன்னார் | கிளிநொச்சி | கொடிகாமம் | பருத்தித்துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 600 | 600 | 700 | 600 | 700 | 800 |
| நண்டு | 200 | 400 | 300 | 400 | 400 | 150 | – |
| கணவாய் | 500 | 600 | 500 | 450 | 600 | 650 | – |
| பாரை | 400 | 600 | 500 | 600 | 600 | – | 450 |
| சுறா | 500 | 600 | 600 | 800 | 700 | – | – |
| சீலா | 250 | 500 | 400 | 450 | 450 | 400 | 400 |
| விளை | 500 | 400 | 400 | 600 | 500 | 400 | 400 |
| முரல் | 250 | 350 | 350 | 400 | 300 | 300 | 350 |
| கும்பிளா | 300 | 400 | 300 | 400 | 400 | 400 | – |
| கிளாக்கன் | 600 | 800 | – | – | 450 | 600 | – |
| ஓரா | 400 | 400 | – | – | 300 | – | – |
| திரளி | 200 | 250 | 200 | 200 | 250 | 300 | – |
| நகரை | 150 | 250 | – | 250 | 300 | – | – |
| சூடை | 100 | 150 | 100 | 200 | 200 | 300 | – |
| ஒட்டி | 250 | 200 | 150 | 200 | 200 | – | – |
| திருக்கை | 150 | 350 | 200 | 300 | 300 | 300 | 130 |
| மதனம் | 150 | 250 | 180 | 200 | 250 | – | 200 |
| கொய் | 100 | 150 | 60 | 80 | 130 | 50 | – |
| பாலை | 350 | 200 | 250 | 300 | 400 | – | – |
| வாழை | 100 | 150 | 200 | 350 | 250 | 400 | 250 |

# மரக்கறிகளை வாங்கும்போது...

- இஞ்சி: லேசாகக் கீறிப் பார்க்கும்போது, தோல் பெயர்ந்து வருமானால் அது நல்லது. நார்ப் பகுதி குறைவாக இருக்கும்.
- கத்திரிக்காய்: தோல் வளவளப்பாக இருப்பதுபோல் பார்த்து வாங்கவும்.
- சுரைக்காய் : நகத்தால் அழுத்தினால் நகம் உள்ளே இறங்க வேண்டும். அப்போதுதான் பிஞ்சு என்று அர்த்தம்.
- பூண்டு: பல் பல்லாக வெளியே தெரிவது நல்லது. அவற்றைத் தெரிந்தெடுத்து வாங்கலாம்.
- பீன்ஸ்: பீன்ஸில் நார் அதிகம். புஷ் பீன்ஸில் நார் இருக்காது. தோல் அழகாக இருந்தால் சுவை அதிகமாக இருக்கும்.
- அவரை: தொட்டுப் பார்த்து விதைகள் பெரிதாக இருக்கும் காய்களைத் தவிர்ப்பது நல்லது. இளசாக வாங்கினால் நார் அதிகம் இருக்காது.
- பாகற்காய்: பெரிய பாகற்காயில் உருண்டையை விட, தட்டையான நீண்ட காய் நல்லது.
- வாழைப்பூ: மேல் இதழை விரித்து பூக்கள் கறுப்பாகாமல் வெளிர் நிறத்தில் இருக்கிறதா எனப் பார்க்கவும். அப்படி இருந்தால் புதியது என்று அர்த்தம்.
- மொச்சை: கொட்டை பெரிதாகத் தெரியும் காய்களைப் பார்த்து வாங்கவும்.
- முள்ளங்கி: லேசாக்க கீறினால் தோல் மென்மை யாக இருந்தால் அது பிஞ்சு– நல்ல காய்.
- வெள்ளரி: மேல் நகத்தால் குத்திப் பார்த்தால் நகம் உள்ளே இறங்கினால், நல்ல காய். விதை கள் குறைவாக இருக்கும்.
- பச்சை மிளகாய்: நீளமானது சற்றுக் காரம் குறைவாக இருக்கும். சற்றே குண்டானது தான் காரம் அதிகமாகவும் வாசனை பிரமாதமாகவும் இருக்கும்.

## செய்யும் முறை

- வறுத்த வேர்க்கடலையை ஒன்றிரண்டாகப் பொடித்துக் கொள்ளவும்.
- சீனியுடன் ஒரு கரண்டி நீர் கலந்து 2 நிமிடங்கள் அடுப்பில் வைத்து கரைய விடவும்.
- இதில் எசன்ஸ், கலர் பொடி, நெய், உடைத்த வேர்க்கடலை ஆகிய வற்றைக் கலந்து நன்கு கிளறவும்.
- சீனிப்பாகுடன் வேர்க்கடலை நன்கு சேர்த்த பிறகு, நெய் தடவிய தட்டில் கொட்டி தேவையான வடிவத்தில் வெட்டிக் கொள்ளவும்.
- வேர்க்கடலைக்குப் பதில், பொட்டுக் கடலையையோ, முந்திரியையோ சேர்த்தும் செய்யலாம்.

**தேவையானவை**

வேர்க்கடலை – 1 கப்
எசன்ஸ் – சில சொட்டுகள்
கலர்ப் பொடி – சிறிதளவு
சீனி – 1 கப்
நெய் – 2 தேக்கரண்டி



# வேர்க்கடலை இனிப்பு



# நேற்றைய மரக்கறி விலை நிலவரம்

| | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | நெல்லியடி | திருநெல்வேலி | கொடிகாமம் | சுன்னாகம் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 40 | 40 | 50 | 40 | 20 | 60 | 25 | 35 |
| கத்தரி | 60 | 50 | 70 | 70 | 40 | 80 | 40 | 40 |
| கரட் | 80 | 80 | 80–160 | 100 | 80 | 100 | 70 | 130 |
| மரவள்ளி | 40 | 50 | 40 | 40 | 50 | 40 | 35 | 45 |
| பயிற்றை | 60 | 40 | 80 | 40 | 30–60 | 40 | 30 | 70 |
| பாகல் | 100 | 100 | 100 | 100 | 80 | 120 | 100 | 80 |
| கருணைக்கிழங்கு | 100 | 70 | 80 | – | 60 | – | 50 | 60 |
| பெ.வெங்காயம் | 80 | 70 | 70 | 90 | 70 | 90 | 65 | 60 |
| சி.வெங்காயம் | 60 | 70 | 80 | 80 | 60 | 100 | 70 | 60 |
| பூசணி | 40 | 30 | 40 | 40 | 20–30 | 40 | 20 | 35 |
| தக்காளி | 40 | 40 | 30 | 40 | 40 | 40 | 25 | 30 |
| வாழைக்காய் | 50 | 40 | 50 | 30 | 30–40 | 40 | 35 | 30 |
| கீரை | 30 | 30 | 30 | 20 | 40 | 30 | 20 | 20 |
| பொன்னாங்காணி | 30 | 40 | 30 | 35 | 20 | 40 | 20 | 10 |
| பச்சை மிளகாய் | 80 | 100 | 100 | 60 | 70 | 120 | 80 | 100 |
| புடோல் | 40 | 50 | 50 | 60 | 50 | 40 | 30 | 40 |
| கோவா | 40 | 70 | 50 | 70 | 50 | 100 | 60 | 60 |
| வெண்டி | 80 | 60 | 50 | 60 | 80 | 60 | 50 | 60 |
| போஞ்சி | 160 | 120 | 120 | 140 | 80 | 120 | 100 | 130 |
| லீக்ஸ் | 120 | 120 | 100 | 140 | 120 | 120 | 100 | 90 |
| தேங்காய் | 40 | 40 | 50 | 30–50 | 35–40 | 40 | 35–45 | 30 |
| உருளைக்கிழங்கு | 80 | 80 | 70 | 85 | 80 | 90 | 65 | 120 |
| தேசிக்காய் | 100 | 160 | 120 | 120 | 180 | 400 | 150 | 200 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 20 | 10 | 20 | 10 | 10 |
| கறிமிளகாய் | 80 | 100 | 100 | 100 | 100 | 160 | 50 | 100 |
| இராசவள்ளி | 150 | 140 | 130 | 140 | 120 | 160 | 110 | 80 |
| முருங்கைக்காய் | 500 | 400 | 500 | 350 | 400 | 400 | 375 | 350 |
| பனங்கிழங்கு | – | 05 | – | – | 05 | – | – | – |




## 3டி பைகள்

3டி சைட் பாக்ஸ் அறிமுகமாகியுள்ளன. பொதுவான பாவனைக்கு பயன்படும் பெரிய பைகள், 3டி வடிவமைப்பில் உருவாக்கப்பட்டுள்ளன. கார்ட்டூன் உருவங்களை முப்பரிமாணமாக தொட்டு உணரக் கூடிய வகையில் பைகளில் இவை பொறிக்கப்பட்டுள்ளன. இவை ஒவ்வொன்றின் விலையும் 700 ரூபாவில் இருந்து [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ-சிறிலங்கா செயற்றிட்டம் வெற்றிகரமாக நிறைவு

சிறிலங்கா டெலிகொம் தனது ஐ-சிறிலங்கா செயற்றிட்டத்தை வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளது. இந்த நிறைவு விழா, கடந்த திங்கட்கிழமை "வோட்டேர்ஸ் எட்ஜ்" இல் நடைபெற்றது. ஐ-சிறிலங்கா செயற்றிட்டத்தின் பங்காளர்களான சற் ஈ மற்றும் ஹுவாவி ரெக்னொ லொஜி நிறுவனங்களின் பிரதான நிறைவேற்று அதிகாரிகளான, ஜோன் லீ, வான்ங்சுன்லி ஆகியோருடன், அந்த நிறுவனத்தின் பிரதிநிதிகளும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர். சிறிலங்கா டெலிகொம் சார்பில், அதன் தலைவர், குழும பிரதான நிறைவேற்று அதிகாரி, சபை உறுப்பினர்கள் மற்றும் அதிகாரிகள் பங்கேற்றனர்.

2005இல் சிறிலங்கா டெலிகொம் தனது வலையமைப்பை அடுத்த தலைமுறை வலையமைப்பாக தரமுயர்த்துவதற்கான ஒரு பெரிய செயற்றிட்டத்தை முன்னெடுத்தது. "எல்லைகளை விரிவாக்குதல்'' என்ற பிரதான நோக்கத்தின் கீழ் இது 2011இல் துரிதப்படுத்தப்பட்டு, நிறுவனத்தால் ஐ-சிறிலங்கா செயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இந்தச் செயற்றிட்டம் மூலமாக, இந்த நிறுவனமானது, நாட்டில் இணைய வசதியுள்ளோருக்கும் இல்லாதோருக்குமான இடைவெளி குறைக்கப்பட்டு, அனைவருக்கும் சர்வதேச தரமான தடையற்ற, நிலையான, அதிவேக இணையம் கிடைப்பதற்கு வழிசெய்திருக்கின்றது.




இந்த நிறுவனம், 90 வீதமான தனது வாடிக்கையாளர்களுக்கு வேகத்துடன் புரோட் பான்ட் இணைப்பை வழங்கி, அவர்களுக்கு முன்னெப்போதுமில்லாத இணைய அனுபவத்தை வழங்கியிருக்கிறது.

2015 டிசெம்பர் அளவில், நாடெங்கிலும் 4,500க்கு மேற்பட்ட புதிய பெறுவழி கணையங்கள் ஏற்படுத்தப்பட்டு, ஐ-சிறிலங்கா செயற்றிட்டத்தின் அனைத்து வேலைகளும் செய்து முடிக்கப்பட்டன. இதற்கான முதலீடு ரூ.13 பில்லியனையும் தாண்டியது.

இந்த ஐ-சிறிலங்கா செயற்றிட்டம் மூலமாக தற்போது நாடெங்கிலுமுள்ள பெரும்பாலான நகரங்களில் தற்போது புரோட்பான்ட் இணைப்பு கிடைக்கிறது. மேலும், இந்த முக்கியமான மைல் கல்லைத் தாண்டி, சிறிலங்கா டெலிகொம் 20 எம்பிஎஸ் வரையான தரவு வேகத்துடன் 1,300,000 புரோட்பான்ட் இணைப்புக்களையும், 100 தரவு வேகத்துடனான தனது முதலாவது எவ்ரிரிஎச் வலையமைப்புக்கும் ஆதரவளிக்கவுள்ளது. இதன் மூலம், 2016 இக்குள் சிறி லங்கா டெலிகொம் 70,000 இல்லங்களுக்கு இணைப்புகளை வழங்கும். இந்தச் செயற்றிட்டம் நிறைவடைந்ததன் மூலம், இலங்கை இணைய இணைப்பில் தெற்காசியாவிலேயே தன்னை முன்னிலைப்படுத்தியுள்ளது. இந்த வலையமைப்பானது, சகல இலங்கையர்களும் உலகத்தரமான தகவல், தொடர்பாடல் மற்றும் பொழுதுபோக்கு சேவைகளுடன் இடையறாது இணைந்திருக்கச் செய்ய வேண்டுமென்ற நிறுவனத்தின் தூர நோக்கு மூலம் ஊக்கமளிக்கப்பட்டு, குரல்வழி, தரவு மற்றும் காணொலி சேவைகளில் பல புதிய, சிறந்த உற்பத்திப் பொருள்கள் எதிர்காலத்தில் உருவாக்கப்படுவதற்கும் காரணமாகவுள்ளது.

(த)




# ஹேமாஸ் ஹொஸ்பிட்டல்ஸுக்குச் சான்றிதழ்

ஹேமாஸ் ஹொஸ்பிட்டல்ஸுக்கு மேலும் நான்காண்டுகளுக்கு முழுமையான சான்றுப்படுத்தலை உயர் மதிப்புமிக்க சர்வதேச சுகாதாரப் பராமரிப்புத் தரங்களுக்கான ஆஸ்திரேலிய கவுன்ஸில் வழங்கியுள்ளது. சர்வதேசத் தரங்களுக்குச் சமமாக செய்முறைகளையும் கட்டுப்பாடுகளையும்; கண்டிப்பாக அனுசரித்தவாறு நோயாளி ஹொஸ்பிட்டலுக்கு வருகை தந்து வெளியேறிச் செல்லும் வரையில் உயர்தரமான நோயாளிப் பராமரிப்பை பேணுவதைப் போலவே சுகாதாரப் பராமரிப்பில் தங்கத் தரத்தைக் கொண்டு அதன் இரண்டாம் சுற்றில் உள்ள ஹொஸ்பிட்டல், தனது ஹொஸ்பிட்டலின் தலைசிறந்த சிகிச்சைப் பெறுபேறுகளையும் உறுதிசெய்கிறது. ஹேமாஸின் மூன்று ஹொஸ்பிட்டல்ஸ்களும் தற்போது, சர்வதேச ரீதியாக சான் [illegible] கொட ஹொஸ்பிட்டல் சான்றுப்படுத்தல் அந்தஸ்தை அடைந்திருக்கையில் 4 ஆண்டுச் சுற்றுக்குப் பின்னர் வத்தளை மற்றும் காலி வைத்தியசாலைகள் மீளச் சான்று அளித்தலை எய்தவுள்ளன.

**வணிகம்**

ஹேமாஸ் ஹொஸ்பிட்டல்ஸ்களின் முகாமைத்துவப் பணிப்பாளர் வைத்தியர் லக்கித் பீரிஸ் கூறுகையில்; "ஹேமாஸ் ஹொஸ்பிட்டல்ஸ்களின் ஒட்டு மொத்த தரங்களுக்கு மேலதிக மட்ட சிறப்புத்தன்மையை மதிப்புமிக்க சான்றுப்படுத்தல் அளிக்கிறது. நோயாளியின் பாதுகாப்பும் நம்பிக்கையும் எமது கட்டளைப்பணியின் மையக்கருவாகும். அத்துடன் எமது நோயாளிகளுக்கு நாம் தரும் சேவை நன்மை தருவதை உறுதி செய்ய நாம் அனைத்தையும் செய்வோம். நோயாளிகளுக்கு உயர்தரமான பராமரிப்பை வழங்கு எமது மன உறுதியை ஏ.சி.எச்.எஸ்.ஐயின் சான்றுப்படுத்தல் கோடிட்டுக் காட்டுகிறது" – என்றார்.

(கு)

## நுட்பம்




# புது வசதிகளுடன் கூகுள் போட்டோஸ்

புகைப்படங்களை நண்பர்களுடன் பகிர்ந்து மகிழ, மாற்றங்கள் செய்ய எனப் பல வசதிகளுடன் கூகுள் நிறுவனத்தால் அறிமுகம் செய்யப்பட்ட செயலியே கூகுள் போட்டோஸ். தற்போது இந்தச் செயலியின் மேம்படுத்தப்பட்ட புதிய பதிப்பு ஒன்று அன்ரோயிட் சாதனங்களுக்காக வெளியிடப்பட்டுள்ளது. இந்தப் பதிப்பில் திருத்தப்பட்ட புகைப்படங்களை மீண்டும் பழைய நிலைக்கு மாற்றக்கூடிய வசதி கூடுதலாக உள்ளடக்கப்பட்டுள்ளது.

இந்த வசதியைப் பயன்படுத்தி சீராக்கப்பட்ட புகைப்படத்தைச் சேமிக்கும்போது முதல் புகைப்படத்தின் மேல் அது தவறுதலாக சேமிக்கப்படின் மீண்டும் உண்மையான புகைப்படத்தைப் பெறுவதற்கு பயன்படக்கூடியதாக இருக்கின்றது.



# சர்ச்சையில் சிக்கிய பிரீடம் 251

கடந்த காலங்களில் கையடக்க தொலைபேசிப் பாவனையாளர்கள் மத்தியில் பிரீடம் 251 எனும் தொடுதிரைக் கைபேசி தொடர்பான தகவல்கள் பெருமளவில் பரபரப்பாகப் பேசப்பட்டன. 4 அமெரிக்க டொலர் பெறுமதியான இந்தக் கைபேசியானது உலகிலேயே மிகவும் விலை குறைந்த கைபேசி, என விளம்பரப்படுத்தப்பட்டு இந்திய அளவில் விற்பனைக்கான முன் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன.

பிரதான நினைவகமாக 1 ஜிபி. ரம் 8ஜிபி சேமிப்பு நினைவகம், கியூஎச்டி தொடுதிரை எனும் அம்சங்களைக் கொண்ட குறித்த கைபேசியைக் கொள்வனவு செய்வதற்கு பெருமளவானோர் ஆர்வம் காட்டிய நிலையில், திடீரென முற்பதிவுகள் நிறுத்தப்பட்டிருந்தன.

இந்த நிலையில் தற்போது இந்தக் கைபேசி தொடர்பாக பொலிஸ் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது என்று தகவல் வெளியாகியுள்ளது. சீனாவில் அறிமுகம் செய்யப்பட்ட அட்கொம் இக்கொன் 4 எனும் கைபேசியே மீள் பதிப்புச் செய்யப்பட்டு இவ்வாறு அறிமுகம் செய்யப்பட்டுள்ளது என்றும் தகவல்கள் கசிந்துள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விகாரை

நாட்டின் தேசிய பாதுகாப்புக்கு மீண்டும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது என்று பல்வேறு தரப்பினரால் கருத்து வெளியிடப்பட்டு வருகின்றது. அத்துடன் பல விதமாகச் செய்தி வெளியிடப்பட்டும் வருகின்றது. அதனால் வடக்கு மாகாண ஆளுநர் என்ற வகையில், உண்மையை வெளிப்படுத்த வேண்டியது எனது பொறுப்பாகும்.

நல்லிணக்கம் என்ற சொல்லை நகைப்புக்குட்படுத்தவும், அது நடைமுறைச்சாத்தியமற்றது என்றும், அது அடைய முடியாத இலக்கு என்றும் தற்போது காட்டச் சிலர் முயற்சிக்கின்றனர்.

கருத்துக்களுக்கிடையிலான போர் – ஊடகங்களுக்கிடையிலான போரே தற்போதுள்ளது. தகவல் பகிரப்படும் முறையில்தான், மக்களின் கருத்து வெளிப்படுகிறது. இந்தக் குறுகிய காலத்தில் வடக்கில் 70 சதவீதமான மக்கள் மிகவும் அப்பாவிகள். ஆனால், அந்த மக்களின் கருத்துக்கள் வெளிப்படுத்தப்படுவதில்லை. மிகைப்படுத்தப்பட்ட – திரிபுபடுத்தப்பட்ட கருத்து அவர்களின் கருத்தாக வெளிப்படுத்தப்படுகின்றது. இது குறித்து நாம் அவதானத்துடன் இருக்கவேண்டும்.

**புத்தர் சிலை அமைப்பதில்
ஊடகங்கள் பொய்ப் பரப்புரை**

நயினாதீவில் புத்தர் சிலை அமைப்பது தொடர்பாக வடக்கிலிருந்து, தெற்கிலுள்ள பத்திரிகைகளைப் பார்த்தேன். புத்தரின் சிலை அமைக்கப்படுவது நிறுத்தப்படுகின்றது என்று தெற்கிலுள்ள பத்திரிகைகளில் உள்ளது. இதைப் பார்த்தவுடன் தெற்கிலுள்ள அப்பாவி மக்கள் கவலையடைவர். வடக்கிலுள்ள பத்திரிகைகளில் எவ்வாறிருந்தது? கோயிலை மறைத்து இந்தச் சிலை அமைக்கப்படுவதாக இருந்தது. இவை இரண்டும் உண்மையல்ல. இரண்டிலும் பொய்யான பரப்புரைகள்தான் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நான் நயினாதீவுக்குச் சென்றேன். தடை என்று கூறப்படும் கதை பொய்யாகும். இதற்குக் கரையோரப் பாதுகாப்புத் தரப்பினரிடம் அனுமதி பெறவேண்டும். அதைத்தான் யாழ். மாவட்ட அரச அதிபரும் குறிப்பிட்டிருந்தார். தடை செய்யப்படவில்லை. இப்படியிருக்கையில் அந்த அதிகாரி பற்றியும் வடக்குப் பற்றியும் தவறான கருத்துக் கூறப்படுகின்றது.

அத்துடன், வடக்கில் கூறப்படுவது போல கோவிலும் மறைக்கப்படவில்லை. நயினாதீவு விகாரைக்குள் இந்துக் கடவுள்கள் இருக்கின்றனர். ஊடகங்களில் காட்டப்படுவது எல்லாம் உண்மை என்ற நிலையில் மக்கள் உள்ளனர். ஆனால், ஊடகங்களும் தவறிழைக்கும் சந்தர்ப்பங்களும் உண்டு.

**தேசிய பாதுகாப்புக்கு
குந்தகமில்லை**

சாவகச்சேரிச் சம்பவம் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் இல்லை என்று யாழ். கட்டளைத் தளபதி கூறியுள்ளார். இந்த நிலையில், நல்லிணக்கத்தைச் சீர்குலைக்கும் வகையில் சிலர் திரிபுபடுத்தப்பட்ட கருத்துகளை வெளியிடுகின்றனர். தமிழ் மக்களின் அதீத நம்பிக்கையை வென்ற தலைவராக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன விளங்குகின்றார். எனவே, அதைப் பாதுகாக்கவேண்டியது அவருடையதும் அரசினதும் பொறுப்பாகும்.

**தவறைத் திருத்திக்
கொள்ள சந்தர்ப்பம்**

தவறைத் திருத்திக்கொள்ள வரலாற்றில் மற்றுமொரு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. நாம் வரலாற்றில் தவறிழைத்தோம். பண்டாரநாயக்க அதைத் தீர்ப்பதாகக் கூறி பண்டா–செல்வா ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது. பின்னர் அது கிழித்தெறியப்பட்டது. அதன் பின்னர் ஐ.தே.க. அரசு இதைத் தீர்க்க முயற்சித்தபோது, பேரணி சென்று கடையடைப்புச் செய்து நிறுத்தப்பட்டது. அதன் பின்னர் கொல்வின் ஆர்.டி. சில்வா இரு மொழிகளையும் அரசகரும மொழிகளாக்க வேண்டும் என்றார். அதைப் புறக்கணித்துச் செய்த போராட்டங்கள் பாரதூரமானவை.

இன்று யாழ்ப்பாணம் சென்றால் சொல்வது புரியவில்லை. இது பெரிய பிரச்சினையாக உள்ளது. அந்த மக்களுக்குச் சிங்களம் தெரியாது. அதனால், மொழி கற்பிக்கும் நடவடிக்கை தெற்கில் சிறப்பாக இடம்பெற்று வருகின்றது. இதை வடக்கிலும் செயற்படுத்தவேண்டும் – என்றார்.

இதையடுத்து, ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு அவர் பதிலளித்தார்.

கேள்வி – சாவகச்சேரிச் சம்பவத்தில் ஜனாதிபதியின் உயிருக்கு அச்சுறுத்தல் எனக் கூறப்படுகின்றதே ?

பதில் – இணையத்தளங்களைப் பற்றித் தெரியும் தானே. இதுதான் இங்கு உள்ள பிரச்சினை. என்னைக் கொல்ல வந்ததாக என்னாலும் சொல்ல முடியும். வெள்ளவத்தையைத் தாக்க வந்ததாக மற்றொருவர் குறிப்பிட முடியும். பொது மத்திய நிலையத்தில் இதை வெடிக்கக் கொண்டு வந்ததாக மற்றுமொருவரும் கூற முடியும். இவை அனைத்தும் எண்ணங்களின் வெளிப்பாடுகளே. எண்ணங்களின் சுதந்திரமான வெளிப்பாடு சமூகமயமாக்கப்படுகின்றது. இருப்பினும், அது நன்மைக்காகக் கொண்டுவரப்பட்டதொன்றல்ல.

வடக்கில் ஜனாதிபதி பிரபல்யமடைந்து வருவதற்கு அங்குள்ள அடிப்படைவாதிகள் எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர். மக்களின் ஆதரவை இந்தத் தலைவர் அதிகளவில் பெறுவதை அடிப்படைவாதிகள் பொறுத்துக் கொள்ளமாட்டார்கள். இதனால் அப்படி (தாக்குதல் முயற்சி) நடப்பதற்கும் இடமுள்ளது. இதில் அரசியல் அர்த்தமும் இருக்கமுடியும்.

கேள்வி:– கொக்கிளாய் பிரதேசத்தில் பொது மக்களின் காணியில் விகாரை அமைக்கப்படவுள்ளதாகத் தகவல் வெளியிடப்பட்டுள்ளதே ?

பதில்:– அது குறித்து நான் தகவல் அறிந்தேன். அனைத்துத் தகவல்களையும் என்னிடம் தருமாறு கூறியுள்ளேன். தகவல்களைப் பெற்றுக் கொண்ட பின்னர்தான் அது பற்றி என்னால் கூற முடியும். தனிப்பட்ட இடத்தில் தாம் விரும்பி விகாரை, கோவில் அமைப்பதை எவராலும் தடுக்க முடியாது.

கேள்வி:– முதலமைச்சரின் ஒத்துழைப்பு உங்களுக்குக் கிடைக்கின்றதா?

பதில்:– எனக்கு எதற்கு ஆதரவு? நல்லிணக்கமே எமக்குத் தேவை. முதலமைச்சர் விக்னேஸ்வரனால் எனக்கு இதுவரை எந்தப் பிரச்சினையும் இல்லை. என்னால் அவருக்கும் பிரச்சினை இல்லை. அரசியல் பிரச்சினைதான் இருக்கின்றது. அதை அரசியல் ரீதியாகத் தீர்க்க வேண்டும். எனது எந்தப் பணிக்கும் அவர் தடை ஏற்படுத்தவில்லை.

வடக்கில் தமிழ் ஆளுநர் வரவேண்டும் என்ற கோரிக்கை இருந்தது. ஆனால், நான் ஆளுநராகச் சென்றபோது, எனக்குச் சிறந்த வரவேற்புக் கிடைத்தது. நாம் கடைபிடிக்கும் கொள்கைக்குக் கிடைத்த வெற்றிதான் அது.

கேள்வி:– வடக்கில் இராணுவத்தால் கைப்பற்றப்பட்ட அனைத்துக் காணிகளும் விடுவிக்கப்படுமா அல்லது தேசிய பாதுகாப்புக் கருதி சில காணிகள் விடுவிக்கப்படாமலிருக்குமா ?

பதில்:– தேசிய பாதுகாப்பு என்பது முக்கியமாகும். அதை ஒருபோதும் நிபந்தனைகளுக்கு உட்படுத்தமாட்டோம். தேசிய பாதுகாப்புக்குத் தேவையானவற்றை வைத்துக் கொண்டு ஏனையவற்றை வழங்குவோம். தேசிய பாதுகாப்புக்கு எவர் முன்னிலையிலும் நிபந்தனையிட முடியாது.

கேள்வி:– வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம் மக்களை மீள்குடியமர்த்த நடவடிக்கை எடுக்கின்றீர்களா?

பதில்:– வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம், சிங்கள மக்கள் அனைவரும் அவர்களின் சொந்த இடங்களில் மீள்குடியமர்த்தப்பட வேண்டும் – என்றார். (த–வ–5)

## மறவன்புலோவில்

லிழக்கவைக்கும் பிரிவினர் மூலமாக அழிக்குமாறும் சாவகச்சேரி நீதிமன்று நேற்று உத்தரவிட்டுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட சந்தேகநபர் நேற்று சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்தப்படவில்லை. அவரது வீட்டிலிருந்து மீட்கப்பட்ட தற்கொலைத் தாக்குதல் நடத்தும் அங்கி உள்ளிட்ட வெடிபொருள்களே பொலிஸாரால் நீதிமன்றில் நேற்றுச் சமர்ப்பிக்கப்பட்டன.

மறவன்புலோ, வெள்ளம்குளப் பிள்ளையார் கோவில் வீதியில் உள்ள வீடொன்றில் சிமெந்தினால் கட்டப்பட்ட அலுமாரியினுள் வைக்கப்பட்டிருந்த வெடிகுண்டுகள் உள்ளிட்ட பொருள்கள் யாழ். மாவட்ட பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் நேற்றுமுன்தினம் கைப்பற்றப்பட்டன.

சக்திவாய்ந்த வெடிபொருள்களை விசேட அதிரடிப் படையின் குண்டுகள் செயலிழக்க வைக்கும் பிரிவினர் மூலம் அழிப்பதற்கு அனுமதி வழங்கக்கோரி யாழ்.பயங்கரவாதத் தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரியினால், சாவகச்சேரி நீதிமன்றில் அறிக்கை சமர்ப்பிக்கப்பட் டிருந்தது. குறித்த அறிக்கை நீதிமன்றினால் பரிசீலனைக்கு எடுக்கப்பட்டது.

இதில் தற்கொலைக் குண்டுதாரி பயன்படுத்தும் அங்கி 1, அமுக்க வெடிகள் – 4, சிலிக்கன் மணல் பொதி பெரிது, சிலிக்கன் மணல் பொதி சிறிது 2, ரீஎன்ரி ரக சக்தி வாய்ந்த வெடி பொருள்களெனக் கருதப்படும் பச்சைநிற பொதி 1, றோஸ் நிறப் பொதி 1, றோஸ் நிறப்பொதி சிறிது 1, எஸ்எம் 001 மெக்லற் குண்டுப் பெட்டி 1, எஸ் எம் 002 மெக்லற் குண்டுப் பெட்டி 1 என்பன நீதிமன்றில் நேற்றுமுன்தினம் சமர்ப்பிக்கப்பட்டன. அவற்றையே அழிக்குமாறு நீதிமன்று நேற்று உத்தரவிட்டது.

எனினும் சிம் கார்ட்டுகள் நீதிமன்றில் நேற்றுச் சமர்ப்பிக்கப்படவில்லை. அவை விசாரணைக்குப் பயன்படுத்தப்படவுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும் வெடிபொருள்கள் சம்பந்தமாகவும் வேறு வெடிபொருள்கள் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளதா என்பது குறித்தும் மேலதிக விசாரணை செய்வதற்காக யாழ். மாவட்ட பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரிடம் வெடிபொருள்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளன. அது பற்றிய அறிக்கையையும் பெடிபொருள்களை அழித்தமை குறித்த அறிக்கையையும் மன்றில் மே 10 ஆம் திகதி சமர்ப்பிக்குமாறு நீதிமன்று கட்ளையிட்டுள்ளது.

குறித்த வெடிபொருள்களை வைத்திருந்த குற்றச்சாட்டில் மன்னாரைச் சேர்ந்தவரும் மறவன்புலோவில் வசித்து வந்தவருமான எட்வேர்ட் ஜூலியஸ் என்பவரே கைது செய்யப்பட்டிருந்தார். அவர் நேற்றுமுன்தினம் பயங்கரவாதப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார்.

குறித்த சந்தேகநபர் அக்கராயனில் வைத்துக் கைது செய்யப்பட்டிருந்தார். அவரிடம் ஆரம்ப விசாரணைகளை மேற்கொண்ட பின்னர், அவர் நேற்றுக் கொழும்புக்குக் கொண்டு செல்லப்பட்டார். இது தொடர்பில் மேலதிக விசாரணைகள் இடம்பெறுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த–வ–4–9)

## தள்ளாடியில்

பொலிஸாரால் மீட்கப்பட்டமை போன்ற செயற்பாடு களை அடுத்து, நேற்று மன்னார் மாவட்டத்தில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் ஏ–14 மன்னார் – மதவாச்சி பிரதான வீதியில், தள்ளாடி இராணுவ முகாமுக்கு முன்பாகப் பொலிஸாரால் சோதனைச் சாவடி அமைக்கப்பட்டுள்ளது. நேற்று வியாழக்கிழமை அமைக்கப்பட்ட குறித்த சோதனைச் சாவடியைக் கடந்து செல்லும் வாகனங்கள் பொலிஸாரால் சோதனைக்குட்படுத்தப்பட்டன. இதனால் பயணிகள் பல அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்ததை அவதானிக்க முடிந்தது.

இதனையடுத்துப் போர்க் காலத்தில் இருந்த சோதனைக் கெடுபிடிகள் மீண்டும் ஆரம்பித்துவிடுமோ என்ற அச்சம் எழுந்துள்ளதாக மக்கள் தெரிவித்தனர்.

இதேவேளை, மறவன்புலோ வீடொன்றில் மீட்கப்பட்ட வெடிபொருள்கள் தொடர்பில் கைது செய்யப்பட்ட குடும்பம் மன்னாரைச் சேர்ந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (த–வ–21)

## இலங்கை

தெரிவித்துள்ளது.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அமெரிக்காவின் தெற்கு மற்றும் தென்னாசிய பிராந்தியங்களுக்கான உதவி இராஜாங்கச் செயலாளர் நிசா பிஸ்வால், வொசிங்டனில் உள்ள அமெரிக்காவின் பாதுகாப்பு நிலையத்தில் இடம்பெற்ற நிகழ்விலேயே மேற்படி விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் மாற்றத்தை அமெரிக்கா வரவேற்கின்றது. இலங்கைக்கு உதவிகளை வழங்கத் தயாராகவும் இருக்கின்றது. கடந்த இரண்டு தேர்தல்களின் மூலம் ஜனநாயகத்தை உறுதிப்படுத்தி நல்லிணக்கத்தை முன்னெடுத்துச் செல்வதன் மூலம் இலங்கை விசேட கவனத்தைப் பெற்றுள்ளது. இருப்பினும், இலங்கை இன்னமும் நீதி மற்றும் அரசியல் உரிமைகள், சமாதானம் போன்ற விடயங்களில் சாதிக்க வேண்டியவை பெரியளவில் உள் ளன –என்றார். (த–வ–5)

**31 ஆம் நாள் நினைவஞ்சலி**



திருமதி
**மேரி நவமணி கதிரவேலு**

அன்பு வழியில் எம்மை
அரவணைத்து
ஆருயிராய் நேசித்து
ஆசீர்வதித்து
இன்பமிக நல்லறமாம்
இல்லறத்தை
ஈடேற்றிய எம்மிதயத்
தெய்வமே
நாள்கள் முப்பத்தொன்று
ஆனபோதும் ஆறவில்லை எம்
துயரம்.

குடும்பத்தினர்.
பாரதிவீதி,
நாயன்மார்கட்டு,
நல்லூர்.

மலர்வு 16.01.1937
உதிர்வு 02.03.2016

**மரண அறிவித்தல்**

**திருமதி நாகம்மா கணபதிப்பிள்ளை**
(அல்லைப்பிட்டி - 3)



மண்டைதீவைப் பிறப்பிடமாகவும் அல்லைப்பிட்டியை வசிப்பிடமாகவும், 902,பருத்தித்துறை வீதி நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகம்மா கணபதிப்பிள்ளை நேற்று (31.03.2016) வியாழக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளையின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான செங்கமலை - மாணிக்கம் தம்பதியரின் மகளும், காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - தில்லைவனம் தம்பதியரின் அன்பு மருமகளும், நவரத்தினராசா (கிளிநொச்சி), செல்வராசா (கொழும்பு), இராசபூபதி (நல்லூர்), தவராசா (லண்டன்) ஆனந்தராசா (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், சோதி, சரஸ்வதி, காலஞ்சென்ற கனகலிங்கம் மற்றும் சந்திரா, கலாநிதி ஆகியோரின் பாசமிகு மாமியாரும், கலைவாணி, காலஞ்சென்ற கிருபாகரன் மற்றும் ரஜீவா, அனுஷா, வதனி, கவிதா, தர்சன், கௌசி (ஜேர்மனி), ஜோகித மோகன் (சங்கவி களஞ்சியம்), இளவேந்தன் (கொலன்ட்), சாந்தினி, சசிகரன், சுகந்தினி(ஜேர்மனி), அமுதினி (லண்டன்), சிவாகரன் (ஆருதி பான்சி), செந்தூரன், மயூரன் (பிரான்ஸ்), காந்தீபன் (ஜேர்மனி), மதனதீபன், காண்டீபன் (லண்டன்), கார்த்திகா(லண்டன்), முரளி, அஜந்தன், தாரணி (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.04.2016) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக முற்பகல் 10 மணியளவில் செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

902,பருத்தித்துறை வீதி,
நல்லூர்.
(70407)
(11,18)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்நாளில் மறக்க முடியாத நினைவலைகள்

21 ஆம் ஆண்டு



ஏரம்பு சோதிலிங்கம்
(தலைவர், மதிஒளிச.ச. நிலையம்
பண்டிதர் நூல் நிலையம்
இணக்க சபை உறுப்பினர் மண்டைதீவு)

6 ஆம் ஆண்டு



மங்கையற்கரசி
சோதிலிங்கம்

7 ஆம் ஆண்டு



சோதிலிங்கம்
பஞ்சலிங்கம்

5 ஆம் ஆண்டு



சோதிலிங்கம்
இலட்சுமிகாந்தன்
(B.A, J.P. ஆசிரியர்
அகில இலங்கை சமாதான நீதவான்)

திதி: 01.04.2016
காலங்கள் மாறலாம் எம் கவலைகள் மாறுமோ...
அன்பின் திருவுருவமான பெற்றோர்கள்
பாசத்தின் உறைவிடமான சகோதரர்கள்
இவர்களை என்றும் மறவோம் எம் வாழ் நாளிலே...

27/1, கருவேலடிலேன்,
கொக்குவில்.

குடும்பத்தினர்.


## விபத்தில் ஒருவர் காயம்

வேகக் கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் வீதியின் குறுக்கே சென்ற மாட்டுடன் மோதியதில் தூக்கி வீசப்பட்ட மோட்டார் சைக்கிளோட்டி காயங்களுக்கு இலக்கானார். இந்தச் சம்பவம் நேற்று ஏ-9 வீதியில் இடம்பெற்றது.

காயங்களுக்கு இலக்கான நல்லூரைச் சேர்ந்த 40 வயது நபர் சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். (ற-ஜ-9)


### வீட்டுடன் காணி விற்பனைக்கு

சுன்னாகம் கே. கே. எஸ் வீதிக்கு அருகில் 5அறை. 2 கோல்.2 இணைந்த குளியலறை. சமையலறை. கிணறு. வாகன-கராஜ். வாகனத்தரிப்பிடம் என்பவற்றுடன் 6 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
(தரகர் தேவையில்லை)

தொடர்பு : 077 712 6859

# After O\L or A\L
## COMPUTER COURSES

Diploma in Computerized **Accounting** — Tally, Quick Book, Accpack, M.Y.O.B

Diploma in **Video Editing** — Premiere Pro CS6, Adobe Photoshop, Adobe AfterEffet, Pinnacle Studio,

Diploma in **Web Designing & Development**

Advanced Diploma in **Hardware & Networking**

**Java** (for Developers) | C, C++, V.B.NET, PHP

தகவல் தொழில் நுட்ப கல்விக்கு முழு மையான கற்கை நெறி
DiTEC
DIPLOMA IN INFORMATION TECHNOLOGY
சிறந்த வேலை வாய்ப்புக்கும் உள்நாட்டு/ வெளிநாட்டு உயர் கல்விக்கு

DMI COMPUTER EDUCATION
Diploma in **Auto CAD**
2D & 3DModeling

புதிய பிரிவுகள் ஆரம்பம்- சனி, ஞாயிறு 9.30

மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற் கல்வி ஆணைக்குழு (TVEC) ஆல் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம்

## DMI COMPUTER EDUCATION

| | | | | |
|---|---|---|---|---|
| No.113, கஸ்தூரியார் வீதி, | M.M.V. வீதி, | No. 174 கண்டி வீதி, | No. 130 K. K. S வீதி, | No.19, A9 வீதி, குளம்புரம் |
| யாழ்ப்பாணம் | நெல்லியடி | HNB வங்கி அருகில் சாவகச்சேரி | NSB வங்கி அருகில் சுன்னாகம் | கிளிநொச்சி |
| Tel.: 021-222 4403 | Tel.: 021-226 2470 | Tel.: 021-227 0775 | Tel.: 021-224 1970 | Tel.: 021-228 5655 |

# புதிய பிரிவுகள் ஆரம்பம்

வங்கியில் வேலைவாய்ப்புக்களை பெறுவதற்கு
வங்கியியல் கற்கைநெறிகள்
*IABF & DABF*
*Medium : - Tamil & English*
Minimum qualification :- G.C.E. O/L 6 Passes including 5 Credits

பட்டயக்கணக்காளர் ஆவதற்கு *Chartered Accountancy*
Executive Level , Business level
*Medium :-Tamil & English*
Minimum qualification:-G.C.E. A/L 3 Passes

ஆங்கிலத்தில் நிபுணத்துவம் பெறுவதற்கு
CERTIFICATE COURSE IN ENGLISH
Minimum qualification :- G.C.E. O/L 3 Passes
Total Hours :- 130 Hours

Further Details :-
**Jaffna College**
Undergraduate Dept.
464, Hospital Road Jaffna. Contact NO :- 021 222 3382, 021 2229149

## உடனடி வேலைவாய்ப்பு

**சுத்திகரிப்பு தொழிலாளர் தேவை**

எமது நிறுவனத்தால் அரச மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு சுத்திகரிப்பு சேவையில் ஈடுபடுவதற்கு ஆண்/பெண் தொழிலாளருக்கான "வெற்றிடம்" உள்ளது.

**யாழ்ப்பாணம்,பருத்தித்துறை,மன்னார்,முல்லைத்தீவு, வவுனியா, கிளிநொச்சி**

ஆகிய இடங்களுக்கு தொழிலாளர் தேவை. சுத்திகரிப்பு மற்றும் பராமரிப்பு வேலை செய்வதற்கு 45 வயதுக்குட்பட்ட இருபாலாரும் விண்ண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பதாரி பெயர், வேலை செய்ய விரும்பும் மாவட்டம், நற்சான்றிதழ் பத்திரம்,கற்ற கல்வித்தகைமை என்பவற்றை குறிப்பிடவும்.

விண்ணப்பங்களை 15.04.2016 ஆம் திகதிக்கு முன் கீழ்வரும் விலாசத்துக்கு அனுப்பி வைக்கவும்.

**விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:**
"மனித வள முகாமையாளர்"
கிளீன்வெல்(பிறைவேட்) லிமிட்டெட்
இல. 154,முதலாம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

T.P No 021 222 4128 / 077 220 9592

# கண்ணீர் அஞ்சலி



எமது கண்ணியல் பிரிவில் ஆண் பரிசாரகராக கடமையாற்றிய **சின்னத்துரை தங்கராசா** அவர்கள் நேற்று முன்தினம் புதன்கிழமை 30.03.2016 மரணமடைந்த செய்திகேட்டு அதிர்ச்சியடைந்தோம். அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதுடன் அவரது இழப்பால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கல்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**கண்ணியல் பிரிவு**
**போதனா வைத்தியசாலை - யாழ்ப்பாணம்.**

# 45 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர் **வில்லியம் மேரி மாகிறேட்**

என் நெஞ்சைப் பிளந்ததம்மா உன்
இறப்பு இன்று ஏங்கித் தவிக்கின்றேன்
நீ இல்லா உன் நினைப்பு இறைவன்
எனக்கு தந்த தாய் என்ற உன்னத
படைப்பு ஏன் என்னைக் காணாமல்
மூடினாய் கண்ணை பகல் இரவு
பாடுபட்டு வளர்த்த என்தாயே--நீ
பாடுபட்டதை எப்போதும் நினைக்கும்
உன் சேயே உன் உறவுகள்
ஏங்கித்தவிக்கின்றனரே ஏனம்மா இவ்
வயதில் எம்மைப் பிரிந்தாய் இந்த இடர்
எனக்கு வரினும் வரம்
கொடுத்தருள்வாயே
நான் பாசம் கொண்ட உன்னை மோசம்
செய்ததே கொடிய நோயே
பிரிவால் துயருறும்
மகன் குடும்பம் மற்றும்
உறவினர்.

பிறப்பு
28.10.1952

இறப்பு
17.02 .2016

மேற்கு வீதி,
ஊர்காவற்றுறை.


## இலங்கைத்திறந்த பல்கலைக்கழகம் யாழ்ப்பாணப் பிராந்திய நிலையம்
### கல்வியாண்டு 2016 / 17

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் பின்வரும் கற்கை நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

| கற்கை நெறிகள் | அனுமதித் தகைமைகள் | மொழி | கற்கை நெறிக் கான காலம் | விண்ணப் பிக்கும் காலம் |
|---|---|---|---|---|
| சமூக விஞ்ஞானத்தில் சான்றிதழ் கற்கை நெறி (Certificate Programme in Social Sciences) | • 18 வயதிற்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும் | தமிழ் / ஆங்கிலம் | 2 வருடம் | 08.03.2016 09.04.2016 |
| இளைஞர் அபிவிருத்தியில் டிப்ளோமா (Diploma in Youth Development Work) (DYD) | • 18 வயதிற்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும் அத்துடன்<br>• க.பொ.த உயர்தரத்தில் ஏதாவது ஒரு துறையில் மூன்று பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். அல்லது<br>• இ.தி.ப.கழகத்தினால் வழங்கப்படும் ஏதாவது ஒரு கற்கை நெறியில் இரண்டாம் மட்டத்தினை (Level 2) பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.அல்லது<br>• இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட இவற்றுக்குச் சமமான அல்லது மேற்பட்ட வேறு தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும். இளைஞர் அபிவிருத்தியில் துறைசார் அனுபவமும் இதில் கருத்தில் கொள்ளப்படும். | தமிழ் / ஆங்கிலம் | 2 வருடம் | 08.03.2016 09.04.2016 |
| சமூக விஞ்ஞானத்தில் கலைமாணி (BA Degree in Social Sciences) | • 18 வயதிற்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும்<br>• இ.தி.ப.கழகத்தினால் வழங்கப்படும் ஏதாவது ஒரு கற்கை நெறியில் இரண்டாம் மட்டத்தினை (Level 2) பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.அல்லது<br>• க.பொ.த உயர்தரத்தில் ஏதாவது ஒரு துறையில் மூன்று பாடங்களில் - சித்தியடைந்திருத்தல் வேண்டும். அல்லது<br>• இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட இவற்றுக்குச் சமமான அல்லது மேற்பட்ட வேறு தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும். | ஆங்கிலம் | 3 வருடம் | 08.03.2016 09.04.2016 |

இக்கற்கைநெறிகளுக்கான விண்ணப்பப்படிவங்கள் பின்வரும் கற்கை நிலையங்களில் தற்போது விநியோகிக்கப்படுகின்றது.

| நிலையம் | முகவரி | தொலைபேசி இலக்கம் |
|---|---|---|
| யாழ்ப்பாணப் பிராந்திய நிலையம் | பிறவுண் வீதி, கொக்குவில், யாழ்ப்பாணம் | 021 - 2223374 |
| வவுனியா கற்கை நிலையம் | இல 366, கண்டி வீதி, தேக்கவத்தை, வவுனியா | 024 - 2222995 |
| கிளிநொச்சி கற்கை நிலையம் | 155ஆம் மைல்கல், கண்டிவீதி, கிளிநொச்சி | 021 - 2283970 |
| முல்லைத்தீவு கற்கை நிலையம் | ஒட்டுசுட்டான்வீதி, புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு | 071 - 3522367 |
| மன்னார் கற்கை நிலையம் | | 077 - 5625352 |

மேலதிக விவரங்களுக்கு உதவிப்பணிப்பாளர் யாழ்ப்பாணப் பிராந்திய நிலையம் அவர்களுடன் தொடர்பு கொள்ளவும்.

பதிவாளர்,
இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

(C/22418)(10.17.18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஊவா வெல்லச

வருகின்றனர்.
குறித்த தாக்குதல் சம்பவத்துக்கு முன்னைய அரசின் முக்கிய இளம் அரசியல்வாதி ஒருவர் பின்னணியாக இருக்கலாம் என்றும் சந்தேகம் தெரிவிக்கப்படுகிறது.
குறித்த பிரச்சினையால் தமிழ் மாணவர்கள் அச்சத்துக்குள்ளாகியுள்ளதோடு, 2 ஆம் 3 ஆம் வருடங்கள் ஊவா வெல்லச பல்கலைக்கழக நிர்வாகத்தினால் நேற்று முதல் காலவரையின்றி மூடப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. இதனால் வெளிமாவட்ட மாணவர்கள் தமதுஊருக்குநேற்றிரவேபுறப்பட்டுவிட்டனர்.
இது குறித்து மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-
ஊவா வெல்லச பல்கலைக்கழகத்தில் 2 ஆம் வருடத்தில் பயிலும் பெரும்பான்மையின மாணவர்கள், அதே வருடத்தில் பயிலும் தமிழ் மாணவர்கள் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர். இதன்போது தமிழ் மாணவர்கள் சிலரின் மூக்குக் கண்ணாடிகளும் உடைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டி அங்கு பொது இடத்தில் வைத்து ஒளிபரப்பப்பட்டுப் பார்வையிடக்கூடியதாக உள்ளது. வழமையாக அனைத்துப் பீடங்களின் மாணவர்களும் பிற்பகல் தொடக்கம் இரவு வரை அதனைப் பார்வையிடுவர். எனினும் நேற்று முன்தினம் சம்பவம் நடக்க முன்னர் ஏனைய பீடங்களின் மாணவர்கள் அங்கிருந்து வெளியே சென்றுள்ளனர். அவ்வாறு அவர்கள் வெளியே சென்றதும், 2 ஆம் வருடத்தில் பயிலும் பெரும்பான்மையின மாணவர்கள் அதே வருடத்தில் பயிலும் சக தமிழ் மாணவர்கள் மீது மோசமான தாக்குதலை மேற்கொண்டுள்ளனர்.
தமிழ் மாணவர்கள் மீது அங்கு ஏற்கனவே குரோதமான பார்வை பெரும்பான்மையின மாணவர்களிடம் இருந்து வந்துள்ளது என்றும், அதன் தொடர்ச்சியாக நேற்று முன்தினம் தமிழ் மாணவர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இந்தத் தாக்குதலில் 2 ஆம் வருட மாணவர்கள் 4 பேரும், 3 ஆம் வருட மாணவர்கள் இருவரும், இறுதியாண்டு மாணவன் ஒருவரும் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருப்பதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.
அண்மையில் திருகோணமலை வளாகத்திலும் இவ்வாறான சம்பவம் நடைபெற்றபோதிலும், பெரும்பான்மை மாணவர்கள் மீது பல்கலைக்கழக நிர்வாகம் நடவடிக்கை எடுக்காமையே இவ்வாறான செயல்கள் தொடரக் காரணமாக அமைந்திருக்கலாம் என்று பல்கலைக்கழகத் தரப்பினரால் கூறப்படுகிறது.
எனவே நல்லாட்சி அரசின் ஜனாதிபதியும், பிரதமரும், உயர் கல்வி அமைச்சர் ஊடாக இந்த விடயத்தில் கவனம் எடுத்து ஜனாதிபதியின் நேரடி நியமனத்தில் நியமிக்கப்பட்ட துணைவேந்தரின் கண்காணிப்பில் தாக்குதலில் ஈடுபட்ட பெரும்பான்மையின மாணவர்கள் மீது உடனடி நடவடிக்கை எடுக்கத் தவறக் கூடாது என்றும் அவர்கள் கோருகின்றனர்.
குறித்த பிரச்சினை நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிலையில், நேற்று பீடங்களின் மாணவர்களுக்கிடையே முரண்பாடு இருந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனாலேயே ஊவா வெல்லச பல்கலைக்கழகத்தில் 2 ஆம் 3 ஆம் வருடங்கள் காலவரையின்றி மூடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இது குறித்து பல்கலைக்கழகத் துணைவேந்தரிடம் கேட்டபோது பதில் கூறாமல் தொடர்பைத் துண்டித்தார். (த-வ-4-ரி4)

## காணாமற்

பரணகம.
நேற்றுமுன்தினம் புதன்கிழமை வவுனியாவில் இடம்பெற்ற காணாமற்போனோர் தொடர்பான சாட்சியப் பதிவுகளின் நிறைவில் ஊடகவியலாளரினால் எழுப்பப்பட்ட கேள்விகளுக்குப் பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.
இதன்போது ஆணைக்குழுவின் தலைவர் மேலும் கூறியுள்ளதாவது:-
காணாமற்போனோர் தொடர்பாகச் செய்யப்பட்ட முறைப்பாடுகள், சாட்சியங்களின் அடிப்படையில் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. இதனடிப்படையில் தற்போது நான்கு பேர் கண்டறியப்பட்டுள்ளனர். அது தொடர்பிலான விவரங்களை விரைவில் வெளிப்படுத்துவோம். காணாமற்போனதாகக் கூறப்பட்ட இரண்டு தொடக்கம் மூன்று பேர் மாலைதீவுச் சிறைச்சாலையில் உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. வெலிஓயாப் பகுதியில் காணாமற்போனதாக எம்மிடம் கூறப்பட்ட நபரொருவர் வேறு ஒரு பெண்ணுடன் கட்டுநாயக்கா விமான நிலையம் ஊடாக வெளிநாடு சென்றமை அறியப்பட்டுள்ளது.
இதேபோன்று ஏனையவர்கள் தொடர்பாக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. காணாமற்போனோர் முழுமையாகக் கண்டு பிடிக்கப்படாவிட்டாலும் சாதகமான பதில்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
அத்துடன், கடந்த காலப் போரின்போதும், அதற்கு முன்னரும் காணாமற்போனோர் தொடர்பில் ஈ.பி.டி.பியின் டக்ளஸ் தேவானந்தா உட்பட புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ் போன்ற அமைப்புகளைச் சேர்ந்தவர்களும் பதில் சொல்ல வேண்டியவர்களாகவுள்ளனர்.
தற்போது வன்னியில் ஆறு நாள்கள் மேற்கொண்ட அமர்வுகளில், 1,049 பேர் சாட்சியமளித்ததுடன், 306 பேர் புதிதாக விண்ணப்பித்துள்ளனர்.
இந்தவகையில் புதிதாக விண்ணப்பிப்போர் தொகை அதிகரித்துள்ளது. இது மக்கள் எமது ஆணைக்குழு மேல் கொண்டுள்ள நம்பிக்கையை வெளிப்படுத்துகிறது. ஒருவர் தொடர்பாக அவரது குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் பல பகுதிகளில் இருந்தும் விண்ணப்பித்துள்ளமையால் காணாமற்போனோர் தொடர்பான மொத்த எண்ணிக்கையை உடனடியாக வெளியிட முடியவில்லை - என்றார். (த-வ-21)

## விசாரிக்கப்படுவார்

பல கோணங்களில் விசாரணை இடம்பெற்று வருவதாகவும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் குறிப்பிட்டுள்ளார்.
அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் மாநாடு நேற்று மு.ப. அரச தகவல் திணைக்களத் தில் நடைபெற்றது. அமைச்சரவை அறிவிப்புகள் அறிவிக்கப்பட்ட பின்னர், கேள்வி நேரம் ஆரம்பமானது. இதன்போது, மறவன் புலோ பகுதியில் உள்ள வீடொன்றில் இருந்து தற்கொலைத் தாக்குதலுக்கான அங்கி மற்றும் வெடிபொருள்கள் மீட்கப்பட்டுள்ள சம்பவம் தொடர்பில் பாதுகாப்புச் செயலாளரிடம் ஊடகவியலாளர்கள் கேள்விகளை எழுப்பினர். இவற்றுக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
இந்த சம்பவத்தையடுத்து தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என்று சிலர் கருத்து கூறி வருகின்றனர். தேசிய பாதுகாப்புக்கு அப்படி எந்தவொரு அச்சுறுத்தலும் இல்லை. பாதுகாப்பு பலமாக இருப்பதாலேயே இவற்றைக் கண்டுபிடிக்க முடிந்தது. இது புதிய விடயமல்ல. போருக்குப் பின்னர் இப்படியான பொருள்கள் மீட்கப்பட்டு வருகின்றன. எனினும், இதைச் சாதாரண விடயமாகவும் கருதிவிடமாட்டோம் என்று அவர் குறிப்பிட்டார்.
அத்துடன், சாவகச்சேரியில் கண்டுபிடிக்கப்பட்ட வெடிபொருள்கள், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைப் படுகொலை செய்யும் திட்டத்தின் ஓர் அங்கமாக இருக்கலாம் என்று தகவல் வெளியாகியுள்ளது என்று ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த பாதுகாப்புச் செயலாளர், ஜனாதிபதியைக் கொலை செய்யவா? அல்லது வேறு எதற்காகவோ என்று எனக்குத் தெரியாது. விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. அவை இறுதிபெறும் வரை எதையும் கற்பனை அடிப்படையில் ஊகிக்க முடியாது. விசாரணைகள் முடிவுற்ற பின்னர் உண்மைத் தகவல்களை ஊடகங்களுக்கு உரியவகையில் அறிவிப்போம். குறிப்பாக அமைச்சர் (கயந்த கருணாதிலக்க) கூறியதுபோல், இந்தச் சம்பவம் தொடர்பில் பீரிஸிடம் விசாரணை நடத்த வேண்டியுள்ளது. தகவல்கள் தெரிந்தவர்கள் அவற்றைத் தெரிவித்து ஒத்துழைப்பு வழங்கினால், அது விசாரணைக்கு உதவியாக அமையும். இந்தச் சம்பவத்தையடுத்து, பயங்கரவாதம் தலைதூக்கும் எனச் சிலர் பரப்புரை செய்துவருகின்றனர். அப்படி எதுவும் நடக்காது. நடக்க விடவும் மாட்டோம். அரசும் பாதுகாப்பும் அமைச்சும் தயார் நிலையிலேயே இருக்கிறது - என்றார்.
இதேவேளை, இது பற்றிக் கருத்து வெளியிட்ட அமைச்சர் கயந்த கருணாதிலக்க, வெள்ளவத்தைக்குக் கொண்டு வரப்பட இருந்த வெடிபொருள்களே சாவகச்சேரியில் மீட்கப்பட்டதாக பீரிஸ் கூறியுள்ளார். அவருக்கு எப்படி இது தெரியும். எனவே, இது பற்றி விசாரணை நடத்தவேண்டும் என்று கூறினார். (த-வ-5)

## சாவகச்சேரி

தெரிவித்துள்ளார்.
அத்துடன் இவை கொழும்புக்குக் கொண்டு வரப்படவுள்ளன என்ற தகவலை அறிந்து வைத்திருந்த ஜி.எல்.பீரிஸ் அதனை ஏன் முன்னரே பொலிஸாருக்குத் தெரியப்படுத்தவில்லை என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.
நிதி அமைச்சின் புதிய கட்டடம் ஒன்று கொழும்பில் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது. ஜனாதிபதி மைத்திரிபால மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் இணைந்து இதனைத் திறந்து வைத்திருந்தனர். இதன் பின்னர் கருத்துத் தெரிவிக்கையிலேயே பிரதமர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.
இதன்போது அவர் மேலும் கூறுகையில், சாவகச்சேரியில் பெருமளவில் வெடிபொருள்கள் மீட்கப்பட்டமை தொடர்பில் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. இந்தச் சம்பவம் தொடர்பில் நாடாளுமன்றத்தில் எதிர்வரும் வாரம் சிறப்புரையாற்றவுள்ளேன்.
மேலும், ஜி.எல்.பீரிஸ் எனது நண்பராக இருந்தாலும், அவர் தற்போது நெப்போலியன் கதாபாத்திரத்தில் நடித்து வருகின்றார். போர்க் காலத்தில் கைப்பற்றப்பட்ட தங்கத்துக்கு என்ன ஆனது என்பது குறித்தும் அவர் பேசவேண்டும்.
வடக்கில் வீடொன்றில் இருந்து மீட்கப்பட்ட தற்கொலை அங்கி மற்றும் ஆயுதங்கள் குறித்து எனக்கும், ஜனாதிபதிக்கும் தெளிவுப்படுத்தப்பட்டது. இரசாயனப் பகுப்பாய்வாளரும் இது குறித்து ஆய்வுகளை மேற்கொண்டுள்ளார். போர் நடைபெற்ற நாடுகளில் இப்படியான பொருள்களைப் போரின் பின்னர் கண்டு பிடிக்க முடியும். எவ்வாறாயினும் இது குறித்து விசாரணை நடத்தி உண்மையைக் கண்டறிய நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (த-வ-5)

## சாதாரண

ஆசிரியர் சங்கம் வெளியிட் டுள்ள செய்திக் குறிப்பிலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-
போர்க் காலங்களிலும், அதற்குமுன்னரும் வடக்கு - கிழக்கு மாகாணங்களின் கல்வித் தரம் உயர்ந்தே காணப்பட்டது. இதற்கான சரியான அளவு கருவியாக ஜி.சி.ஈ சாதாரண தரப் பரீட் சையை மட்டுமே கொள்ள முடியும். தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையையோ, ஜி.சி.ஈ உயர்தரப் பரீட்சையையோ கொள்ள முடியாது. ஜி.சி.ஈ உயர்தர பரீட்சையின் சித்திக்குப் பல காரணிகள் உள்ளன. ஆனால் ஜி.சி.ஈ சாதாரண தரச் சித்திக்குத் தனியே பாடசாலைக் கல்வியை மட் டுமே சொல்ல முடியும்.
ஜி.சி.ஈ உயர்தரம் கற்பதற்குத் தகுதி பெற்றோர் வரிசையில், யாழ்ப்பாண மாவட்டம் 21 ஆவது இடத்துக்குத் தள்ளப்பட்டிருப்பது அதிர்ச்சியும், வேதணையும்தரும் விடயமாகும். இதைவிட முதல் ஒன்பது இடங்களுக்குள் வடக்கு - கிழக்கு மாகாணங்களின் மாவட்டங்கள் எவையும் இடம்பெறவில்லை.
மன்னார் 10 ஆம் இடத்திலும், அம்பாறை 13 ஆம் இடத்திலும், வவுனியா 16 ஆம் இடத்திலும், மட்டக்களப்பு 17 ஆம் இடத்திலும், திருகோணமலை 23 ஆம் இடத்திலும், முல்லைத்தீவு 24 ஆம் இடத்திலும், கிளிநொச்சி 25 ஆம் இடத்திலும் உள்ளன.
இந்த தரவரிசையானது எப்போதும் நிகழாத ஒன்றாகவே காணப்படுகின்றது. தமிழர் பிரதேசங்களில் இத்தகைய நிலை ஏற்பட்டிருப்பதற்குப் பல காரணங்கள் இருந்தாலும், மாகாண மட்டத்தில் உள்ள பல குறைபாடுகள் அதற்கு முழுக்காரணமாக அமைகின்றன.
குறிப்பாக முறையற்ற ஆசிரியர் இடமாற்றங்கள், முறையற்ற அதிகாரிகளின் இடமாற்றங்கள், அரசியல் தலையீடுகள், கல்வியில் அநா வசியமான வெளியாரின் தலையீடுகளும் அடங்குகின்றன. இவற் றைவிடக் கல்வி அதிகாரிகள், அதிபர்கள், ஆசிரியர்களின் சுயமான சிந்தனைக்கு ஏற்படுத்தப்படும் முட்டுக்கட்டைகள், இவையே இன்றைய வீழ்ச்சிக்குக் காரணமாக அமைகின்றன.
இவை எல்லாவற்றையும் விட வடக்கு-கிழக்கு மாகாணங்கள் கல்வியில் திட்டமிட்டு அழிக்கப்படுகின்றன என்ற உண்மையை நாம் அனைவரும் உணர வேண்டும். இன்னும் வெளிப்படுத்த முடியாத அபாயகரமான நிலைமைகள் உள்ளன என்பதை இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் எச்சரிக்கையுடன் சுட்டிக்காட்டி நிற்கின்றது - என்றுள்ளது. (த-வ-5)

## நாடு முழுவதும்

இவ்வாறு தெரிவித்தார் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவான் குணசேகர.
வவுனியாவில் உள்ள வர்த்தக நிலையங்களில் உள்ள பணியாளர்களின் பெயர் விவரங்கள் வவுனியா பொலிஸாரால் பதிவு செய்யப்படுவதாக, வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர்.
இது தொடர்பில் பொலிஸ் ஊடகப் பேச்சாளருடன் தொடர்பு கொண்டு கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.
வவுனியாவில் உள்ள வர்த்தக நிலையங்களுக்குச் சென்று அங்கு பணிபுரிபவர்களின் விவரங்களைப் பொலிஸார் திரட்டி வருகின்றனர்.
வியாபார நிலையங்களில் பணிபுரியும் ஊழியர்களின் பெயர், விலாசம், அடையாள அட்டையின் இலக்கம், வியாபார நிலையத்தில் எவ்வளவு காலம் பணிபுரிந்து வருவது போன்ற விவரங்களைப் பொலிஸார் அவர்களது விவரப் புத்தகத்தில் பதிந்து எடுத்துச் செல்கின்றனர் என வவுனியா வர்த்தகர்கள் உதயனிடம் தெரிவித்தனர்.
இது தொடர்பில் பொலிஸ் ஊடகப் பேச்சாளருடன் தொடர்பு கொண்டபோது,
இந்தச் செயற்பாடுகள் இலங்கை பொலிஸ் திணைக்களத்தினால் சட்ட பூர்வமாகவே மேற்கொள்ளப்படுகின்றன. வவுனியாவில் மட்டுமல்ல, நாட்டில் அனைத்துப் பகுதிகளிலும் இது போன்ற பதிவுகள் இடம்பெறுகின்றன. வர்த்தக நிலையங்கள் மட்டுமல்லாது, ஒவ்வொரு வீடுகள் தோறும் பொலிஸார் வந்து குடும்ப விவரங்கள் பற்றிய பதிவுகளை மேற்கொள்வார்கள். நாட்டினுடைய பாதுகாப்புக் காரணங்களுக்காகவே குறித்த பதிவுகள் மேற்கொள்ளப்படுகின்றன - என்றார்.
(த-வ-21-ரி4)

## மரண அறிவித்தல்

### திருநாவுக்கரசு திலீபன்



இமயாணன் அறிவாலயத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருநாவுக்கரசு திலீபன் 28.03.2016 திங்கட்கிழமை மலேசியாவில் காலமானார்.
அன்னார் காலஞ்சென்ற திருநாவுக்கரசு மற்றும் ஜானகி தம்பதியரின் அன்பு மகனும் ஜனகன் ( சட்டத்தரணி ), காயத்திரி (ஆசிரியர்), துவாரகா ஆகியோரின் பாசமிகு சகோதரனும் தாமரவருணி, ரதீஸ்வரன் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆருத்திராவின் சித்தப்பாவுமா வார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் 02.04.2016 சனிக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 03.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக வல்லை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**அறிவாலயம்
இமயாணன் கிழக்கு,
உடுப்பிட்டி.**

தகவல்:
**குடும்பத்தினர்.
076 6791350**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யங்ஹென்றிஸ், சென்.அன்ரனிஸ் அணிகள் முன்னேறின திக்கம் இளைஞரின் தொடரில்



கரணவாய், ஏப். 1
திக்கம் இளைஞர் வி.கழகம் நடத்திவரும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டங்களில் இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக்கழகம் மணற்காடு சென்.அன்ரனிஸ் விளையாட்டுக் கழகம் என்பன வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்களுக்கு முன்னேறின.

**சென்.அன்ரனிஸ் - சிறி அம்பாள்**
திக்கம் இளைஞர் கழக மைதானத்தில் முதலாவதாக இடம் பெற்ற ஆட்டத்தில் மணற்காடு சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகமும் நாச்சிமார் கோயிலடி சிறி அம்பாள் விளையாட்டுக்கழகமும் பலப்பரீட்சை நடத்தின. ஆட்டத்தின் 9 ஆவது நிமிடத்தில் அன்ரனிஸ் சார்பாக சுஜீபன் முதல் கோலைப் பதிவு செய்தார். 11 ஆவது நிமிடத்தில் கிடைத்த வாய்ப்பை சிறி அம்பாள் அணி கச்சிதமாகப் பயன்படுத்த ஆட்டம் சமநிலையானது. வேறெந்த கோல்களும் பதியப்படாத நிலையில் முடிவடைந்தது முதல் பாதி. இரண்டாம் பாதியில் இரு அணிகளும் கிடைத்த சில வாய்ப்புக்களையும் வீணாக்க கோல் கணக்கில் மாற்றம் இல்லாமல் நகர்ந்து கொண்டிருந்தது ஆட்டம். இறுதி 2 நிமிடங்கள் இருக்கும் போது அலெக்ஸ் அடுத்தடுத்து 2 கோல்களைப் பதிவுசெய்ய 3:1 என்ற கோல் கணக்கில் வென்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியது மணற்காடு சென். அன்ரனிஸ்.

**இமையாணன் மத்தி - யங்ஹென்றிஸ்**
தொடர்ந்து இடம்பெற்ற இரண்டாவது ஆட்டத்தில் இமையாணன் மத்திய விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழகம் மோதியது. ஆட்டத்தை தமது முழுமையான கட்டுப்பாட்டில் வைத்திருந்த யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழகம் 6:0 என்ற கோல் கணக்கில் பெரு வெற்றி பெற்று அடுத்தச் சுற்றுக்கு முன்னேறியது. (ம-108)



## கிண்ணம் வென்றது சுப்பர் ராங்

யாழ்ப்பாணம், ஏப். 1
புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான கால்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டத்தில் மல்லிகைத்தீவு சுப்பர்ராங் விளையாட்டுக் கழக அணி சம்பியனானது.
புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி மைதானத்தில் கடந்த திங்கட்கிழமை இடம் பெற்ற இந்த ஆட்டத்தில் மல்லிகைத் தீவு சுப்பர்ராங் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மன்னாகண்டல் வளர்மதி விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது. இதில் மல்லிகைத்தீவு சுப்பர்ராங் விளையாட்டுக்கழக அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றுச் சம்பியனானது. (ம-23-102)

## அல்மாதர் - யங்ஸ்ரார் நாளை பலப்பரீட்சை

யாழ்ப்பாணம், ஏப். 1
வவுனியா அல்ஹிஜிரா விளையாட்டுக்கழகம் வவுனியா கால்பந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் கழகங்களுக்கு இடையில் நடத்தும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் வவுனியா முஸ்லிம் மகா வித்தியாலய அஸ்ரப் ஞாபகார்த்த மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் நாளை சனிக்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் அல்மாதர் அணியை எதிர்த்து யங்ஸ்ரார் அணி மோதவுள்ளது. (ம-23)

## வென்றது வளர்மதி

யாழ்ப்பாணம், ஏப். 1
தெல்லிப்பழை நாமகள் சனசமூக நிலையத்தின் 53ஆவது ஆண்டுநிறைவை முன்னிட்டு தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக்கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் மூளாய் வளர்மதி அணி வெற்றிபெற்றுள்ளது.
நாமகள் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் ஊர்காவற்றுறை சென். ஜேம்ஸ் அணியை எதிர்த்து மூளாய் வளர்மதி அணி மோதிக் கொண்டது. இதில் இரண்டு அணியினரும் ஆட்ட நேர முடிவில் தலா ஓர் கோலைப் பெற்றமையால் சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது. இதில் மூளாய் வளர்மதி அணி 4:3 என்றகோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)

## சம்பியனானது மாலுசந்தி மைக்கல் கரவெட்டிப் பிரதேச விளையாட்டில்

கரணவாய், ஏப்.1
கரவெட்டி பிரதேசத்தின் வருடாந்த விளையாட்டு விழாவில் 55 புள்ளிகளைப் பெற்று நடப்பு வருடத்தின் பிரதேச சம்பியனாகியது மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக்கழகம்.
கரவெட்டி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான விளையாட்டு விழாவின் இறுதி நாள் நிகழ்வுகளும் பரிசளிப்பு நிகழ்வுகளும் நெல்லியடி மத்திய கல்லூரி மைதானத்தில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றன.
ஒட்டுமொத்த புள்ளிகளின் அடிப்படையில் 55 புள்ளிகளுடன் மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகம் சம்பியன் கிண்ணத்தைத் தனதாக்கியது.
வதிரி டயமன்ஸ் விளையாட்டுக்கழகம் 51 புள்ளிகளைப்பெற்று இரண்டாமிடத்தைப் பெற்றது.
ஆண்களுக்கான தடகளத் தொடரில் 31 புள்ளிகளைப் பெற்று அண்ணா சிலையடி விளையாட்டுக்கழகம் முதலாமிடத்தையும் 27 புள்ளிகளைப் பெற்று மைக்கல் விளையாட்டுக்கழகம் இரண்டாமிடத்தையும் கைப்பற்றின. பெண்கள் பிரிவில் சிவகுமரன் விளையாட்டுக் கழகம் முதலாமிடத்தையும் இரண்டாம் இடத்தை மைக்கல் விளையாட்டுக் கழகமும் பெற்றன.
சிறந்த வீரராகக் கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழக வீரர் எஸ்.மாதுஜனும் சிறந்த வீராங்கனையாக உடுப்பிட்டி சிவகுமரனைச் சேர்ந்த என்.றெக்சனாவும் தெரிவானார்கள்.
கரவெட்டிப் பிரதேச செயலர் சிவசிறி தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில், பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் எஸ்.செந்தில் நந்தனன் கலந்து கொண்டார். (ம-108)

## பிற்போடப்பட்டுள்ளன

மாங்குளம், ஏப். 1
எதிர்வரும் 9ஆம் திகதி கோண்டாவில் இராமகிருஷ்ணன் வித்தியாலயத்தில் நடைபெறவிருந்த யாழ். கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளுக்கு இடையிலான வலய மட்ட விளையாட்டு நிகழ்வுகள் பிற்போடப்பட்டுள்ளதாக யாழ். கல்வி வலய ஆரம்பப் பிரிவு விளையாட்டுச் செயற்றிட்ட இணைப்பாளர் சி.சிவகாந்தி அறிவித்துள்ளார்.
அதிகரித்த வெப்பநிலையின் தாக்கத்தின் காரணமாக கல்வி அமைச்சினால் பாடசாலைகளுக்கிடையிலான போட்டிகளை நிறுத்துமாறு அறிவிக்கப்பட்டதையடுத்தே போட்டிகள் பிற்போடப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். இந்தப் போட்டிகள் எதிர்வரும் மே மாதம் முன் அறிவித்தலுடன் நடைபெறும் .
இதைவிட, எதிர்வரும் 6ஆம் திகதி அரியாலை கால்பந்தாட்டப் பயிற்சி நிலையத்தில் நடைபெறவிருந்த 17 வயதுப் பிரிவினருக்கான கால்பந்தாட்டத் தொடர்கள் பிற்போடப்பட்டுள்ளதாக வடமாகாண கால்பந்தாட்ட இணைப்பாளர் அறிவித்துள்ளார். (ம-422)

## கிண்ணம் வென்றது சென்.ஜோசெப்

யாழ்ப்பாணம், ஏப். 1
மன்னார் பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான கால்பந்தாட்டத் தொடரில் சென்.ஜோசெப் அணி கிண்ணம் வென்றது.
தோட்டவெளி ஜக்கிய விளையாட்டுக்கழக மைதானத்தில் கடந்தவாரம் நடைபெற்ற இந்த இறுதியாட்டத்தில் சென்.ஜோசெப் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து சென்.லூட்சியா விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது. இதில் சென்.ஜோசெப் விளையாட்டுக்கழக அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றுச் சம்பியனானது. (ம-23)

## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஏப். 1
**அரியாலை கரப்பந்தாட்டத் தொடர்**
அரியாலை சுதேசிய திருநாள் கொண்டாட்டத்தை முன்னிட்டு யாழ். மாவட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையில் நடத்தும் கரப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் அரியாலை சரஸ்வதி சனச்மூக நிலைய கரப்பந்தாட்டத் திடலில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை இடம்பெறும் ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு: பி பிரிவு அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில் இரவு 7.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கைதடி வளர்மதி அணியை எதிர்த்து புத்தூர் தமிழ்மதி அணி மோதவுள்ளது. இரவு 8மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் அச்சுவேலி கலைமகள் அணியை எதிர்த்து உடுப்பிட்டி சிவகுமரன் அணி மோதவுள்ளது. 'ஏ' பிரிவு அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில் இரவு 8.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் அணியை எதிர்த்து யாழ். பல்கலைக்கழக அணி மோதவுள்ளது. (ம-23)

**நாமகள் வி.கழகத் தொடர்**
தெல்லிப்பழை நாமகள் சனசமூக நிலையத்தின் 53ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக்கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் நாமகள் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.
இந்தத் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மாதகல் புனித தோமையார் இளைஞர் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. தொடர்ந்து மாலை 4.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஏழாலை 5 ஸ்ரார் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (ம-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அசரெங்னா அசத்தல் ஆட்டம்

நடைபெற்றுவரும் மியாமி ரென்னிஸ் தொடரில் நேற்றுமுன்தினம் நடை பெற்ற பெண்கள் பிரிவு ஆட்டமொன்றில் நேர் செற் கணக்கில் வெற்றி பெற்று நான்காவது செற்றுக்கு முன்னேறியுள்ளார் அசரென்கா.

அசரென்காவை எதிர்த்து மோதினார் மக்டா லினெட். இந்த ஆட்டத்தின் முதல் செற்றை 6:3 என்று கைப்பற்றிய அசரென்கா, இரண்டாவது செற்றில் மிகப்பெரும் ஆதிக்கம் செலுத்தி அந்தச்செற்றையும் 6:0 என்று கைப்பற்றி 2:0 என்ற நேர் கணக்கில் வெற்றிபெற்று நான்காவது செற்றுக்குள் நுழைந்தார்.

அசரென்காவைத் தவிர ஏஞ்சலிக் கெர்பர், டிமா பாபோஸ், இரினா கேமலியா, கார்பின் முகுருசா, ஜோஹன்னா கொன்டா, மோனிகா நிகுலிஸ், மேடிசன் கீஸ் ஆகியோரும் நான்காவது சுற்றுக்குத் தகுதி பெற்றனர். (ம)





## இறுதியில் தடம் பதித்தது மேற்கிந்தியத்தீவுகள் எட்டக்கூடிய இலக்கை கோட்டை விட்டது நியூசி.

### கிண்ணத்துக்காக ஆஸியுடன் மோதல்

பெண்களுக்கான ரி-20 உலகக்கிண்ணத் தொடரில் நேற்று நடைபெற்ற இரண்டாவது அரையிறுதியில் 6 ஓட்டங்களால் நியூசிலாந்தை வீழ்த்தி இறுதிக்குத் தகுதி பெற்றது மேற்கிந்தியத் தீவுகள் அணி.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற நியூசிலாந்து முதலில் களத்தடுப்பைத் தெரிவுசெய்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி,கூப்பரின் அரைச்சதத்தின் உதவியுடன் 20 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 6 இலக்குகளை இழந்து 143 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக கூப்பர் 61 ஓட்டங்களையும், ரெய்லர் 25 ஓட்டங்களையும், டொற்றின் 20 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் நியூசிலாந்து அணியின் சார்பாக டிவைன் 4 இலக்குகளையும், நீல்சென் ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

பதிலுக்குக் களமிறங்கிய நியூசிலாந்துக்கு ஆரம்ப வீராங்கனைகள் தடுமாற்றம் காட்டினர். முன்வரிசையால் விடப்பட்ட பின்னடைவை இறுதிவரை சரி செய்ய முடியாமல் போக,நியூசிலாந்து அணி 20 பந்துப்பரிமாற்றங்கள் வரை தாக்குப் பிடித்த போதிலும், 8 இலக்குகளை இழந்து 137 ஓட்டங்களையே பெற்றது. அதிகபட்சமாக மக்கல்சன் 38 ஓட்டங்களையும், சட்டர்வேட் 24 ஓட்டங்களையும், டிவைன் 22 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் தீவுகளின் சார்பாக ரெயிலர் 3 இலக்குகளையும், கொண்னெல், பிளெட்சர், குவின்டைன் மூவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர். ஆட்டநாயகியாக கூப்பர் தெரிவானார். (ம)

### ஆர்ஜென்டினாவுக்காக 50 கோல்கள் மெஸ்ஸியின் மற்றுமொரு மைல்கல்

ஆர்ஜென்டினாவைச் சேர்ந்த முன்னணி கால் பந்து வீரரான மெஸ்சி, அந்நாட்டு தேசிய அணிக்காக 50 கோல்களைப் பதிவுசெய்துள்ளார்.

2018ஆம் ஆண்டு நடைபெறவுள்ள உலகக் கிண்ணக்கால்பந்துத் தொடருக்கான தகுதிச்சுற்று ஆட்டமொன்று ஆர்ஜென்டினாவில் நடைபெற்றது. இதில், ஆர்ஜென்டினா அணி பொலிவியாவை எதிர்கொண்டது. ஆட்டத்தின் 30ஆவது நிமிடத்தில் மெஸ்சி முதல் கோலைப் பதிவு செய்தார். இது ஆர்ஜென்டினா அணிக்காக அவர் அடித்த 50ஆவது கோல் ஆகும். இதுவரை 107 ஆட்டங்களில் விளையாடி,இந்தச் சாதனையை அவர் எட்டியுள்ளார். இந்த ஆட்டத்தில் ஆர்ஜென்டினா 2:0 என்று பொலிவியாவை வீழ்த்தியது. (ம)

## அம்லாவின் விருப்பம்

தென்னாபிரிக்க அணியில் இருந்து மூத்த வீரர்கள் விலகவுள்ளனர் என்று வெளியான செய்திகளை அனுபவ வீரரான அம்லா நிராகரித்ததுடன், இன்னும் பல வருடங்களுக்கு அணியில் தொடர ஆர்வமாக உள்ளதாகவும்வெளிப்படுத்தியுள்ளார்.

ரி-20 உலகக்கிண்ணத்தைக் கைப்பற்றும் முக்கியமான அணிகளுள் ஒன்றாகக் கருதப்பட்ட தென்னாபிரிக்க அணி, அரையிறுதிக்குத் தகுதி பெறாமல் வெளியாகியதைத் தொடர்ந்து, அந்த அணியின் மீது பலவிமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன. குறிப்பாக அணியின் மூத்த வீரர்கள் மீது விமர்சனங்கள் வந்து குவிந்தன. வில்லியர்ஸ் அதிக வேலைப்பளுவால் விலகவுள்ளார் என்றும் கருத்துக்கள் வெளியாகியிருந்த நிலையில், அம்லா அந்தக் கருத்துக்களை நிராகரித்துள்ளார்.

குறித்த விடயம் தொடர்பாக அம்லா தெரிவிக்கையில் - எங்களில் பலர், சர்வதேசக் கிரிக்கெட்டில் தொடர்ந்தும் விளையாடுவதற்கு மிகவும் ஆர்வமாக உள்ளனர். மூத்த வீரர்களால் இன்னும் சில ஆண்டுகள் விளையாட முடியுமென, எங்களில் பலர் நம்புகின்றனர். 2019ஆம் ஆண்டு நடைபெறவுள்ள உலகக் கிண்ணத் தொடரில் கலந்துகொண்டு எங்களால் சிறப்பாகச் செயற்பட முடியும். வில்லியர்ஸின் ஓய்வு தொடர்பாக வெளியான செய்திகள் அத்தனையும் வதந்தியே. அவரால் இன்னும் பல ஆண்டுகள் சிறப்பாகச் செயற்பட முடியும் என்றார். (ம)

## மக்களிடம் மன்னிப்புக் கேட்டார் அப்ரிடி ரி-20 உலகக்கிண்ணத்தின் தோல்விக்கு

ரி-20 உலகக்கிண்ணத் தொடரில் பாகிஸ்தான் அணியின் தோல்விக்கு அந்த அணியின் தலைவரான அப்ரிடி மன்னிப்புக் கேட்டுள்ளார்.

பாகிஸ்தான் பயிற்சியாளர் வக்கார் யூனிஸ், அணியின் மோசமான ஆட்டத்துக்காக மன்னிப்புக் கேட்டதைத் தொடர்ந்து, அணியின் தலைவர் என்ற ரீதியில் அப்ரிடியும் தற்போது மன்னிப்புக் கோரியுள்ளார்.

தனது டுவிற்றர் பக்கத்தில் ஒரு வீடியோ மூலம் பேசியுள்ள அப்ரிடி - 20 வருடங்களாக, என் நாட்டின் சின்னத்தை என் ஆடையில் தாங்கிக்கொண்டு விளையாடி வருகிறேன். நான் களத்தில் நுழையும்போது ஒட்டு மொத்த தேசத்தின் உணர்ச்சிகளையும் என்னுடன் வைத்துக் கொண்டே நுழைகின்றேன். இது வெறும் 11 வீரர்கள் கொண்ட அணி அல்ல. என் ஒட்டு மொத்த தேசத்தின் அணி. மற்றவர்கள் என்ன சொல்கிறார்கள் என்பது பற்றிக்கவலை இல்லை. ஆனால் நான் உங்களுக்குப் பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். இன்று, அப்ரிடியாகிய நான், பாகிஸ்தான் மக்களிடம் மன்னிப்புக் கோருகிறேன். நீங்கள் என் மீதும், அணியின் மீதும் வைத்திருந்த எதிர் பார்ப்பை நாங்கள் பூர்த்தி செய்யவில்லை என்று குறிப்பிட்டுள்ளார். (ம)






## பலமான அணியிடமே தோல்வியடைந்தோம் இங்கிலாந்து குறித்து வில்லியம்சன் கருத்து

ரி-20 உலகக்கிண்ணத் தொடரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற முதலாவது அரையிறுதி ஆட்டத்தில் இங்கிலாந்திடம் தோல்வியடைந்த பின்னர் கருத்துத் தெரிவித்த வில்லியம் சன், தாம் பலமான அணியிடமே தோல்வியடைந்ததாகத் தெரிவித்துள்ளார்.

தோல்வி தொடர்பாக வில்லியம்சன் மேலும் தெரிவிக்கையில் - சிறந்த அணியிடமே நாங்கள் தோற்றிருக்கின்றோம். இங்கிலாந்து அணி அனைத்துப் பாராட்டுதலுக்குமுரியதாகும். 180 ஓட்டங்களுக்கு மேல் எடுத்திருந்தால் சரியான ஆட்டத்தைக் கொடுத்திருப்போம். மத்திய வரிசைத் துடுப்பாட்டம் சிறப்பாக அமையவில்லை. றோயின் ஆட்டம் மிகவும் அதிரடியாக இருந்தது. ஆட்டம் முழுவதையும் தன் வசப்படுத்தி எங்களை வெளியேற்றிவிட்டார். எங்களது பந்துவீச்சாளர்களால் ஒன்றும் செய்ய முடியாத அளவுக்கு ஆக்ரோசமாக விளையாடினர் - என்றார்.

நியூசிலாந்து அணி ஒரு கட்டத்தில் 10.3 பந்துப்பரிமாற்றங்களில் 2 இலக்குகள் இழப்புக்கு 91 ஓட்டங்கள் என்ற வலுவான நிலையில் இருந்தது. இதை அந்த அணி தக்க வைத்துக் கொள்ளவில்லை. இதுவே நியூசிலாந்தின் தோல்விக்குப் பிரதான காரணம். (ம)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றது மேற்கிந்தியத் தீவுகள்

# இறுதிப் பந்துப்பரிமாற்றம் வரை போராடி வீழ்ந்தது இந்தியா

## கிண்ணத்துக்காக இங்கிலாந்துடன் மல்லுக்கட்டுகிறது



ரி-20 உலகக்கிண்ணத் தொடரில் நேற்று நடைபெற்ற இந்திய - மேற்கிந்தியத் தீவுகளுக்கு இடையிலான இரண்டாவது அரையிறுதியில் 7 இலக்குகளால் வெற்றி பெற்ற மேற்கிந்தியத் தீவுகள் இங்கிலாந்துடன் இறுதியில் பலப்பரீட்சை செய்யத் தகுதி பெற்றது.

இந்திய அணியில் இரு மாற்றங்கள் செய்யப்பட்டிருந்தன. காயத்தால் யுவராஜ் வெளியேற அவருக்குப் பதிலாக பாண்டே அணியில் இணைக்கப்பட்டார். கடந்த ஆட்டங்களில் தவானின் தடுமாற்றத்தைக் கருத்திற்கொண்டு அவர் நீக்கப்பட்டு பதில் வீரராக ரகானே இணைக்கப்பட்டிருந்தார். நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற மேற்கிந்தியத் தீவுகள் முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தது. ஆரம்ப வீரராக ரோகித் மற்றும் ரகானே. இலக்குச் சரிவில்லாமல் 50 ஓட்டங்களை எட்டியது இந்தியா. 43 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் ரோகித். களமிறங்கினார் கோக்லி. கோக்லியின் ரண் அவுட் வாய்ப்பை கோட்டை விட்டனர் ரம் டினும் பிராவோவும். ஒரு ஓட்டம் பெறப்பட வேண்டிய இடத்தில் இரு ஓட்டங்களை எடுத்து தீவுகளின் களத்தடுப்பை திசை திருப்பினர். இலக்குகள் இழப்பில்லாமல் நூறு ஓட்டங்களை எட்டியது இந்திய அணி. 40 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் ரகானே. இதற்காக அவர் 35 பந்துகளை எடுத்துக் கொண்டார். மொத்தத்தில் ரகானேயால் இன்னும் பத்து ஓட்டங்கள் அதிகமாகக் கிடைத்திருக்க வேண்டும். 33 பந்துகளில் அரைச்சதம் கடந்தார் கோக்லி. கோக்லி, டோனி இணையின் பின்வரிசை மிரட்டல் நேற்றும் இடம்பெற்றது. முடிவில் இந்தியா 192-2. கோக்லி 89 ஓட்டங்களுடனும், டோனி 15 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காது களத்தில் நின்றனர்.

பந்துவீச்சில் மேற்கிந்தியத் தீவுகளின் சார்பாக ரசல், பத்ரி இருவரும் தலா ஓர் இலக்கை வீழ்த்தினர்.

பதிலுக்கு களமிறங்கியது மேற்கிந்தியத் தீவுகள். ஆரம்ப வீரர்களாக சாள்ஸ் மற்றும் கெயில். அறிக்கைகளை அள்ளி விளாசிய கெயிலை வெறும் ஐந்தே ஓட்டங்களுடன் போல்ட் செய்தார் பும்ரா. சாமுவேல்ஸை பவிலியனுக்கு அனுப்பினார் நெக்ரா. சிம்மொன்ஸ், சாள்ஸ் இணை இந்தியாவின் வயிற்றில் புளியைக் கரைத்தது. 23 ஓட்டங்களுடன் சிம்மொன்ஸ் ஆட்டமிழந்திருக்க வேண்டியவர் அஸ்வின் அந்தப் பந்தை முறையற்ற பந்தாக வீசியதால் தொடர்ந்தும் களத்தில் அனுமதிக்கப்பட்டார். மூன்றாவது இலக்கை இழக்காமல் நூறு ஓட்டங்களை எட்டியது தீவுகள். 54 ஓட்டங்களுடன் மீண்டும் ஒரு முறை சிம்மொன்ஸை அதிஸ்டம் தேடி வந்தது. அஸ்வினிடம் பிடிகொடுத்தாலும் அந்தப் பந்தை பாண்டியா முறையற்ற பந்தாக வீசியதால் தீவுகளின் இன்னிங்ஸை தொடர்ந்தும் முன்னெடுத்தார். 52 ஓட்டங்களுடன் சாள்ஸை ஆட்டமிழக்கச் செய்தார் கோக்லி. இந்த இலக்குச் சரிவால் தீவுகளின் ஆட்டம் திசை மாறவில்லை. சாள்ஸை விட அதிரடி காட்டினார் ரசல். இறுதி இரு பந்துப்பரிமாற்றங்களில் 20 ஓட்டங்களைப் பெற வேண்டும் என்ற நிலைமை. பாண்டியா, பும்ரா, நெக்ரா மூவரினதும் பந்துப்பரிமாற்றங்கள் முடிவடைந்திருந்தன. இதனால் பந்து ஜடேயாவின் கைகளுக்குள் சென் றது. அந்தப் பந்துப்பரிமாற்றத்தில் 12 ஓட்டங்கள் பெறப்பட்டன. கோக்லி வீசிய இறுதிப் பந்துப்பரிமாற்றத்தில் 2 பந்துகள் மீதமிருக்க ஆட்டத்தை வெற்றியுடன் முடித்தது மேற்கிந்தியத் தீவுகள்.

பந்துவீச்சில் இந்திய அணியின் சார்பாக கோக்லி, நெக்ரா, பும்ரா மூவரும் தலா ஓர் இலக்கை வீழ்த்தினர். சிம்மொன்ஸ் ஆட்டநாயகனானார். (ம)

இந்தியன் றெறாசோ சிப்ஸ்
விற்பனை ரூபா 1200/=
றெறாசோ வேலைகள் செய்து தரப்படும்
"மாபிள்ஸ்"
சுழிபுரம் பத்திரகாளி கோயில் சந்தி, கண்டாமை, தொல்புரம்.
077 9541877, 077 355 3372

German Institute
German, Swiss, Ostria
நாடுகளுக்கான Deutsch
மொழி வகுப்புக்கள் தமிழ் மொழி
பெயர்ப்புக்களுடன் நடைபெறுகிறது.
10, Palaly road, Jaffna.
T.P 077 160 4823

METROH தொழில்நுட்பக் கல்லூரி
பொருளியற் கல்லூரியின் இணை நிறுவனம்
நாவலர் றோட், யாழ்ப்பாணம்.
A/L 2018
தொழில்நுட்பப் பிரிவு
புதிய பிரிவு ஆரம்பம்
02.04.2016 சனி 8.00 am
சகல பாடங்களும்
ஆரம்பத்திலிருந்து கற்பிக்கப்படும்.
Note: தனியார் கல்வி நிறுவனங்களில் A/L 2015 இல் மிக குறைந்த மாணவர்கள் சித்தியடைந்தமை பத்திரிகை விளம்பரங்கள் ஊடாக நீங்கள் அறிந்திருப்பீர்கள். இக்குறைபாட்டை தீர்க்க கூடுதலான மாணவர்கள் இனிமேல் சித்திபெறுவதற்காக வடபகுதியில் உள்ள தொழில்நுட்பக்கல்லூரி விரிவுரையாளர்களும் பிரபல பாடசாலை ஆசிரியர்களும் ஒன்றிணைந்து சேவையாற்ற உள்ளார்கள். A/L 2018 மாணவர்கள் இப் புதிய பிரிவுக்கு உங்கள் அனுமதிகளை தாமதியாது அன்று பெற்றுக் கொள்ளவும்.
★ A/L 2016. 2017 புதிய மாணவர்களும் அனுமதிகளை பெற்றுக்கொள்ள முடியும்.
★ உங்கள் அனுமதிகளை பொருளியற்கல்லூரி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளவும்.
(C/22403)(10.17.18)

O/L Day Class
பகல் நேர வகுப்புக்கள்
8 மாத துரித மீட்டல் வகுப்பு அமைதியான சூழலில் உயர்தர பெறுபேறுகளுக்கு உறுதுணையான நிறுவனத்தில்
ஏப்ரல் 04 இல் ஆரம்பம்
The Express Institute
Irupalai, Kopay.

NEC
பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி.
மணிக்கூட்டு வீதி, யாழ் நகர்.
A/L 2018
கலை, வர்த்தகம், தொழில்நுட்ப பிரிவுகள்
புதிய பிரிவு ஆரம்பம்
02.04.2016 சனி 9.00 மணி
ஆரம்ப அலகில் இருந்து கற்பிக்கப்படும்.
T.P: 077 4696695

BARATHY
கல்வி நிறுவனம்
சித்தன்கேணி
A/L 2018
கலை, வர்த்தகப் பிரிவு
ஆரம்பம் 02.04.2016
சனிக்கிழமை
நீங்கள் நன்கு அறிந்த பிரபல்யம் பெற்ற பேராசான்களினால்

| | |
|---|---|
| பொருளியல் | Mr. மகேந்திரன் |
| கணக்கீடு | Mr. திருக்குமரன் |
| வணிகக்கல்வி | Mr. பசில் |
| ICT | Mr. தேவதர்ஷன் |
| தமிழ் | Mr. பாலா |
| இந்துநாகரிகம்/சமயம் | Mr. N.T. தரன் |
| புவியியல் | Mr. குமரன் |
| வரலாறு | Mr. சுதன் |
| அரசியல் | Mr. கோகுலன் |
| அளவையில் | Mr. E.S. பவன் |
| நாடகமும் அரங்கியலும் | Mr. ஜெயசுதன் |
| ஊடகவியல் | Mr. கஜீதரன் |
| கிறிஸ்தவம் | Mr. வசந்தன் |
| விவசாயம் | Mr. சிவசஞ்ஜீபன் |
| ஆங்கிலம் | Mr. நிஷாந்தன் |

சகல பாடங்களும் ஆரம்பத்திலிருந்து கற்பிக்கப்பட உள்ளதால் உங்கள் அனுமதிகளை தாமதியாது பெற்றுக்கொள்ளுங்கள்
(C/22401)(10.17.18)

பொருளியற் கல்லூரி
நாவலர் றோட், யாழ்ப்பாணம்.
K.K.S றோட், இணுவில்.
(இரு இடத்திலும்)
A/L 2018
கலை, வர்த்தகம்
நீங்கள் நன்கு அறிந்த யாழ் மாவட்டத்தின் முன்னணி ஆசிரிய குழுவினால்
பிரிவு II ஆரம்பம் 02.04.2016

| | |
|---|---|
| பொருளியல் | மகேந்திரன் |
| கணக்கீடு | முகுந்தன் |
| வணிகக்கல்வி | பிரதீபன் |
| தமிழ் | சத்திய வேந்தன் |
| இந்து நாகரிகம் | ஜோதீஸ்வரன் |
| | N.T தரன் (இணுவில்) |
| புவியியல் | P.S குமரன் |
| வரலாறு | K சுதன் |
| அரசியல் | கோகுலன் |
| நாடகம் | ஜெயசுதன் |
| அளவையியல் | ஜெயசுரேஷ் |
| கிறிஸ்தவம் | வசந்தன் |
| கி.நா | |
| ICT | அம்பி |
| | தேவதர்ஷன் (இணுவில்) |
| ஊடகவியல் | கஜிதரன் |
| இந்து சமயம் | N.T தரன் |
| விவசாயம் | சிவசஞ்ஜீபன் |
| ஆங்கிலம் | நிஷாந்தன் |
| சங்கீதம் | குமுதினி |
| சித்திரம் | சிறீஸ் |
| மனைப் பொருளியல் | றஜிதா |

யாழ்நகர்: 8.00am
இணுவில்: கலைப்பிரிவு 8.00am, வர்த்தகப்பிரிவு 2.00pm
(C/22402)(10.17.18)
சகல பாடங்களும் ஆரம்பத்திலிருந்து கற்பிக்கப்பட உள்ளதால் உங்கள் அனுமதிகளை தாமதியாது உடன் பெற்றுக் கொள்ளவும்.

# ஜூனில் களமிறங்குகிறார் ஸ்ராக்

ஆஸ்திரேலிய அணியின் வேகப்பந்து வீச்சாளர் மிச்செல் ஸ்ராக், எதிர்வரும் ஜூன் மாதத்தில் இடம் பெறவுள்ள முத்தரப்புத் தொடர் ஒன்றுக்காகக் களமிறங்கவுள்ளார்.

நியூசிலாந்துக்கு எதிராகக் கடந்த ஆண்டு நவம்பரில் இடம்பெற்ற டெஸ்ட் தொடரில் இறுதியாகப் பங்குபற்றியிருந்தார் ஸ்ராக். அதன்பின்னர், அவரது காலில் ஏற்பட்ட உபாதைக்கு, சத்திர சிகிச்சை செய்து கொண்டார். இதனால் இந்தியாவில் இடம் பெற்று வரும் ரி-20 உலகக் கிண்ணத் தொடரிலும் அவர் பங்குபற்றியிருக்கவில்லை. இந்த நிலையில், மேற்கிந்தியத்தீவுகள், தென்னாபிரிக்கா, ஆஸ்திரேலியா அணிகள் பங்குபற்றும் முத்தரப்பு ஒருநாள் தொடர், ஜூன் 3ஆம் திகதி ஆரம்பிக்கவுள்ளது. இந்தத் தொடருக்கான ஆஸ்திரேலிய அணியிலேயே ஸ்ராக் தெரிவாகியுள்ளார்.

முத்தரப்புத் தொடருக்கான ஆஸ்திரேலிய அணியின் விவரம் - ஸ்ரீவ் சிமித் (தலைவர்), டேவிட் வோர்ணர், ஜோர்ஜ் பெய்லி, நைல், பல்க்நெர், ஆரொன் பின்ஞ், ஜோன் கஸ்டிங்ஸ், கசில்வூட், ஹெட், உஸ்மான் கவாஜா, லையன், மார், கிளென் மக்ஸ் வெல், ஸ்ராக், மத்தியூ வேட், அடம் சாம்பா. (ம)

# அரையிறுதியில் ஜோகோவிக்



நடைபெற்றுவரும் மியாமி ரென்னிஸ் தொடரின் அரையிறுதி ஆட்டத்துக்கு உலகின் முதல் தர வீரரான ஜோகோவிக் தகுதி பெற்றுள்ளார்.

ஜோகோவிக்கை எதிர்த்து மோதினார் ஏழாம் நிலை வீரரான பெர்டிச். ஆட்டத்தின் முதல் செற்றை 6:3 என்ற அடிப்படையில் கைப்பற்றிய ஜோகோவிக், தொடர்ந்தும் ஆதிக்கம் செலுத்தி இரண்டாவது செற்றையும் 6:3 என்ற புள்ளிகளின் அடிப்படையில் தனதாக்கி 2:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதிக்கு முன்னேறினார். அரையிறுதியில் ஜோகோவிக்கை எதிர்த்து கோபின் மோதவுள்ளார். (ம)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 01.04.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org